
@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

June 2018

Issue 1 | Price Rs 35 | Annual Subscription Rs 420

Rotary



## இந்திய
ரோட்டரி குறித்து
**உற்சாகம்**

TORONTO 2018

Rotary | ROTARY: MAKING A DIFFERENCE

# Join the Traditional South Asian Reception

## RI Convention, Toronto

Invite your global partners who support your service projects.
Bring your Rotary friends to show how Rotary works globally.
Opportunity to meet all the world leaders of Rotary.

**Venue:**
**The Ritz-Carlton Hotel**
Ball Room, 181, Wellington Street West, Toronto,
ON M5V 3G7, Canada. Tel: +1 416-585-2500



RID C. Basker
& Malathi Basker

**We cordially invite**
**the Rotary family of South Asia**
**to a traditional reception**
**on Saturday, June 23rd, 2018**
**at The Ritz-Carlton Hotel**
**between 5.00 pm - 7.00 pm**



Chairman - PDG R. Theenachandran
& Vasanthi Theenachandran

## Registration Fee: INR 5,000 / US $ 75 per person

Payment can be made by cheque payable at par or DD favouring
R. THEENACHANDRAN payable at MADURAI, TAMIL NADU and send to:

PDG R. Theenachandran, Chairman - South Asian Reception
Devi House, 281-4, Sivagangai Main Road, Gomathipuram, Madurai - 625020 Tamil Nadu, India.
Tel: +91 452 4370027, Mob: +91 94430 53301 E-mail: theena3000@gmail.com




**12** நன்கொடை அளிப்பதில் முதலிடம் பிடிக்க இந்தியா தயாராகி விட்டது

*சர்வதேச ரோட்டரி சங்கத் தலைவராகப் பொறுப்பேற்கும் பேரி ரஸ்ஸின் அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்தபோது, அவருடன் சாதாரண முறையில் நடைபெற்ற உரையாடல்.*





**30** மும்பையிலும், கோல்கத்தாவிலும் களைகட்டிய இரண்டு நிகழ்ச்சிகள்!

*சர்வதேச ரோட்டரி இயக்குநராக நியமனம் பெற்ற பரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோருக்கு மும்பையிலும் கொல்கத்தாவிலும் பாராட்டு விழா நடத்தப்பட்டது.*





**54** ரோட்டரி ஒரு உன்னதமான மனிதாபிமானிக்கு மரியாதை செய்தது

*சமுதாய சேவை, கிராம மேம்பாடு ஆகியவற்றுக்கான ஆதித்ய பிர்லா ஃபவுண்டேஷன் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா ரோட்டரி இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு திட்டத்தில் சிறந்த வகையில் சேவை புரிந்ததைப் பாராட்டும் வகையில் ஒரு விழா மும்பையில் நடத்தப்பட்டது.*


# உள்ளே


**22** சிறிய நகரம் பெரிய திட்டங்கள்

*பொதுமக்களிடையே ரோட்டரியின் புகழ் வளரும் வகையில் ரட்லம் ரோட்டரி சங்கம் பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகிறது.*

**38** சார்லஸ் கெல்லர் — ஒரு முழுமையான மனிதர்

*1987 முதல் 1988 வரை ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக இருந்த சார்லஸ் சி. கெல்லர் கடந்த மே 9ம் தேதி மறைந்தார். அவருக்கு ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜேந்திரா கே சாபூ அஞ்சலி செலுத்தினார்.*





**46** RIPE பேரி ரஸின் ரோட்டராக்டர்கள் - ஓர் சந்திப்பு

புதிய RI தலைவர் மும்பையில்நடைபெற்ற மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசி உற்சாகம் ஊட்டினார்.

**48** எண்ணிக்கையை நோக்கி நாம் ஓட வேண்டாம்: RI இயக்குநர்

*ரோட்டரி ஃபவுண்டேஷன், ரோட்டரி உறுப்பினர் சேர்க்கை மற்றும் பொதுமக்களிடையே பிரபலமாக்குவது தொடர்பாக மண்டலத் தலைவர்களுக்காக சென்னையில் நடைபெற்ற பயிலரங்கில் ரோட்டரியின் மூத்த தலைவர்கள் உரையாற்றினர்.*

**60** D3232ன் துணிச்சல்மிக்க பெண் தலைவர்கள்

*ரோட்டரி 3232 மாவட்டம் சார்பில் பெண் தலைவர்களுக்காக பாராட்டு விழா நடைபெற்றது.*





**68** *மனசுக்குள் ஆழ்ந்திடுவோம்!*

*மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, மன அமைதி பெறுவதற்கான ஓர் கட்டுரை.*


**அட்டையில்:** சென்னையில் RIPE பேரி ரெஸின்.

**படங்கள்:** ரஷீதா பகத்

## காலத்திற்கேற்ற தலையங்கம்; சிறந்த பதிப்பு

இந்தியப் பெண்களுக்கு ஒரு சவால் என்ற தலையங்கம் உண்மையைப் பிரதிபலிக்கிறது மற்றும் அது நம்முடைய பண்டைய இந்தியப் பாரம்பரியத்துக்கும் பாலின சமத்துவத்துக்கும் ஒரு கரும் புள்ளியாகும்.

அந்நிய நாட்டினர், இந்திய ஆண்களுக்கு என்ன பிரச்சினை என்று கேள்வி கேட்டு, பெண்களுக் கான பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டது என்று சந்தேகத்தை தெரிவிப்பது வருத்தமான விஷயம். பொறுப்பான சமுதாயத்திற்காக சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

RIPE பேரி ராஸின், நாம் எவ்வாறு சந்திக்கிறோம் என்பதை மட்டுமல்லாமல், நாம் உதவும் குழந்தைகள், உருவாக்கும் பள்ளிகள், உதவும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் புகைப்படங்களை ரொட்டேரியன்கள் வெளியிட வேண்டும். ரோட்டரிக்கான தொலைநோக்குப் பார்வையைத் இது தெரிவிக்கிறது மற்றும் கட்டாயம் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

ராஜஸ்தானில் உள்ள RC பிகானேர் மருதாரா உறுப்பினர்களின் சேவைத் திட்டங்களைப் பற்றியும், தாகமான பறவைகளுக்கு ஒரு ரோட்டரியின் முயற்சி கட்டுரையை படித்ததில் மகிழ்ச்சியடைந்தேன். கடுமையான கோடை காலத்தில் பறவைகளின் தாகம் தீர்க்க தண்ணீர் கொடுக்கிறார்கள். பாராட்டுகள், மற்ற சங்கங்களும் பின்பற்றவேண்டும்.

திருவனந்தபுரத்தில் உள்ள




எனது அடுக்கு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடியில் கோடை காலத்தில் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி பறவைகளுக்காக வைக்கிறேன் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பெரும்பாலும் அனைத்துக் கட்டுரைகளும் சுவாரசியமானதாக இருக்கின்றன மற்றும் வருகிற காலத்திலும் ஆசிரியர் குழு தொடர்ந்து சிறந்த செய்திகளை வெளியிட முயற்சிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

*M T பிலிப், RC திருவனந்தபுரம் புறநகர் — D 3211*

ரோட்டரி செய்திகள் இதழை ஒரு தளமாகப் பயன்படுத்தி, மிக முக்கிய தகவல்களைக் கொடுத்து, படிப்பவர்கள் அதை உணர்ந்து ‘செயல்பட வைக்கின்ற’ உங்களுடைய சிறப்பான பணிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரோட்டரி பாரம்பரிய எல்லைகளைக் கடந்து நட்சத்திரங்களையும் பிரபலங்களையும் நம்முடன் தொடர்புக்கொள்ள வைத்தது ஒரு ரொட்டேரியனாக எனக்கு மிகவும் திருப்தியையும் சந்தோஷத்தை கொடுக்கிறது.

ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா உடன், RIPE பேரி ராஸின் சந்திப்பு பற்றிய புகைப்படத்துடன் கூடிய கட்டுரையைப் பார்த்தேன். அவர் உண்மையிலேயே ஒரு ஆற்றல்மிக்க பெண்மணி. உங்கள் தலையங்கம் பெண்களிடம் இருக்கும் மகத்தான ஆற்றலைப் பற்றிய நம் உணர்வை பிரதிபலிப்பதாக இருக்கிறது, மற்றும் இந்த சந்திப்பிற்கு இது மிகப் பொருத்தமானது. எங்கள் சங்கம் தொடர்ந்து பெண் உறுப்பினர்களை சேர்ப்பதில் கவனம் செலுத்து கிறது, நாங்கள் செய்யும் சேவை திட்டங்களில் அவர்கள் துர்கா தேவி மற்றும் சக்தி தேவியின் ஆற்றலாக பிரதிபலிக்கிறார்கள்.

*மனோஜ் காப்ரி, RC பெங்களூர் ஒயிட்ஃபீல்ட் சென்ட்ரல் — D 3190*

உங்கள் சக்திவாய்ந்த எழுத்துக்கும், காலத்திற்கேற்ற தலையங்கத் திற்கும் பாராட்டுக்கள். தில்லி தெற்கு ரோட்டரி சங்கமாகிய நாங்கள், பெண்கள் மேம்பாட்டை நம்புகிறோம். எங்கள் சங்கம் ஐந்து தொழில் பயிற்சி மையங்களை அமைத்து நடத்துகிறது. இது வன்முறை சக்திகளுக்கு எதிராக எழுந்து நின்று குரல் கொடுக்கும் நம்பிக்கையையும் தைரியத்தையும் பெண்களுக்கு கொடுக்கிறது.

*சோம் துவா, தில்லி தெற்கு ரோட்டரி சங்கம் — D 3110*

## வளர்ச்சியில் தேக்கநிலை

RID ஜான் மேத்யூ நேர் காணல் ஊக்கமளிப்பதாக வும், உறுப்பாண்மையைத் தக்கவைத்துக் கொள்வதற் கான உத்திகள் பற்றிய அவரது அவதானிப்பு சிறப்பாக இருந்தது. நமது உறுப்பினர் எண்ணிக்கை 1.2 மில்லியனில் தேங்கி யிருக்கிறது என்ற அவரது வெளிப்படையான கருத்துக்கள், சிந்திக்கப்பட வேண்டிய விஷயம்.

இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு முக்கியத் துவம் அளிப்பதன் மூலம் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் எளிமையான, உத்திகளை உருவாக்குவதற் காக, ரோட்டரி தலைவர்கள் எண்ணிக்கை புரிந்து செயல்பட வேண்டும். தற் போதுள்ள உறுப்பினர்ளுக்கு வழிகாட்டுதல் மற்றும் அங்கீகரிப்பதன் மூலம் தக்க வைக்க வேண்டும்.

*R முரளி கிருஷ்ணா RC பேரம்பூர் — D 3262*

## PDG பல்லா என்ற எழுத்தாளரை வெளிச்சம் காட்டியது

ரஷீதாவால் எழுதப்பட்டு *N* கிருஷ்ணமூர்த்தி வடிவமைத்த ரோட்டரியும் எழுத்தும் அவரது பேரார்வம் என்ற கட்டுரை உண்மையை வெளிப்படுத்தும் விதத்தில்

*மே இதழில், வெவ்வேறு ரோட்டரி திட்டங்களை பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றிருந்தது. இந்தியப் பெண்களுக்கு ஒரு சவால் என்ற தலையங்கம் உண்மையிலேயே நெஞ்சை தைத்தது. "இந்திய ஆண்களுக்கு என்ன பிரச்சனை?... இந்தியாவில் பெண்கள் உண்மையிலேயே பாதுகாப்பாக இருக்கிறார்களா?" என்பது போன்ற, பத்திரிக்கையாளரின் கேள்விக்கணைகளை சுவிட்சர்லாந்தில் நீங்கள் சந்திக்க நேர்ந்தது அவமானப் படவேண்டிய விஷயம். ரொட்டேரியன்களாக குறிப்பிட்ட சமுதாயத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. சுகாதாரம், சுத்தமான குடிநீர், குறிப்பாக குழந்தைகள் தரையில் அமர்ந்து படிக்க தேவையில்லை என்பது போன்ற கட்டுரைகள், மனித சமுதாயத்திற்கு நமது அர்ப்பணிப்பு பற்றி சமூகத்துக்கு எடுத்துக் காட்டுகின்றன.*

*தம்தாரியில் நடைபெற்ற வெற்றிகரமான RAHAT கேம்ப், சமுதாயத்தை நோக்கிய நமது உறுதிப்பாட்டை சுட்டிக் காட்டுகிறது. சக ரொட்டேரியன்களின் கடினமாக உழைப்பை பார்ப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மொத்தத்தில் ரோட்டரி செய்திகள் குழுவிற்கு வாழ்த்துக்கள்.*

*PRN சந்திர மௌலி,*
*RC பேரம்பூர் மிட் டவுன் — D 3262*

...இருந்தது. PDG பிரேம் P பல்லா, 3080-ன் மிக மூத்த ரொட்டேரியன் ஆவார். நான் 1989லிருந்து ரொட்டேரியனாக இருப்பதால், பல வருடங்களாக எனக்கு தெரியும்.

கட்டுரையை படித்த பிறகு, அவரை அழைத்து பாராட்டினேன். அவரது ரோட்டரி செயல்பாடுகளை பற்றி நான் அறிவேன், அவர் எழுதிய பல புத்தகங்கள் மற்றும் செயல்பாடுகளை பற்றி ரோட்டரி செய்திகள் மூலமாகத் தான் தெரிந்து கொண்டேன். மூத்த ரோட்டரி தலைவர்களைப் பற்றி எழுதி எங்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள், அவர்கள் எங்களை ஊக்கப்படுத்துவதற்கான ஆதாரமாக விளங்குகிறார்கள்.

*Dr சுரேஷ் K சப்லோக்*
*RC நஹன் சிர்மோர் ஹில்ஸ் — D 3080*

## ரோட்டரி நியூஸில் எங்கள் திட்டங்களை பிரசுரிப்பதற்கு

1958ல் சாசனம் வழங்கப்பட்ட, ரோட்டரி மாவட்டம் 3142 பழமையான தானே ரோட்டரி சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர் நான். தானே நகரின் மேம்பாட்ட குடிமக்களில், 100 பேர் இதில் உறுப்பினர்கள், எங்கள் உறுப்பினர்கள் கடந்த காலத்தில் மேயர் போன்ற முக்கியப் பதவிகளை வகித்துள்ளனர். சங்கம் மேற்கொண்ட பல பெரிய திட்டங்கள், மாவட்ட ஆளுநர் மற்றும் பிற ரோட்டரி சங்கங்களால் பாராட்டப்பட்டது.

நான் ஒவ்வொரு மாதமும் ரோட்டரி செய்திகள் படிக்கிறேன், இந்தியாவில் ரோட்டரி செய்யும் நல்ல காரியங்களை, உலகம் முழுவதும் அனைவரும் தெரிந்து கொள்ள வழி வகுக்கிறது. ரோட்டரி இதழில் எங்கள் திட்டங்கள் இடம் பெறுவதைப் பற்றி ஆர்வமாக உள்ளேன். நம் இதழில் கட்டுரை இடம் பெறச் செய்வதற்கான நிபந்தனைகளை தெரியப்படுத்துங்கள்.

*ராமகிருஷ்ணன் சுப்ரமணியம்,*
*RC தானே — D 3142*

## ஆசிரியர் குறிப்பு

சங்கத்தின் திட்டங்களைப் பற்றி சுருக்கமாக எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்-திட்டத்தின் விவரம், எத்தனை பேர் / எத்தனை சமூகங்கள் பயனடைந்தனர், திட்டத்தின் செலவு, தொடர்பான விவரங்கள் அனுப்புங்கள். மரம் நடுவது, இரத்த தான முகாம் போன்ற வழக்கமான திட்டங்களை தவிர்க்கவும். திட்டத்தை விளக்கும் வகையில் பயனாளிகளுடன் கூடிய அதிக ரெசல்யூஷன் புகைப்படங்களை jpg வடிவத்தில் இணைக்கவும். Word கோப்பில் அல்லது கடிதத்தின் உள்ளடக்கத்தில் இடம்பெறச் செய்யவேண்டாம். முகவரி: *rotarynewsmagazine@gmail.com; rushbhagat@gmail.com*

## பாராட்டப்பட வேண்டிய புனேவின் ரேணுத்தாய்

ரேணுத்தாய் பற்றிய கட்டுரை (ஏப்ரல் மாத வெளியீடு), பலரின் மனக்கதவை திறந்தது. நிறைய வசதிகள் இருந்தாலும், சமுதாயத்திற்கு தன்னலமற்ற சேவை செய்ய நேரம் ஒதுக்குவது இல்லை. பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் ஒழுக்கமான எதிர்காலத்தை வழங்குவதற்காக ரேணுத்தாய், தான் பார்த்துவந்த வேலையை விட்டுவிட்டார். ஒரு சிறிய திட்டத்தை செய்து முடித்தபின் நமது சங்கத்தில் இருக்கும் ஆண்களும் பெண்களும் நல்ல உடை அணிந்து புகைப்படத்திற்கு முகம் காட்டுவதைத் தான் அதிகம் பார்த்திருக்கிறோம். ரோட்டரியில் கவர்ச்சி மற்றும் பகட்டை விட நிறைய விஷயங்கள் இருக்கிறது என்று காண்பித்ததற்கு பாராட்டுக்கள். உலகில் இருக்கும் ரேணுத்தாய்கள் இன்னும் சக்தி பெறவேண்டும்.

*ஜோதிகா பாய்*
*RC கிரேப்சிட்டி நாசிக் — D 3030*

ஏப்ரல் இதழில் அற்புதமான படைப்புகள் உள்ளன. ரோட்டரிக்கான கார்ப்பரேட் உறுப்பினரா? என்ற கட்டுரை அருமை. TRF உடன் இணைந்து, திட்டங்களுக்கு நிதியளிப்பதில் கார்ப்பரேட் உறுப்பினர்கள் உதவ வேண்டும். RYLA பொழுதுபோக்கு அல்ல என்ற கட்டுரை, ரோட்டராக்டர்களை புரிந்து கொள்வதற்கும், எதிர்காலத்தில் ரொட்டேரியன்களாக ஆவதற்கும் DG பாக் சிங் பன்னு முயற்சிக்கு பாராட்டுக்கள். D 3211 பாலை ரோட்டரி சங்கத்தின் இரத்த தானம் திட்டம் (அனைத்து மதங்களையும் இரத்தம் இணைக்கிறது), மக்கள் நம்பிக்கைக்கு அப்பால் உதவியதைப் பற்றி சிந்திக்க உதவியது.

*நவீன் கார்க், RC சுனம் — D 3090*

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:* rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | P S Ramesh Babu |
| RI Dist 2982 | DG | Dharmesh R Patel |
| RI Dist 3000 | DG | P Gopalakrishnan |
| RI Dist 3011 | DG | Ravi Choudhary |
| RI Dist 3020 | DG | G V Rama Rao |
| RI Dist 3030 | DG | Dr K Sunder Rajan |
| RI Dist 3040 | DG | Dr Zamin Hussain |
| RI Dist 3053 | DG | Rajkumar Bhutoria |
| RI Dist 3054 | DG | Maullin Manubhai Patel |
| RI Dist 3060 | DG | Ruchir Anirudh Jani |
| RI Dist 3070 | DG | Parvinder Jit Singh |
| RI Dist 3080 | DG | T K Ruby |
| RI Dist 3090 | DG | Bagh Singh Pannu |
| RI Dist 3110 | DG | Vinay Kumar Asthana |
| RI Dist 3120 | DG | Ranjeet Singh |
| RI Dist 3131 | DG | Abhay Gadgil |
| RI Dist 3132 | DG | Vyankatesh Vithal Channa |
| RI Dist 3141 | DG | Prafull J Sharma |
| RI Dist 3142 | DG | B M Sivarraj |
| RI Dist 3150 | DG | J Abraham |
| RI Dist 3160 | DG | Madhu Prasad Kuruvadi |
| RI Dist 3170 | DG | Anand G Kulkarni |
| RI Dist 3181 | DG | M M Chengappa |
| RI Dist 3182 | DG | G N Prakash |
| RI Dist 3190 | DG | Asha Prasanna Kumar |
| RI Dist 3201 | DG | Vinod Krishnan Kutty |
| RI Dist 3202 | DG | Sivashankaran P M |
| RI Dist 3211 | DG | Suresh Mathew |
| RI Dist 3212 | DG | Chinnadurai Abdullah |
| RI Dist 3231 | DG | Jawarilal Jain K |
| RI Dist 3232 | DG | R Srinivasan |
| RI Dist 3240 | DG | Sunil Saraf |
| RI Dist 3250 | DG | Vivek Kumar |
| RI Dist 3261 | DG | Harjit Singh Hura |
| RI Dist 3262 | DG | Ajay Agarwal |
| RI Dist 3291 | DG | Brojo Gopal Kundu |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakhar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |

### Executive Committee Members (2017–18)

DG B M Sivarraj — RI Dist 3142
Chair – Governors Council

DG R Srinivasan — RI Dist 3232
Secretary – Governors Council

DG Abhay Gadgil — RI Dist 3131
Secretary – Executive Committee

DG Vivek Kumar — RI Dist 3250
Treasurer – Executive Committee

DG P Gopalakrishnan — RI Dist 3000
Member – Advisory Committee

## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road
Egmore, Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail : rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# வெளிப்படைப் பேச்சு, நேர்மையான செய்தி

அப்போது ரோட்டரி நியூஸ் இதழுடன் நான் இணைந்து ஓராண்டுதான் ஆகியிருக்கும். 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வாஷிங்டன் நகரிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவர் சார்லஸ் சி. கெல்லர் எழுதியது.

உண்மையைச் சொல்லப் போனால், அப்போது கெல்லர் என்ற மதிப்புக்குரிய கண்ணியமான மனிதர் ரோட்டரி உலகுக்காகச் செய்த தியாகத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்க மிதந்தேன்.

அக்கடிதத்தில் அவர் தி ரொட்டேரியன் இதழ் மற்றும் பல்வேறு பிரதேச இதழ்களின் பிரதிகள் பல ஆண்டுகளாகக் கிடைப்பதாகக் கூறினார். அந்த இதழ்களை முழுமையாகப் படித்துவிடுவதாகவும் உலகம் முழுவதும் ரோட்டரி அமைப்பினர் மேற்கொள்ளும் பணிகள் குறித்த பல புதிய தகவல்கள் செய்திகள் கிடைக்கின்றன என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து அந்தக் கடிதத்தில் ஜனவரி மாத இதழைப் படித்ததாகவும், அதில் பெரும்பாலும் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் மனோஜ் தேசாயின் ஜெய்ப்பூர் இன்ஸ்டிட்யூட் பற்றியே பல விஷயங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதுதான் நான் பார்த்த வரையில் மண்டல அளவில் பிரசுரிக்கப்படும் இதழ்களில் சிறந்தவற்றில் ஒன்று என்றும் அக்கடிதத்தில் கெல்லர் பாராட்டினார்.

அத்துடன், இந்த இதழ் பல்வேறு படங்கள் செய்திகளை வெளியிட்டு இந்தியாவில் ரோட்டரி இயக்கம் எப்படிச் செயல்படுகிறது, அதன் சாதக பாதகங்கள், மற்றும் ரோட்டரி இந்தியாவில் எப்படி மேம்பாட்டுப் பணிகளைச் செய்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகிறது என்றார்.


அத்துடன், இன்றைய கால ஊடகங்கள் இரு முக்கிய விஷயங்களைக் கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள் என்றும் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கெல்லர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இதழ் இந்தியாவில் ரோட்டரி அமைப்புகள் மேற்கொண்ட மிகச் சிறந்த பணிகளை விரிவாகக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். (கெல்லர் எழுதிய கடிதத்தின் நகல் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது). நேர்மையான செய்தி என்பது இப்போது இந்திய ஊடகங்களில் காணாமல் போய்விட்டது. எனது நாற்பது ஆண்டுகால இதழியல் அனுபவத்தில் நேரடியான விமர்சனத்தை எதிர்கொண்டதேயில்லை. ஏன், எனது செய்திக்கு எதிராக மறுப்புச் செய்தி, ஆட்சேபம் எதுவுமே இருந்ததில்லை. ரோட்டரி இதழில் புலனாய்வுச் செய்திக்கெல்லாம் வாய்ப்பே இருக்காது. ரோட்டரி அமைப்பையோ அதன் பணிகளையோ புலனாய்வுக் கண்கொண்டு பார்க்கவும் இயலாது அப்படிப் பார்ப்பதில் அர்த்தமும் இல்லை. அதனால்தான், நமது மண்டல ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் உள்பட மூத்த தலைவர்கள் எல்லாம் குறை என்று தெரிந்தால், அதைப் பட்டென்று கூறுவதற்குத் தயங்குவதில்லை.

தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு இந்திய ரோட்டேரியன்கள் தாராளமாக நன்கொடை வழங்குவதையும் சிறந்த வகையில் சேவைகளை மேற்கொண்டு வருவதையும் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் ஒவ்வொரு தலைவரும் தற்போதைய தலைவர் இயான் ரிஸ்லி, புதிதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரி ரஸின் ஆகியோர் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறார்கள். அதே சமயம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் சுணக்கம் நேருகிறது. ரோட்டரியில் ஒட்டுமொத்தமாக ஏராளமானோர் சேருகிறார்கள். அவர்களே ஒட்டுமொத்தமாக விலகியும் போகிறார்கள். இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் சி. பாஸ்கர் பல்வேறு கூட்டங்களில் பேசி வருகிறார்.

கோலாலம்பூர் மண்டல நிறுவனத்தின் கூட்டத்தில் வெளிப்படையாகப் பேசுவதற்கென்று தனி அமர்வு (frankly speaking session) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் இந்திய ரோட்டரி அமைப்புகளின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகள் முன்னாள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் கே.ஆர். ரவீந்திரன் முன்னாள் ரோட்டரி தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி ஆகியோரிடம் நேரடியாகக் கேட்டார். இருந்தாலும் இருவரும் தயக்கமின்றி எதிர்கொண்டனர். ரோட்டரி நியூஸ் இதழைப் பொறுத்தவரையில், ஆதாரமான செய்திகளை வெளியிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இருந்தாலும் ரோட்டரியில் உள்ள புல்லுருவிகள் சில சமயம் புகார்களைக் கூறுவுதுடன் அவற்றின் நகல்களை ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர்களுக்கும் அனுப்பிவிடுகிறார்கள். இது இந்திய ரோட்டரிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும். எனினும், ஏராளமான ரோட்டேரியன்கள் கடுமையாக உழைக்கிறார்கள். எப்போதுமே பிரச்சினை இருந்தால், அது இருப்பதை உணர்வதுதான் முதல் நடவடிக்கையாகும்.

ரஷீதா பகத்



# மாற்றத்தை உண்டாக்கும் ரோட்டரியின் மகிமை

அன்புள்ள சக ரொட்டேரியன்களே,

60 ஆண்டுகளாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்ற ஒவ்வொரு தலைவருக்கும் தீம்களை தேர்ந்தெடுப்பது ஒரு சிறப்புரிமையாகவும், சில நேரங்களில் சவாலானதாகவும் இருந்துள்ளது. கடந்தகால தீம்களை திரும்பிப் பார்க்கும்போது ஒவ்வொரு தலைவரின் சிந்தனை மற்றும் தொலைநோக்கு பார்வை பற்றியும் அது ஒரு சிறிய சாளரத்தைத் திறக்கிறது - எப்படி அவர்கள் ரோட்டரியை பார்த்தார்கள், அவர்களின் பார்வையில் உலகத்தில் ரோட்டரிக்கு என்ன இடம் இருந்தது, மற்றும் ரோட்டரி எதை அடையும் என்று அவர்கள் நம்பினார்கள் என்பதை அது குறிப்பிட்டது.

ரோட்டரி: ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது, என்பது நமது தீமாக கொண்டேன். என்னைப் பொறுத்தவரை, அந்த சிறிய சொற்றொடர் இப்போதுநாம் என்ன செய்கிறோம் என்பதை மட்டுமல்லாமல், நாம் என்ன செய்ய விரும்புகிறோம் என்பதையும் விவரிக்கிறது.

கலிஃபோர்னியாவில், கடந்த ஆண்டு பேரழிவு தரும் காட்டுத்தீக்குப் பிறகு, ரொட்டேரியன்கள் அனைத்தயும் இழந்தவர்களுக்கு ஒரு மாற்றம் உருவாக்கியதை நான் கண்டேன். குவாதமாலாவில், திறந்த நெருப்பில் ச மைத்துக் கொண்டிருந்த பெண்களின் வாழ்வில் எளிமையான மர அடுப்புகள் கொடுத்து வித் தியாசத்தை உருவாகியதை நான் கண்டேன்: அவர்கள் இப்போதெல்லாம் சமைக்கும்போது புகையை சுவாசிப்பதில்லை. அவர்கள் சிறு தொழில் தொடங்குவதற்கு தங்களுடைய அடுப்புகளைப் பயன்படுத்துகின்றனர். இஸ்ரேலில், நான் மூளைக் காயம் ஏற்பட்ட மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஆரோக்கியமான, பயனுள்ள வாழ்வை மீட்டுத்தருகின்ற ரோட்டரி ஆதரவு பெற்ற ஹைபர்பேரிக் சென்டருக்கு விஜயம் செய்தேன். உலகெங்கிலும் உள்ள சமூகங்களில், அகதிகளை மீளமைப்பது, குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து அளிப்பது, பாதுகாப்பான இரத்த விநியோகத்தை உறுதிப்படுத்துவது, இளைஞர்கள் கற்றுக்கொள்வதற்கும் செழித்து வளர்வதற்கும் உதவுவது ஆகியவற்றின் மூலம் ரொட்டேரியன்கள் மாற்றத்தை உருவாக்குகின்றனர்.

உலகெங்கிலும், மரம் நடுவதில் ரொட்டேரியன்களுடன் சேர்ந்து நானும் அர்பணிப்புடன் ஈடுபடுகிறேன். மேலும், உலகெங்கிலும் ஆலோசனை, நிதி திரட்டுதல் மற்றும் போலியோ ஒழிப்புக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றுக்காக ரோட்டரி தொடர்ந்து ஆதரவளிக்கிறது. கடந்த ஆண்டு, கடுமையான போலியோ வைரஸ் தாக்குதலால் இரண்டு நாடுகளில் 22 நபர்கள் மட்டுமே பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த எண்ணிக்கை விரைவில் பூஜ்யத்தை அடையும் என்று நான் நம்புகிறேன்.

ஜூலியட்டும் நானும் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பி வரும்போது, நாங்கள் விஜயம் செய்த இடங்கள், நாங்கள் உருவாக்கிய நண்பர்கள் மற்றும் நாங்கள் பார்த்த சேவை ஆகியவற்றின் இதமான நினைவுகளை எடுத்து வருவோம். ரோட்டரி மூலம் நீங்கள் செய்கிற மாபெரும் வேலைக்காக, ஒரு வித்தியாசத்தை உருவாக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

இயான் H.S. ரிஸ்லி,
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# வெற்றிக் கொண்டாட்டம்

அன்புள்ள ரொட்டேரியன்களே,
ரோட்டரி ஆண்டு முடிவுக்கு வந்துவிட்டது. இது அனைத்து ரொட்டேரியன்களிடமிருந்தும் உற்சாகமான பங்கேற்பைப் பெற்ற நடவடிக்கைகள் நிரம்பிய ஒரு ஆண்டு. நான் பல ரொட்டேரியன்களோடு தொடர்பு கொண்டு, இந்த மண்டலத்தில் பல ரோட்டரி நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளதால், நாங்கள் வெற்றி பெற்ற அணியின் ஒரு பகுதியாக இருக்கிறோம் என்று கூற விரும்புகிறேன். அதன் மூலம் நான் சொல்ல வருவது என்னவெனில் நாம் சேவை செய்கின்ற சமூகங்களின் இதயங்களை வெல்கிறோம். பெரு நிறுவனங்களை ரோட்டரி திட்டங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் நாம் அவற்றின் நல்லெண்ணத்தை சம்பாதிக்க வேண்டும். நம் சக ரொட்டேரியன்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு சக்தியூட்டவும் வேண்டும். நம்மிடம் ஆற்றல் உள்ளது, நாம் வேகத்தை தொடர வேண்டும், இதற்காக நமது சாதனைகளை கொண்டாட வேண்டும். ஊடகங்களும் வியாபார உலகமும் கருத்தரங்குகள், மாநாடுகள், விருது நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களுக்கு தவறாமல் ஏற்பாடு செய்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நிகழ்வுகள் சாதனைகளைக் கொண்டாடவும் உயர்வான பங்களிப்புகளை பாராட்டவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் உற்சாகத்தை தூண்டி போட்டி மனப்போக்கை உருவாக்குகின்றன. துரதிருஷ்டவசமாக, ரோட்டரிக்குள் சங்கம் சார்ந்த அரசியலின் யதார்த்தங்கள், விசேஷ தருணங்களை வென்ற அணிகளின் தலைவர்களுக்கு ஒரு கடினமான நிலைமையாக மாறலாம். பல ரொட்டேரியன்கள் புகழையும் உற்சாகத்தையும் கொடுக்க விரும்புவதை நான் பார்த்திருக்கிறேன், ஆனால் தங்களைத் தாங்களே அவர்கள் கட்டுப்படுத்திக் கொள்வார்கள், ஏனென்றால் அவர்கள் தற்பெருமைக்குரியவர்களாக காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. அங்கீகாரத்துக்கும் தற்பெருமைக்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது. முதலாவது சாதனையை கொண்டாடுவதனால் முக்கியத்துவம் பெறுகிறது; இரண்டாவது வெறுமனே வெற்று வார்த்தை மட்டுமே. அதே நேரத்தில், நாம் அங்கீகரிக்கும் சாதனைகள் ஊக்கமளிக்கக் கூடியதாகவும் மறக்கமுடியாதவையாகவும் இருக்க வேண்டும், இல்லாவிட்டால், கொண்டாட்டத்தின் நோக்கம் இழக்கப்படுகிறது.

மேலும், நமது சங்கங்களின் பயணங்களில் மைல்கற்களாக இருக்கும் முக்கிய நிகழ்வுகளை நாம் கொண்டாட வேண்டும். புதிய அதிகாரிகள் பதவியேற்பு, ஆளுநரின் அதிகாரப்பூர்வ வருகைகள், ரோட்டரி அறக்கட்டளைக்கு பங்களிப்பு மற்றும் மாவட்ட நிகழ்ச்சிகளிலும் சேவைத் திட்டங்களிலும் பங்கேற்பது போன்ற முக்கியமான நிகழ்வுகளை கொண்டாடுவது ரோட்டரியை உயிர்ப்பிக்கும் மைல்கற்கள் ஆகும். ஒரு கொண்டாட்டம் ஆடம்பரமாக இருப்பது தேவையற்றது. அது தனிப்பட்ட ஒரு ரோட்டரியின் செயல்பாட்டுக்கான எளிமையான அங்கீகாரமாக இருக்கலாம் அல்லது முந்தைய 12 மாதங்களில் சங்கத்தின்/மாவட்டத்தின் ஒட்டுமொத்த வெற்றியை அங்கீகாரமளிப்பதாக இருக்கலாம். சக ரொட்டேரியன் ரோட்டரியில் ஒரு இலக்கை அடையும்போது அந்த வெற்றி கொண்டாடப்பட வேண்டும். ரோட்டரியின் நோக்கத்துக்கு பங்களிக்கும் ஒவ்வொரு சாதனையும் சங்கத்தின் வெற்றி ஆகும்.

சமூக ஊடகங்களின் சக்தியை பயன்படுத்தி உங்கள் வெற்றிகளை பகிர்ந்து கொள்ளுங்கள்; நீங்களும் உங்கள் சங்கமும் செய்ததை மற்றவர்களை பார்க்கச் செய்யுங்கள். உங்கள் சங்கத்தின் சாதனைகள் குறிப்பானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் செய்யுங்கள். ரோட்டரி உலகத்தில் பல சாதனைகளுக்கு, குறிப்பாக உறுப்பினர் தக்கவைப்பு, உறுப்பினர் சேர்க்கை, விரிவாக்கம் மற்றும் ரோட்டரி அறக்கட்டளைக்கு பங்களிப்பு ஆகியவற்றுக்கு சில எண் சார்ந்த இலக்குகள் தேவைப்படுகின்றன. நாம் வளர்ச்சிக்கான முக்கியத்துவம் என்ன என்பதைக் காட்டும் பொருட்டு புதிய மற்றும் இளம் ரொட்டேரியன்களுக்கு வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்து மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

சென்ற வருடம் முழுவதும் ரோட்டரி நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக 4, 5 மற்றும் 6 வது மண்டலங்களைச் சேர்ந்த (தெற்காசிய நாடுகளின்) அனைத்து ரொட்டேரியன்களுக்கும் தலைவணங்குவதற்கும், நன்றி கூறவும் நான் கடமை பட்டுள்ளேன். உங்கள் நல்ல வேலைக்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

ரோட்டரி வருடம் 2018-19 க்கு தயாராகலாம்.

ரோட்டரி வித்தியாசத்தை உருவாக்குகிறது என்பதை நாம் உலகுக்கு காட்டுவோம்.

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

TRF அறங்காவலர்
தலைவரிடமிருந்து...



# வருங்காலத்தை திட்டமிடுவோம்

நமது அறக்கட்டளையின் இரண்டாம் நூற்றாண்டின் முதல் ஆண்டு சேவையும் - மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் தலைவராக என் பதவி காலமும்-முடிவுக்கு வருவதை நம்புவது கடினமாக உள்ளது.

ரோட்டரியும் நமது அறக்கட்டளையும் செயல்பாட்டில் இருப்பதை நான் உலகம் முழுவதும் பயணிக்கும் போது பார்ப்பது ஒரு அற்புதமான அனுபவமாக இருக்கிறது. ரொட்டேரியன்களின் பேரார்வம், அர்ப்பணிப்பு, ரோட்டராக்டர்களின் சக்தி மற்றும் படைப்பாற்றல், மேலும் திட்டங்கள் மற்றும் சேவை வடிவங்களின் பன்முகத்தன்மை ஆகியவை எழுச்சியூட்டுவதாக இருக்கிறது. ரோட்டரி: எண்ணற்ற தேவையுள்ள மக்களின் வாழ்வில் வித்தியாசத்தை உருவாக்குவதை நான் பார்த்துள்ளேன்.

இந்த அனுபவங்கள் ரோட்டரியின் எதிர்காலத்தில் எனது நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. முக்கியமாக போலியோவிற்குப் பிந்தைய சகாப்தத்தை நாம் அணுகுகின்ற இந்த நேரத்தில் நமது அறக்கட்டளையின் முக்கிய பங்கு தொடர வேண்டும்.

ரொட்டேரியன்கள் என்ற முறையில், பெரிய சவால்களும் தைரியமான வாய்ப்புகளும் நம்மை எதிர்நோக்கியுள்ளன:

- போலியோவை ஒழிப்பதற்கான நமது இலக்கை அடைய வேண்டும்! நேரடி நன்கொடை மூலமோ, நிதி திரட்டுவதன் மூலமோ, அல்லது ஊடக தளத்தை பயன்படுத்தி போலியோ கதை சொல்லுவதன் மூலமோ போலியோ பிரச்சாரத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்.
- நாம் உரையாடலை விரிவுபடுத்த வேண்டும் மற்றும் அடுத்து எந்த கார்ப்பரேட் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.
- உலக மக்கள் தொகையில் 50 சதவீத பங்கு வகிக்கின்ற 30 வயதிற்கு உட்பட்டவர்களை ஈடுபடுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இந்த இளைஞர்கள் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தவும், தன்னார்வலராகச் செயல்படவும் விரும்புகிறார்கள் என்று ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- உலக மக்கள் தொகையில் 50 சதவிகிதம் பேர் பெண்கள். அவர்கள் பல சங்கங்களின் முதுகெலும்பாக இருப்பதை நிரூபித்து வருகிறார்கள். நாம் நமது நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் அவர்களது தலைமையை வரவேற்க வேண்டும்.
- நம் இலக்குகளை அடைய உதவுவது எப்படி எனப் புரிந்து கொள்ள அதிக ரொட்டேரியன்களும் சங்கங்களும் அறக்கட்டளையுடன் இன்னும் நெருக்கமாக இணைய வேண்டும்.

இந்த ரோட்டரி ஆண்டு, என்னுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உங்களை அழைத்தேன். ரோட்டரி அறக்கட்டளை மூலமாக எப்படி அதிக நிதி திரட்டுவது, உதவித்தொகைச் செயல்முறையை எளிதாக்குவது, இளைஞர்களை சிறந்த முறையில் ஈடுபடுத்துவது, சமாதானத்தை உருவாக்குவது, நம் உறுப்பினர் அனுபவத்தை மேம்படுத்துவது என்பதைப் பற்றிய விஷயங்களை பலர் பகிர்ந்துகொண்டனர். எதிர்காலத்திற்கான உங்களுடைய பேரார்வத்தை வெளிப்படுத்தினீர்கள். அதில் நமது அறக்கட்டளை அதன் இரண்டாம் நூற்றாண்டில் எப்போதையும் விட பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த பயணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்ததற்கு நன்றி.

Paul A. Netzel

பால் ஏ நெட்செல்
ரோட்டரி அறக்கட்டளை
அறங்காவலர் தலைவர்

நான் எனக்கு அடுத்து வருபவருக்கு
என்ன கொடுக்க வேண்டும்?
Paul.netzel@rotary.orgல்
மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்துங்கள்

# Ergo Bed

## Smart. Adjustable.Technology.




EQUIPPED WITH 5 ZONE

5 ZONE PIN CORE LATEX MATTRESS

Serta AMERICA'S #1 Mattress Brand NOW IN INDIA

80 YEARS OF EXPERIENCE Serta

feast | surf the net | read a book | watch TV | massage

ADJUSTABLE ERGO BASE WARRANTY 20 YEARS LIMITED

LATEX MATTRESS WARRANTY 10 YEARS LIMITED

With advanced and improved technology, the sleek European design Ergo bed will let you choose your own style of comfort. With an easy push of a button, this bed will freely adjust to any position of activity you desire: you can dine on your bed, use your laptop, read comfortably, lie down while watching TV, or simply relax and enjoy different intensities of noiseless vibration massages. The mattress is made of superior 100% natural pin core latex with high-grade specifications for optimal body support and comfort. Further, it also provides health benefits with the use of the Zero G position which optimizes blood circulation.

**Company Showrooms:** Mumbai – 022-49739066 , Bangalore – 080-41654425, Chennai - 044-48516188
**Authorised Franchisees:** Décor World – Hyderabad – 040-66746622, Adinath Furnitures – Surat – 0261-2634567, Impex United – Cochin - 9746471257, Dimensions Furniture & Lifestyle – Indore – 0731- 2552855, Foam Home – Mumbai – 022-23514135, Galaxy Impex – Pune – 9823815169, ND Enterprises – Navi Mumbai – 022-65111155, Diya Enterprises – Coimbatore – 9500806444, Naaz Mattress Gallery – Gurgaon – 9871170247/8700309691
**Authorised Dealers:** Shangar Furnishing – Vadodara – 0265-2321775, The Handloom Emporium – New Delhi – 011-22443311, Jain Foam Palace – New Delhi -011-41554162, Rajwada Décor – New Delhi - 011-45508926, Luxe Furnishing – Hyderabad – 040-23002977, Trisul Foams – Vijayawada – 0866-2489122/2579122

Serta®

WE MAKE THE WORLD'S BEST MATTRESS.™

*Manufactured & Marketed by: Emirates Sleep Systems Pvt. Ltd. (Under license from Serta Inc, USA.)*

**Sales & Marketing Office:** Office No # 0955 L-9, Raheja Towers, East Wing, No.26/27 MG Road, Bangalore 560001, India. Email: admin@sleepsystems.in

EMIRATES Sleep Systems Pvt. Ltd.

/sertaindia @sertaindia /sertaindia

www.sertaindia.com

# நன்கொடை அளிப்பதில் முதலிடம் பிடிக்க இந்தியா தயாராகிவிட்டது

ரஷீதா பகத்

***ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிப்பதில் முதலிடத்தை வகிப்பதற்கான ஆற்றலை இந்தியா பெற்றிருக்கிறது என்று ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பேரி ரஸின் உறுதிபட நம்புகிறார்.***



RIPE *பேரி ரஸின்.*

ரோட்டரி உலகில் இந்தியாவின் பங்களிப்பு என்ன? இந்தக் கேள்வி ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் புதிய தலைவராகப் பொறுப்பேற்கும் பேரி ரஸினிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், ரோட்டரி இயக்கத்திற்கு இந்தியா மிக முக்கியமான நாடாக விளங்குகிறது. அங்கே ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. ரோட்டராக்ட் திட்டங்கள் வலுவாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை வழங்குவதில் வலுவான தன்னார்வ அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. பலவீனங்களைப் பற்றிப் பேச விரும்பவில்லை. அதிகமான பெண்கள் ரோட்டரியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அதற்கு



இந்தியாவில் வாய்ப்புகள் உண்டு. அதில்தான் இந்தியா சிறிது பின்தங்கியுள்ளது. விரைவில் ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிப்பதில் இந்தியா முதலிடத்தை எட்டிவிடும் என்று நம்புகிறேன் என்றார் ரஸின்.

சமூகத்துக்கான கார்ப்பரேட் பங்களிப்பு (CSR) இந்தியாவில் சிறப்பாகச் செயல் படுகிறது. அதனால், ரோட்டரியில் அதன் பங்களிப்புக்கு மிகப் பெரிய வாய்ப்பு அதிகம் இருக்கிறது என்று மூத்த ரோட்டரி தலைவர் ஒருவர் என்னிடம் தெளிவுபடுத்தினார்.

இந்தியாவில் உள்ள ரோட்டரி அமைப்பினரிடம் இது குறித்துக் கேட்டபோது, கார்ப்பரேட் நிறுவனங்களை ஈடுபடுத்துவது இது தொடக்கம்தான். ஆனால், இத்தகைய ரோட்டரி பணிகளில் கார்ப்பரேட் நிறுவனங்களை ஈடுபடச் செய்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. தங்களது சமூகப் பணிக்கான உதவியைச் செய்வதற்கு ரோட்டரி அமைப்புதான் சரியான தளம் என்று அவை புரிந்துகொள்ள வேண்டும். இதை இந்தியாவில் கார்ப்பரேட்கள் உணர்ந்துவிட்டால் போதும். சில ஆண்டுகளில் அப்படி ஏற்படப் போகிறது. இந்திய ரோட்டரி அமைப்பினர் சரியாகத்தான் செயல்படுகிறார்கள் என்று தெரிகிறது என்றார்.

அதைப்போல் அதிகமான பெண்களை ஈடுபடுத்த இயலும் என்பதையும் அவர் உறுதியாக நம்புகிறார். இந்திய ரோட்டரி அமைப்புகளில் 11 சதவீதம் பெண்கள்தான் இருக்கிறார்கள். உலக அளவில் சராசரி பெண்களின் விகிதம் 22 சதவீதம். சில ஆப்பிரிக்க நாடுகளில் 49 சதவீதம் வரையில் பெண்கள் இருக்கிறார்கள். கரிபியன் நாடுகளில் 36 சதவீதம் வரையில் பெண்கள் ரோட்டரி உறுப்பினர்களாக உள்ளனர் என்றார்.

*பல மூத்த தலைவர்கள் மிச்சலைப் பார்த்ததும் எழுந்து நின்று வரவேற்றதுடன், பெண் தலைமையை ஏற்க மறுத்ததற்காக மன்னிப்புக் கோரினர்.*

ரோட்டரியில் பெண்கள் விகிதத்தை 35 சதவீதமாக உயர்த்துவதற்கு எல்லா ரோட்டரி சங்கங்களிலும் புதிய பார்வை தேவைப்படுகிறது. முன்னுதாரணங்களை மாற்றியே ஆக வேண்டும் அப்படிச் செய்து விட்டால், ரோட்டரி சங்கங்களில் மாற்றம் ஏற்பட்டுவிடும்.

ரஸின் தனது மகள் மிச்சேலை அழைத்து வந்திருந்தார். மிச்சேல் ரோட்டரி அமைப்பின் முதல் பெண் தலைவரானார். அவரது செயல்பாட்டை அடுத்து மாற்றம் நேர்ந்தது.

பல மூத்த தலைவர்கள் மிச்சலைப் பார்த்ததும் எழுந்து நின்று வரவேற்றதுடன், பெண் தலைமையை ஏற்க மறுத்ததற்காக மன்னிப்புக் கோரினர். பெண்களை ரோட்டரியில் இணைப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைப்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ரஸ்ஸனின் மகள் தனது நண்பர்களுக்கு ரோட்டரி குறித்து அறிமுகம் செய்துவைத்தார். பெண்களை மட்டுமல்ல, இளைஞர்களுக்கும் அறிமுகம் செய்துவைத்தார். இப்போது ரோட்டரி சங்கத்தின் முகமே மாறிவிட்டது.

ரோட்டரிக்கு பெண்கள் புதிய இயல்பைக் கொண்டு வருகிறார்களா..? ரோட்டரிக்கு ஏதாவது புதிதாகச் செய்கிறார்களா? இது குறித்து ரஸின் என்ன நினைக்கிறார்?

நான் வேறு விதமாகப் பார்க்கிறேன். ரோட்டரிக்கு சிறந்த தகுதியானவர்கள் வேண்டும் என்ற குறிக்கோளை நம்புகிறேன். அதில் பெண்கள் ஆண்கள் எல்லோருமே இடம்பெறுகிறார்கள். ஏன் வயது வேறுபாடு கூட இல்லை நம் சமுதாயம் சிறப்பாக அமைய சிறந்த மக்களைத்தான் தேட வேண்டும் என்றார் ரஸின்.

புதிய தலைவர்கள் இருவருமே தரம்தான் மிக முக்கியமானது. பெண்களும் சமம்தான். பெண்கள் குடும்பம் சார்ந்து செயல்படுவோராகவும் இளம் தலைமுறையினரும் குடும்பம் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அது நல்லதுதான். அதனால், நீண்ட நேரம் கூட்டம் நடத்த மாட்டார்கள். சேவை புரிவதையே விரும்புவார்கள். அதில் குடும்பத்தினரையும் ஈடுபடுத்த விரும்புவார்கள். அதில் பெண்களுக்கு கொஞ்சம் அதிக புரிதல் இருக்கும். இந்த வித்தியாசமான உலகத்தை முதியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

ஆண்களை விட பெண்கள், குறிப்பாக இந்தியாவில் தலைமைப் பொறுப்பை ஏற்பதில், அதிலும் மாவட்டங்களில் சிறிது பின்தங்கியே இருக்கிறார்களே என்று கேட்டதற்கு, இது நேரத்தான் செய்யும். இந்தியாவுக்கு வந்திருந்தபோது, இந்திய ரோட்டரி பெண்களுடன் பழகி, அவர்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்களில் சிலர் வலுவானவர்கள் என்பதையும் கண்டறிந்தேன். அவர்கள் சங்கங்களில் சரியான நேரத்தில் எழுந்து செயல்படுவர். அதைப் பார்த்து மற்றவர்களும்



*பெரிய மாற்றம் கொண்டு வருவதற்கு நான்கு ஆண்டுகள் ஆகும். காரணம், கவுன்சில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கூடுகிறது.*

# *ரஸின் ஒரு பார்வை*


*முன்மாதிரி நபர்:* நான் உயர்ந்திருப்பதற்கு காரணம் எனது தந்தை கற்றுத் தந்தவைதான் காரணம். நான் சர்ஜன் ஆகியிருக்கலாம். ஆனால், அதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது என்று மருத்துவம் சார்ந்த தொழிலில் இறங்கினேன். என் தந்தையின் அர்ப்பணிப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது. நோயாளிகளிடம் மிகுந்த ஈடுபாடு காட்டுவார். எதுவாக இருந்தாலும் நோயாளிகள் அவரிடமே வருவார்கள். சிறிய வயதில் எனக்குப் புரியவில்லை, முதிர்ச்சி பெற்ற பிறகு, நோயாளிகள் டாக்டரை எப்படி போற்றவேண்டும் என்பதை உணர்ந்தேன்.

*இந்தியாவைப் பற்றி:* இந்தியாவின் பாரம்பரியம், பழக்க வழக்கத்தை நேசிக்கிறேன். எல்லா இடத்திலும் என்னை வரவேற்பதைப் பார்க்கும்போது நெகிழ்கிறேன். இந்தியாவில் எங்கு சென்றாலும் அன்பு, மரியாதை மற்றும் வரவேற்பை பெறுகிறேன். எல்லோரும் இனிமையானவர்களாக இருக்கும் ரோட்டரி சங்கத்தில் அங்கமாக இருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

*உணவைப் பற்றி:* உணவா! இங்கே எல்லாமே பிடித்திருக்கிறது. இந்திய உணவை விரும்புகிறேன். என் மகளுக்கும் இந்திய உணவு மிகவும் பிடித்தமானது. என் 18 வயது பேத்தி இந்தியாவைச் சேர்ந்தவள். வீட்டுக்குத் திரும்பியதும் காரம், சுவையான உணவையே சாப்பிடுவோம்.

*சமைப்பது:* அதிகம் இல்லை. கொஞ்சம் காலை உணவு செய்வேன். கேக், முட்டைகளில் உணவு தயாரிப்பேன்.

*ஓய்வு நேரத்தில்:* கோல்ப் விளையாடுவேன். எனக்கு ரொம்ப பிடிக்கும். ரோட்டரியால் அது விட்டுப் போய்விட்டது. நேரம் இருப்பதில்லை. ஓய்வுக்கு நண்பர்களுடன் இருப்பேன். சுத்தமான காற்று இதெல்லாம்தான்.




*உடற்பயிற்சி:* உடற்பயிற்சிக் கூடம் செல்ல வேண்டும். ஆனால், பணிச் சுமையால் முடிவதில்லை. அதிகபட்சமாக விமான நிலையங்களில் நடப்பது போன்றவைதான். தினமும் 500 மின்னஞ்சல்கள் வருகின்றன. விமானப் பயணத்தில் தூங்குவதில்லை. பயண நேரத் தடுமாற்றம் இருப்பதில்லை.

*பொழுதுபோக்கு:* அப்படி ஏதுமில்லை. ஒரு காலத்தில் அஞ்சல் தலைகளைத் திரட்டிவந்தேன். ரோட்டரியே எனக்கு பொழுதுபோக்காக மாறி விட்டன.

*இசை:* எனக்குப் பழைய இசை பிடிக்கும் என்று என் பேத்தி கூறுகிறாள். செ ாற்கள் புரிகிற மாதிரி இருக்கிற பாடல்கள் எனக்குப் பிடிக்கும். ஒரு காலத்தில் என்ன பாடுகிறோமோ அதன் பொருள் நமக்குத் தெரியும்.. அதுதான் எனக்குப் பிடிக்கும்.

*புத்தக வாசிப்பு:* மர்மக் கதைகள் பிடிக்கும். டான் ப்ரவுன் புத்தகங்களைப் படிப்பேன். அவர் கடைசியாக எழுதிய ஆரிஜின் விமான நிலையத்தில் வாங்கினேன் இப்போதும் என் மேசையில் இருக்கிறது. படிக்கத்தான் நேரமில்லை.

*மதம்:* எனக்கு நம்பிக்கை உண்டு. நான் ஆங்கிலிக்கன். ஆனால், தேவாலயங்களுக்குச் செல்வதில்லை. கடவுள் நம்பிக்கை இருந்தாலும், பிறருக்கு உதவி செய்வதால், ரோட்டரிதான் என் மதம் என்று பலரிடம் கூறியுள்ளேன்.

*எழுதிய நூல்கள்:* என் தந்தையைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி வருகிறேன். மலரும் நினைவுகள் குறித்து இன்னொரு நூல், ரோட்டரி குறித்தும் எழுத வேண்டும். இன்னும் தொடங்கவில்லை.

*பிரச்சினைகள் நிறைந்த உலகைப் பற்றி.:* உலகில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அகதிகளாகப் பலர் பல நாடுகளில் குடியேறுவது விரக்தி தருகிறது. ரோட்டரியில் நாம் செய்வதற்கு முன்பாக, இவற்றை மனிதாபிமானத்துடன் அரசியல்வாதிகள் கையாள வேண்டும். எனினும் எதிர்காலம் குறித்து நம்பிக்கை இருக்கிறது.

*இந்திய ரோட்டரி அமைப்பில் காணப்படும் குறை:* போதிய பெண்கள் இல்லை, நிறைய பெண்களை ஈடுபடுத்துங்கள்! அது முக்கியம் எனக் கருதுகிறேன். தகுதியான பெண்கள் ரோட்டரிக்கு வரவேண்டும்.

*ரோட்டரி பணியில் மனைவியின் பங்கு:* மனைவி எஸ்தர் முழு ஆதரவு தருகிறார். செருக்கு வராமல் என்னைக் காக்கிறார். மேடையில் ஏதாவது பேசினால், அதைப் பற்றி அவள் என்ன கூறுகிறாள் என்பதையே நான் நம்புகிறேன். காரணம், எல்லோரும் பாராட்டுகிறார்கள். மனைவிதான் சரியாக எடைபோடுவார். நாங்கள் சேர்ந்து எங்கு சென்றாலும் மக்கள் அவரை நேசித்தபடி மதிக்கிறார்கள். ஜனவரியில் சர்வதேச கூட்டத்தில் எனது பேச்சை அவர்தான் தயாரித்துக் கொடுத்தார். அதில் அவருக்கு விருப்பமேயில்லை. ஆனாலும் செய்தார். என்னைப் போன்ற ஒருவருக்கு வாழ்க்கைத் துணையாக இருப்பது கடினம் என்று சொல்வார். சுத்தமான நேர்மையான நபர் அவர். அவர் அளித்து வரும் ஆதரவைப் போற்றி எங்களது ரோட்டரி சங்கம் என் மனைவிக்கு வாழ்நாள் கவுரவ ரோட்டேரியன் அந்தஸ்தை அளித்துள்ளது.



*RIPE பேரி ரஸின் மனைவி எஸ்தர் (இடது) மற்றும் மார்கா ஹியூகோவுடன்.*

பின்தொடர்வார்கள். ஆனால், இதையெல்லாம் ஒரே இரவில் நடந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவும் கலாசார மாற்றம் அல்லவா.. எனினும், இப்போது தொடங்கியுள்ளது. மாறும். இப்போது பல ரோட்டரிகளில் தலைவர்களாகவும் துணை ஆளுநர்களாகவும் பெண்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அடுத்த ஆண்டு இரு பெண் ஆளுநர்கள் பொறுப்பேற்பார்கள்.

முக்கியமன பெண்கள் பெரிய அளவில் ரோட்டரியில் ஈடுபட ஆரம்பித்தால், மாற்றம் நேரும். நல்ல மாற்றம் வரப்போகிறது.

நான் ராஜஸ்தான் முதலமைச்ச ரை (வசுந்தராராஜே சிந்தியா) ஜெய்ப்பூரில் சந்தித்தேன். என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்து, நன்றாகச் செயல்படும் ஒரு வலுவான பெண்ணாக அவரைப் பார்த்தேன். நீடித்த வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவர் உண்மையிலேயே ரோட்டரியுடன் இணைந்து செயல்பட விரும்புகிறார்.

உலகம் வேகமாக இயங்குவதைப் போல் ரோட்டரி இயங்கவில்லை என்று கவலைப்படுவதை ரஸின் குறிப்பிட்டார். வேகமாகச் செயல்படும் வாய்ப்பை ரோட்டரி தவறிவிட்டதாக அவர் கருதுகிறாரா?

அதில் மறுகேள்வியே இல்லை. விரைவான மாற்றங்கள் ஏற்படும் வகையில் நாம் போதிய அளவு

*இந்தியாவின் பாரம்பரியம், பழக்க வழக்கத்தை நேசிக்கிறேன். எல்லா இடத்திலும் என்னை வரவேற்பதைப் பார்க்கும்போது நெகிழ்கிறேன்.*



# ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் மாதாந்திர செய்தி மடல்



RIPE பேரி ரஸின் RI பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோவுடன்.

*ரோட்டரி இன்டர் நேஷனல் தலைவராகப் பொறுப்பேற்கும் பேரி ரஸின், இன்றைக்கு ரோட்டரி இன்டர்நேஷனலுக்கும் ரோட்டரி சங்கங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பின்மையைச் சமாளிப்பதுதான் பெரிய சவாலாக இருக்கிறது. நாங்கள் ஆதாரங்களைத் திரட்டுவதற்கு கொள்கைகள், வழிகாட்டுதல்கள், வழிமுறைகளை வகுத்துக் கொடுத்தால் அவற்றைக் கவனிப்பதில்லை. எனவே, எல்லா சங்கங்களையும் இன்டர்நேஷனல் அமைப்புடன் தொடர்பு கொள்ளும் விதத்தில் ரோட்டரி சங்கங்களுக்கு இன்டர்நேஷனல் தலைவரே ஜூலையிலிருந்து மாதந்தோறும் கடிதம் எழுதப்போகிறார்.*

செயல்படவில்லை. காரணம், நமது நடைமுறை வேகமான மாற்றத்தை எதிர்ப்பதாக உள்ளது. நாம் மாற்றத்தை எதிர்க்கவில்லை. ரோட்டரி விதிகளை வகுப்பதற்கான கவுன்சில் இருக்கிறது. பெரிய அளவில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமானால், அவர்களிடம்தான் கொண்டுசெல்ல வேண்டும். அப்படி பெரிய மாற்றம் கொண்டு வருவதற்கு நான்கு ஆண்டுகள் ஆகும். காரணம், கவுன்சில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கூடுகிறது. உலகம் வேகமாக மாறி வருகிறது. நாம் ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்றார் ரஸின்.

ரோட்டரி போர்டில் இவை தொடர்பாக விவாதம் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. தலைவர் இயான் ரிஸ்லி இது தொடர்பான விவாதத்தைத் தொடங்கிவிட்டார். அதைத் தொடரவே நான் விரும்புகிறேன் என்று கூறிய ரஸின் மக்கள் சமூக அளவில் செயல்படுவது, குழந்தைகளுடன் உரையாடுவது, குறிப்பாக கழிவறை அமைத்தல் போன்ற நல்ல பணிகளை மேற்கொள்வது ஆகியவை எனக்கு மகிழ்ச்சி தருகின்றன என்றார்.

உலக நாடுகளின் ரோட்டரி அமைப்புகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் இன்னும் பெரிதாகச் செய்யவேண்டுமா என்று கேட்டபோது, ரஸின், என்ன செய்யவேண்டும் என்பதை (இந்தியா) பார்க்க முடிகிறது. இதுதான் அவர்களுக்குச் சாதகமானது. என்று குறிப்பிட்டார். ரோட்டரி அமைப்பினர் இதுதான் செய்ய வேண்டும் அதைச் செய்ய வேண்டும் என்கிறார்கள். வளர்ந்த நாடுகளில் இது சாத்தியமில்லை. அவர்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. ஆனால், அதை அவர்களால் கண்டுணர இயலவில்லை. எங்கே பிரச்சினைகள் தெரிகின்றனவோ அங்கே ரோட்டரியின் செயல்பாடு தெளிவாகத் தெரியும் என்றார்.

புதிதாகத் தலைமை ஏற்கும் ரஸின் ரோட்டரி அமைப்பினரிடம் பெரும்பாலும் மாறுதலுக்கு ஏற்ற திட்டங்களைச் செயல்படுத்துங்கள் என்றும், சமுதாயத்தில் பெரிய விளைவை ஏற்படுத்துவதைச் செய்யுங்கள் என்றும் கூறுவார்.

இதையொட்டி இந்திய ரோட்டரி அமைப்புகளைப் பற்றி அவர் குறிப்பிடும் போது, இந்தியாவில் பள்ளிகளில் சுகாதாரம் பேணுவதற்காக ரோட்டரி அமைப்பினர் பள்ளிகளில் தூய்மை கடைப்பிடித்தல் (WinS) என்ற திட்டத்தைச் சிறந்த வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். அது போல் மிகப் பெரிய எழுத்தறிவுத் திட்டத்தையும் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். தாய் சேய் நலத்தையும் சிறப்பாகப் பாதுகாத்து வருகிறார்கள். இவை ஒவ்வொன்றும் தொடர்பாகவும் பெரிய திட்டங்கள் இந்தியாவில் செயல்படுத்தப்படும். அவை மாறுதல்களை ஏற்படுத்தும் என்றார்.

தொடர்ந்து பேசிய ரஸின், சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனமான VHS மருத்து வமனையின் ரத்த வங்கி சிறப்பாகச் செயல்படுகிறது. நிதி ஒரு புறம் இருக்கட்டும் விஎச்எஸ் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆய்வக சேவைகள், ரத்தவங்கி, தாய் - சேய் நலப் பிரிவு ஆகியவற்றை நடத்தி உதவி செய்வது மிக உயர்ந்தது. அந்தக் கூட்டு மிகவும் மதிப்பு வாய்ந்தது. நமது திறனை விரிவு செய்வது டன் மேலும் பல செயல்களை மேற்கொள்ளவும் உதவுகிறது என்றார்.

இந்தியாவில் உள்ள ரோட்டரி இயக்கத்தினர் சர்வதேச கூட்டாளிகளுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வது எப்படி என்று என்னிடம் கேட்பார்கள். அவ்வாறு இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அவர்களால் சர்வதேச அளவிலும் உதவ முடியும் என்றும் கூறுகிறார்கள். அது நல்ல காரியம் என்றார்.

உங்களது கருத்துகள் எப்படி செயல்படுத்தப்படுகின்றன என்று ரஸ்ஸினிடம் கேட்டபோது, என்னால் என் தொழிலிலோ ரோட்டரி பணியிலோ யாருக்காவது ஊக்கமளித்து அவர்களை என்னை விட அதிகமாகச் செயல்பட வைக்க முடியும் என்றால், நாம் இணைந்து பல காரியங்களைச் செய்யலாமே என்று நினைப்பேன்.. நீங்களும் அதைப் போல் உணர்ந்து செயல்பட்டால் எல்லோரும் சேர்ந்து இலக்கை அடைந்து விடலாம் என்றார்.

அப்படியானால், ரோட்டரியில் இணைந்ததன் காரணம் என்ன? என்று கேட்டோம்.

அதற்கு அவர் பலமாகச் சிரித்தபடியே, என் நாட்டில் உள்ள வர்த்தகர்களுடன் இணைப்புக்காக ரோட்டரியில் சேர்ந்தேன். ரோட்டரி குறித்து நான் சரியாகப்

*இந்தியாவில் பள்ளிகளில் சுகாதாரம் பேணுவதற்காக ரோட்டரி அமைப்பினர் பள்ளிகளில் தூய்மை கடைப்பிடித்தல் (WinS) என்ற திட்டத்தைச் சிறந்த வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.*



புரிந்துகொள்ளவில்லை. என் நாட்டின் தலைவர்கள் ரோட்டரியில் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது மட்டுமே தெரியும். என்று கூறினார்.

சமூகப் பணியில் ரஸின் சந்தித்த சக்திவாய்ந்த நபர் 1982ஆம் ஆண்டு அவர் உறுப்பினராக இருந்த ரோட்டரி சங்கத்தின் தலைவர்தான். ரோஸ்பட் பெல் என்ற அந்தப் பெண்மணி பஹாமாஸைச் சேர்ந்தவர். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர். சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர். அவருக்குப் பார்வை



*கோல்ப் விளையாடுவேன். எனக்கு ரொம்ப பிடிக்கும். ரோட்டரியால் அது விட்டுப் போய்விட்டது. நேரம் இருப்பதில்லை.*

மங்கி வருகிறது. கண் அறுவைச் சிகிச்சைக்காக வெளிநாட்டுக்குச் செல்லவேண்டும். எவ்வளவு செலவு என்று ரஸின் ரோட்டரி சங்கத்திடம் கேட்டார். அதற்கு பட்ஜெட் இல்லை என்று சொன்னார்கள்.

உடனே ரோட்டரி டைரக்டரியைப் புரட்டினார். மியாமி பகுதியில் நல்ல சர்ஜன்களைத் தேடினார். ரோட்டரி சங்கத்தினரைக் கேட்டார். பஹாமாஸ் பாமரில் பணியாற்றிய ஒருவரைத் தெரியும் என்று ஒரு ரோட்டரி உறுப்பினர் கூறினார். ஃப்ளோரிடாவில் சிறந்த கண் மருத்துவமனை உள்ளது. அந்த உறுப்பினருக்கு ரோட்டரி உறுப்பினராக உள்ள ஒரு கண் சிகிச்சை நிபுணரைத் தெரியும் என்றார். எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டன. அந்த மூதாட்டிக்குச் சிகிச்சை நடத்த திட்டமிடப்பட்டது. அதற்கான கட்டணமும் தள்ளுபடி செய்ய முடிவானது. அது சரி, சிகிச்சை காலத்தில் அந்தப் பெண்மணியும் அவருக்குத் துணையாக வரும் மகளும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு இன்னொரு ரோட்டரி உறுப்பினர் உதவ முன்வந்தார். அவர் விமானப் பணியாளர். அவர் இலவசப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார். அத்துடன், ஹோட்டலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆபரேஷன் செய்ய சர்ஜன், சர்ஜரிக்கான மருத்துவமனை, பயணத்துக்கு விமான சேவை,



Jaishree

RIPE பேரி ரஸின் மும்பையில் ரோட்டராக்ட் தலைவர்களுடன்.



சென்னையில் D 3232 DG R ஸ்ரீனிவாசனுடன்.

தங்குவதற்கு ஹோட்டல் என எல்லாமே ஏற்பாடாகிவிட்டது. சர்ஜரி வெற்றிகரமாக முடிந்து அந்தப் பெண்மணி திரும்பினார். எங்களது ரோட்டரி சங்கம் 200 டாலர் அவர்களின் உணவுக்காக அளித்தது. அப்போதுதான் ரோட்டரியின் பலம் எனக்குத் தெரிந்தது என்றார் ரஸின்.

சரி உயர்ந்த நிலையை ரஸின் எப்படி அடைந்தார்?

எல்லாம் அர்ப்பணிப்பு உணர்வுதான் காரணம். சமூக சேவையில் முழுமையாக ஈடுபடுவதுடன் சரியான செயல்களை கடுமையான உழைப்புடன் நேர்மையாகச் செய்தால் போதும். நான் தொழில் செய்கிறேன். அதே சமயம் ரோட்டரிக்கும் கடுமையாக வேலை செய்கிறேன். நல்ல வாழ்க்கையை வாழ்வதாக உணர்கிறேன். அதை சமூகத்திற்கும் அளிக்க வேண்டும் என்று உறுதிபூண்டேன். ஒரு சமயம் பல அமைப்புகளில் இடம்பெற்றிருந்தேன். ஆனால், போகப்போக ரோட்டரி பணியே மாற்றத்தை ஏற்படுத்தும் என்று புரிந்துகொண்டேன். முழுமையாக அதில் மட்டுமே கவனம் செலுத்த ஆரம்பித்தேன் என்றார். ■

# ரோட்டராக்ட் அறக்கட்டளை நிதியம் அமைக்கிறது D 3060

வி. முத்துக்குமரன்

ரோட்டராக்ட் இளைஞர்கள் முழுநேர ரோட்டரி சங்கத்தினராக உருவாகும் வகையில் அவர்களைக் கவர்வதற்காக Samanvay என்ற நிகழ்ச்சியை District 3060 நடத்தியது. PDG மோகன் பலேஷா (D 3131) விருந்தினராகப் பங்கேற்றார்.

ரோட்டராக்ட் சங்கத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்களையொட்டி நடத்தப்பட்ட ஒரு நாள் நிகழ்ச்சி DG ருசிர் ஜானி மற்றும் மாவட்ட ரோட்டரி ஃபவுண்டேஷன் கமிட்டி தலைவர் ஆசிஷ் அஜ்மீரா ஆகியோரின் எண்ணத்தில் உதித்தது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் 9 பேர், ரோட்டராக்ட்ராக இருந்து தற்போது ரொட்டேரியன்களாக உயர்ந்துள்ள 7 பேர் பங்கேற்று, தங்களது கருத்துகளையும் தங்களது சேவைகள் குறித்த தகவல்களையும் பகிர்ந்துகொண்டனர்.

ரோட்டராக்டர்களாக இருந்து ரொட்டேரியன்களாக மாறாமல் போனவர்களது குறைகள் தீர்க்கப் பட்டன. அவர்கள் எல்லோரும் இணைந்து புதிய ரோட்டரி சங்கத்தைத் தங்களது ஊரில் துவங்கியுள்ளனர் என்று சமன்வாயின் செயலருமான ஸ்ரீகாந்த் இந்தானி கூறினார்.

ஜானியும் அஜ்மீராவும் இணைந்து ரோட்டரி பொன்விழா அறக்கட்டளை நிதி (Rotaract Golden Jubilee Endowment Fund) உருவாக்கலாம் என்று யோசனை கூறினர். அதற்கு மூலதன நிதியாக 25 ஆயிரம் டாலர் அளிப்பதாக அறிவித்தனர். இதற்கு ரோட்டராக்டர்கள் ஆதரவு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்க இயலாதவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். TRFற்கு இந்த மாவட்டம் 25 ஆயிரம் டாலர் அளிக்கவும் முன்வந்துள்ளது.

DGND பிரசாந்த் ஜானி ஆகியோர் சமன்வாய் அமைப்பில் தொடர்ந்து செயல்படப் போவதாகத் தெரிவித்தனர்.

ரோட்டராக்ட் திட்டங்களும், அவற்றுக்கு ரோட்டரி சங்கங்கள் அளித்து வரும் ஆதரவு குறித்தும் விவாதிக்கப்பட்டன. ■




*DG ருசிர் ஜானி, PDG மோகன் பலேஷா மற்றும் பிறர் சமன்வய் நிகழ்ச்சியில்.*

# சிறிய நகரம் பெரிய திட்டங்கள்

ரஷீதா பகத்

*ரட்லம் நகரத்தை இந்த ரோட்டரி சங்கம் மனதைக் கவர்கின்ற தனது திட்டங்களால் மயக்கி ரோட்டரி-யின் பெயரை, மக்கள் மத்தியில் உச்சத்துக்கு உயர்த்தியிருக்கிறது.*

சிறிய ஆனால் கண்ணாடி போல் சுத்தமாக பளபளக்கும் அறையில் இருந்து புதிதாக சமைக்கும் உணவுகள் மற்றும் தவாவில் சுடும் ரொட்டியின் வாசனை வருகிறது. ஹேமலதாவும் அவரது சகாவும் இப்பொழுதுதான் ரொட்டியை உருட்ட ஆரம்பித்திருந்தார்கள், ரட்லம் சங்கத்தை சேர்ந்த ரொட்டேரியன் ராஷ்மி ஜெயின், முதல் ரொட்டியை பசுமாட்டுக்கு கொடுக்குமாறு ஹேமலதாவிடம் சொன்னார்.

1995 இல் தொடங்கப்பட்ட ஆஹார் கேந்திரா என்று அழைக்கப் படும் இந்த சிறிய அறை, சங்கத்தின் பெயர் சொல்லும் திட்டமாகும். இது ரட்லம் பொது மருத்துவமனைக்கு எதிரில் உள்ளது. இந்த உணவு மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் சொந்தக்காரர்கள் மற்றும் உடன் இருப்பவர்களுக்காக தயாரிக்கப்படுகிறது என்று சங்கத்தின் முன்னாள் தலைவரும் ரேஷ்மியின் கணவருமான முகேஷ் ஜெயின் கூறினார். “பலர் வெகுதொலைவிலிருந்து இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற வருகிறார்கள். அவர்களுக்காக வெறும் 5 ரூபாயில் மதியம் மற்றும் இரவு உணவு வழங்கப்படுகிறது.’’ இரண்டு ரொட்டிகள் மற்றும் ஒரு சப்ஜி இதில் அடங்கும். அன்றைய தினம் இரண்டு ரொட்டி, சுரைக்காய் கூட்டு மற்றும் சாதமும் பருப்பும் கொடுக்கப்பட்டது.

அங்கு நிறைய சிறிய பாக்கெட்டுகளில் ஒரு டிரே நிறைய புஜியா இருந்தது மேலும் ஒரு பெட்டியில் லட்டும் இருந்தது. ஜெயின் புன்னகையுடன் விளக்குகிறார், “ரட்லம் அதன் நம்கீனின் சுவைக்கு பெயர் போனது மற்றும் இங்குள்ள மக்கள் அதற்கு பழக்கப்பட்டு விட்டனர். எனவே ஒவ்வொரு நாளும் சிறிய





நம்கீன் பேக்கெட்டுகளை வைக்கிறோம். இன்று உங்கள் வருகையை கொண்டாட லட்டு வைத்திருக்கிறோம்! ஏதேனும் ஒரு VIP எங்கள் கேந்திராவுக்கு வருகை தரும் போதெல்லாம், நாங்கள் உணவுடன் இனிப்பும் தருகிறோம்.'' ரொட்டேரியன்கள், விசேஷமான நாட்களிலும் அவர்களது பிறந்தநாள் மற்றும் திருமண நாளன்றும் இனிப்பை நன்கொடையாக வழங்குகிறார்கள். தினமும் சுமார் 100க்கும் மேற்பட்ட சாப்பாடு புதிதாக தயாரித்து வழங்கப்படுகிறது; இங்கே குளிர் சாதனப் பெட்டி கூட இல்லை என்பதை நீங்கள் பார்க்கலாம்.''

ஜெயின் குடும்பத்தினர் இதற்கு மிக அருகில் வசிக்கிறார்கள் மேலும் ரேஷ்மி இங்கு தினமும் வந்து சுகாதாரமும் தரமும் சரியான முறையில் இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்கிறார். உணவிற்கு தேவையான தானியங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்கிறார்.

முதலில் ரூபாய் 2க்கு உணவு வழங்கப்பட்டது, 'ஆனால் அனைவரும் 10 ரூபாய் நோட்டை கொடுத்ததால் சில்லரை கொடுப்பதில் பிரச்சினையாக இருந்தது. எனவே ரூ 5க்கு இப்போது வழங்கப்படுகிறது,'' என்று ஜெயின் கூறினார். 1995 இல் PDG சரத் பதக் சங்க தலைவராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம், வாங்குபவர்களுக்கு கொடையாக வாங்குகிறோம் என்ற எண்ணம் ஏற்படாமல் இருக்க இங்கு குறைவான விலையில் உணவு வழங்கப்படுகிறது.



திட்டம் தொடர்வதும் சங்க உறுப்பினர்கள் சேர்ந்து வேலை செய்வதும், RID 3040ன், RC சோன்கட்ச் மற்றும் RC ரட்லம் சங்கங்களின் சிறப்பம்சமாகும். ஒருவருக்கு ஒருவர் கொடுக்கும் மரியாதையும் மற்றவரை புரிந்து கொள்ளும் தன்மையும் இந்த சங்கங்களை திறம்பட செயல்பட வைப்பது ஒரு ஆச்சரியமான விஷயம். இரண்டு சங்கங்களும் அடுத்தடுத்து DGகளை இந்த மாவட்டத்திற்கு கொடுத்திருக்கிறது - சோன்கட்சில் இருந்து தற்போதைய மாவட்ட ஆளுநர் Dr. ஸமீன் ஹுசைன் மற்றும் ரட்லமில் இருந்து DGE குஸ்டாட் அன்க்லேசரியா ஆகியோர்.

உண்மையில், அன்க்லேசரியாவின் குடும்பம் RC ரட்லம் மூலமாக ரட்லம் நகரத்தின் பெரும் உதவியாளராக இருந்துள்ளது. 1945 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த சங்கத்தில், இப்போது 116 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 25 பேர் பெண்கள். இது RC மேக்ஹூத் மற்றும் RC போபால் சங்கத்திற்குப் பிறகு இரண்டாவது மிகப் பழமையானது. இது மாவட்டத்தில் இரண்டாவது பெரிய சங்கமாகும். DGE மூன்றாம் தலைமுறை ரொட்டேரியன் ஆவார்.

### வியக்கவைக்கும் டயாலிசிஸ் மையம்

அவரது தந்தை T S அன்க்லேசரியா ஒரு சுறுசுறுப்பான ரொட்டேரியன். அவர் மும்பையில் வசித்தாலும் இந்த சங்கத்தில் மிகவும் ஆர்வத்துடன் செயல்படுகிறார். இவர் முன்னாள் தலைவர் ஆவார். RC ரட்லம் சங்கத்தின் மற்றொரு முன்னோடித் திட்டமான வியக்கவைக்கும் டயாலிசிஸ் சென்டரை அவர் எனக்கு சுற்றிக் காட்டினார். சிறுநீரகம் பாதிக்கப்பட்ட 11 நோயாளிகள் அங்கு டயாலிசிஸ் சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்தனர், அதில் 75 சதவிகிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், வேறு இடங்களில் ஒரு முறைக்கு ரூபாய் 900 செலுத்துவதற்கு பதிலாக இங்கு

இலவசமாகவோ அல்லது ரூபாய் 400 செலுத்தியோ பயன்பெறுகின்றனர், 2002 ஆம் ஆண்டு ஒரே ஒரு கருவியினை கொண்டு இது தொடங்கப்பட்டது என்று அவர் கூறுகிறார். 2006 ஆம் ஆண்டு ''நாங்கள் ஒரு அறக்கட்டளையை தொடங்கினோம் (சமூக நற்பணி திட்டங்களுக்காக RC ரட்லத்திடம் மூன்று வெவ்வேறு அறக்கட்டளைகள் உள்ளன) பின்னர் புது கருவிகளை வாங்கினோம். இன்றைய நிலவரப்படி தினமும் சுமார் 36 நோயாளிகள் இங்கு டயாலிசிஸ் சிகிச்சை பெறுகின்றனர், இது எப்போதும் முழு பயன்பாட்டில் உள்ளது மற்றும் காத்திருக்கவும் தேவைப்படுகிறது. புதிதாக ஒரு நபர் சிகிச்சை பெற வேண்டும் என்றால் ஒருவர் வெளியே சென்றல் தான் முடியும்'' என்கிறார் அவர்.



DGE *குஸ்டாட் அங்கலேசரியா ரோட்டரி பூங்காவில் வழங்கப்படும் பழரச கடையை பார்வையிடுகிறார்.*

அவரது தந்தை G.D. அங்க்லே சரியா அவர்களின் பெரிய புகைப்படம் ஒன்று அந்த டயாலிசிஸ் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற ரட்லம் ரோட்டரி ஹாலுக்கு அவரது தந்தையின் பெரிய பங்கு பற்றி இக்கட்டுரையில் பின்னர் கூறப்படும். ஒரு நாள் மும்பையில் இருந்து முன்னாள் தலைவர் பிரகாஷ் ஜெயின அவர்களின் மாமா எனக் கூறிக்கொண்ட ஒருவர் தொலைபேசியில் அழைத்து அவர்களுடைய மையத்துக்காக இரண்டு டயாலிசிஸ் கருவிகளை வழங்குவதாக கூறினார். அந்தக் காலகட்டத்தில் ஒரு கருவியின் விலை ரூபாய் 6 லட்சம் ஆகையால் நாங்கள் அவரிடம் ஒரு கருவியினை வாங்கித் தரும்படியும், மற்றொரு கருவியின் விலையை பணமாக தரும் படியும் வேண்டினோம். அவர் தந்த ரூபாய் 6 லட்சம் 2 என்டோமென்ட் ஃபன்ட் ஆக போடப்பட்டன. அதன் வருவாயிலும் மற்றும் அரசு சலுகைகளினாலும் இந்த டயாலிசிஸ் மையம் இன்று வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நோயாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக அல்லது சலுகை விலையில் சிகிச்சை வழங்குகிறது.

RC ரட்லம் சங்கத்தின் அறக்கட்டளை மற்றும் நகர மருத்துவமனைக்கு இடையே கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி ரோட்டரி அறக்கொடை அறக்கட்டளை இந்த மையத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது என இந்த மையத்தைப் பற்றிய விபரத்தினை DGE குஸ்டாட் வழங்குகிறார். ''அதற்குத் தேவையான வேலையாட்கள், பயன்பாட்டு பொருட்கள் மற்றும் டயாலிசிஸ் கருவிகள் வழங்குவது நம் பொறுப்பு மற்றும் நகர மருத்துவமனை அதற்குத் தேவையான இடவசதி, மின்சாரம் மற்றும் நீர் வசதி ஆகியவற்றை தர வேண்டும் என அது குறிப்பிடுகிறது. சம்பளப் பதிவேட்டின் படி எங்களிடம் தற்போது 13 டெக்னீஷியன்கள் உள்ளனர்.'' நாங்கள் இதுவரை மொத்தமாக 19 டயாலிசிஸ் கருவிகளை பெற்றுள்ளோம், அதில் ஏழு கருவிகள் வழக்கற்றுப் போய்விட்டன. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பு ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகம் ஆகும், மற்றும் இது ஒரு மேட்சிங் மற்றும் 2 குளோபல் கிராண்ட் மூலம் செயல்படுத்தப்பட்டது; இதற்கான முதல் மேட்சிங் கிராண்ட் 2008 ஆம் ஆண்டு செயல்பாட்டுக்கு வந்தது.

இதில் உள்ள 12 கட்டில்களில் சிகிச்சை பெறும் இளைஞர்கள் பெரும்பாலானோரின் வயது 30களின் இடைப்பகுதி அல்லது கடைப்பகுதியாக உள்ளது என்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். DGE கூறுகிறார், ''இதில் ஐந்து வயதே ஆன ஒரு நோயாளியும் உள்ளார்.'' நீரிழிவு நோய் மற்றும் உயர் ரத்த அழுத்த நோயின் காரணமாக மட்டும் இன்றி இந்த நோயாளிகளின் சிறுநீரக கோளாறுக்கான முதன்மையான காரணம் வலுவான மருந்துகளை, குறிப்பாக வலி மாத்திரைகளை, சரியான மருத்துவ ஆலோசனையின்றி பயன்படுத்தியதாகும். இதே போன்ற ஒரு மையத்தினை 2012 ஆம் ஆண்டு ரோட்டரி அல்லாத தனியார் அறக்கட்டளையான விதிஷா மூலம் மத்தியப் பிரதேசத்தில் ஒரு இடத்தில் அதன் முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌஹான் அவர்களால் தொடங்கப்பட்டு ரோட்டரியினால் செயல்படுத்தப்படும் இந்த டயாலிசிஸ் மையத்தின் வெற்றியினை சுட்டிக் காட்டுகிறது.

''இந்த நோயாளிகள் அபரிமிதமான கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர்; எங்களால் முடிந்த அளவிற்கு நாங்கள் ஆதரவு வழங்குகிறோம், மற்றவை இறைவனின் கைகளில் தான் உள்ளது,'' என்று T.S. அங்க்லேசரியா கூறுகிறார்.

தங்களது சங்கம் மெதுவாக பெருநிறுவன CSR நிதியை இந்த திட்டத்திற்காக பெற முயற்சிக்கின்றது என்ற கூடுதல் விபரத்தினை DGE வழங்குகிறார். இதன் தொடக்கமாக State Mining Corporation இடமிருந்து ரூபாய் ஒரு லட்சம் தொகை கிடைத்துள்ளது. ''மேலும் இவர்களிடம் இருந்தும் மற்ற பெரு நிறுவனங்களிடம் இருந்தும் நிதியினை திரட்ட நாங்கள் பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்கிறோம்'' என்று அவர் கூறுகிறார்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஒரு அஞ்சல் அலுவலக முகவர் அஜீத் ஷிண்டே, நம்மிடம் கடந்த 18 மாதங்களாக இலவசமாக டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு வயது 42, அவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் மற்றும் ரத்த அழுத்த நோயாளி. 37 வயதுடைய பகதூர் ரட்லம் நகரிலிருந்து 60 கி.மீ., தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ள வருகிறார். கடந்த முப்பது மாதங்களாக டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வருகிறார். 70 வயதான நஜ்முத்தீன் என்ற ஓய்வு பெற்ற வணிகர் தனது சிறுநீரக கோளாறுக்கு காரணம் "நான் எனது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைக்காதது தான்" என ஒப்புக் கொள்கிறார். அவர் மகன்கள் ஒவ்வொரு முறைக்கும் ரூபாய் 400 செலுத்துகின்றனர் மற்றும் நோயாளி கூறுவதாவது, "இந்த மையமானது உயர்தரமான சிறந்த கருவிகளைக் கொண்டு நல்ல சேவையை அளிக்கின்றது மற்றும் இந்த மையத்தை அமைத்துள்ள ரொட்டேரியன்களுக்காக நாங்கள் பிரார்த்தனை செய்வோம்."

இதன் பொறுப்பாளர் வீரேந்திர சிங், சிறுநீரக நோயால் பாதிக்கப் பட்டவர்களின் பலபேர் தங்கள் தொழிலை இழந்து வேலையற்றோர் ஆகிவிடுகின்றனர் என்று விவரிக்கிறார்.

### ரோட்டரி ஹால்

அந்த பிரம்மாண்டமான 4000 சதுர அடி ரோட்டரி ஹாலில் DGE குஸ்டாட் அங்க்லேசரியா அவர்கள் RC ரட்லம் சங்கமானது 3 பொதுநல அறக்கொடை அறக்கட்டளைகளைக் கொண்டு பல்வேறு திட்டங்கள நிறைவேற்றுகின்ற, உலகில் மிகவும் குறிப்பிடத்தக்க ரோட்டரி சங்கங்களில் ஒன்று என்று விவரிக்கிறார். இந்த ஹால் 1962ல் நிறுவப்பட்டது மற்றும் முதலில் சிறு ஹால் கட்ட இவரது தாத்தா நிலம் தந்தார், ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் அடிக்கல் நாட்டுவதாக இருந்த தினத்தன்று அவர் காலமானார். அவருடைய பாட்டி இந்த நிகழ்வை கால தாமதம் செய்யக்கூடாது என்று கூறி மேலும் இதனை நான்கு மடங்கு பெரிதாக கட்டுவதற்கான இடத்தை தானமாக தருவதாக கூறினார்.

"இதுவே நம் முன்னோர்களின் தொலைநோக்குப் பார்வை; இது ரொட்டேரியன்களுக்கு மட்டுமன்றி எல்லா ரோட்டரி சங்கங்களும் இங்கு சந்திப்பதற்கு ஏதுவான மாறுதலை உருவாக்கியுள்ளது - இது மட்டுமன்றி வாடகைக்கு விடப்படுவதால் ரொட்டேரியன்கள் அல்லாதவர்களும் பயனடைகின்றனர்,'' என்ற கூடுதல் தகவல்களை PP முகேஷ் ஜெயின் கூறுகிறார்.

### ரோட்டரி தோட்டம்

ஆனால் RC ரட்லம் சங்கத்தின் மிகவும் போற்றப்படும் மற்றும் ஈர்க்கக் கூடிய திட்டம் ரோட்டரி தோட்டம் திட்டமாகும், இது அபாரமான ஒரு லட்சம் சதுரடி நிலப்பரப்பில் அமைந்துள்ளது மற்றும் இங்கு பல்வேறு செயல்படுகின்ற, இயந்திர உபகரணங்களுடன் பெண்களுக்கான திறந்தவெளி உடற்பயிற்சி மையத்தைக் கொண்டுள்ளது. பிரத்யேகமாக பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு டஜனுக்கும் மேற்பட்ட பெண்கள் பயிற்சி மேற்கொள்வதை நான் கண்ணுற்றேன்.

சாயிதா ஷேக் இந்த இடத்திற்கு ஒரு வழக்கமான வாடிக்கையாளர் மற்றும் அவர் இங்குள்ள பல்வேறு உபகரணங்கள் கொண்டு குறைந்த பட்சம் 90 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய முடிவதாக கூறுகிறார். இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் வசிக்கும் மம்தா தனது இரண்டு குழந்தைகளுக்கும் தேர்வுகள் முடிந்து விட்டமையால் தினமும் காலையில் இங்கு நடைப்பயிற்சி செய்வதாக கூறுகிறார். "குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் அவசரம் இல்லாததால் நான் தினமும் காலை 7.30 மணிக்கு இங்கு வருகிறேன். MBA மாணவியான பரிதி பட்னி, இலவசமாக வழங்கப்படும் இந்த திறந்தவெளிச் சேவை மிகுந்த மகிழ்ச்சி தருவதாகவும் தினமும் இங்கு வந்து உடற்பயிற்சி செய்வதாகவும் கூறுகிறார்.

கிஸ்மதுன்னிசா, "எனக்கு கிடைக்கும் ஒரே ஓய்வு நேரமான காலை நேரத்தில், இங்கு தினமும் வந்து உடற்பயிற்சி செய்கிறேன். ஆகையால் தினமும் காலையில் 6.30 மணிக்கு நான் இங்கு வருகிறேன்," எனக் கூறுகிறார்.

DGE அங்க்லேசரியா அவர்கள் இந்த உடற்பயிற்சி மையத்தில் உள்ள அனைத்து உபகரணங்களும் உள்ளூரில் தயாரிக்கப்பட்டது என்று மேலும் விவரிக்கின்றார். "நாங்கள் நாசிக்கில் உள்ள மற்றொரு தோட்டத்தைப் பார்த்து இதனை செய்தோம் மற்றும் இந்த ஊரில் சிறந்த தொழில் நிபுணர்கள் இருப்பதால் நாங்கள் இதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் சந்தை விலையில் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு வாங்கினோம்."

இங்கு பெண்களுக்கான திறந்தவெளி உடற்பயிற்சி மையம் மட்டுமின்றி மிக முக்கியமான மற்றொன்று இங்குள்ள ஜூஸ் சென்டர் ஆகும். இது 2007ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. குறைந்த விலையாக ரூபாய் 5க்கு கேரட் மற்றும் பிற காய்கறிகள், கற்றாழை மேலும் பருவகால பழங்களைக்



*RC ரட்லமின் டயாலிசிஸ் சென்டர்.*



*ஆஹார் கேந்திராவில் உணவு தயாராகிறது.*

கொண்டு ஒரு கிளாஸ் இயற்கையான ஜூஸ் இங்கு கிடைக்கும். பூங்காவில் DGE மற்றும் அவர்களின் துணைவியார் ருக்ஷானாவுடன் நடந்து வருகையில் என்னால் ஜூஸ் சென்டரில் ஏகப்பட்ட கூட்டத்துடன் கூடிய சுறுசுறுப்பான விற்பனையை பார்க்க முடிகிறது. மக்கள் இந்த சத்தான ஜூஸ் குடித்து மகிழ்வதோடு மட்டுமின்றி தக்காளி, முளைகட்டிய பயிர் போன்றவற்றால் ஆன சாலட்டினை வெறும் ஐந்து ரூபாய்க்கு வாங்கிச் செல்கின்றனர். தன்னுடைய சாலட்டினை பெற்றுக் கொண்டே ஒரு இளைஞர் என்னிடம் கூறுகிறார்: “கடைவீதியில் இதன் விலை ரூ30 ஆகும், தினமும் இங்கிருந்து வாங்கி செல்கிறேன்.”

இந்த ஜூஸ் மற்றும் சாலட் இவ்வளவு குறைந்த விலைக்கு விற்பது எப்படி சாத்தியமாகிறது என்று கேட்டதற்கு அங்க்லேசரியா சிரித்துக் கொண்டே கூறியதாவது, “இந்த முழு பூங்காவிலும் ஜூஸ் சென்டர் மட்டுமின்றி எல்லாம் திருப்திகரமாகவும சுய திருப்தியளிப்பதாகவும் உள்ளது. இது நம்முடைய ஒரு அறக்கொடை அறக்கட்டளையால் பராமரிக்கப்படுகிறது; நாங்கள் இதனை நகராட்சியிடமிருந்து ஏற்றுக் கொண்டோம் மற்றும் இங்கே பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் சம்பளம் தருகிறோம். இந்த காய்கறிகள் இங்கேயே விளைவிக்கப்படுகின்றன; மற்றும் இங்கே விளையாதவற்றை வெளியில் வாங்குகிறோம்.”

பல்வேறு செயல்களால் இந்தப் பூங்கா முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குகிறது; குழந்தைகள் அவர்களது விளையாட்டு இடத்தில் ஊஞ்சல் ஆடிக் கொண்டும் மற்ற விளையாட்டுப் பொருட்களில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். ஒரு இடத்தில் யோகா நடைபெறுகிறது. மற்றொரு மூலையில் சிலர் கைதட்டிக்கொண்டு சிரிப்பு பயிற்சி மேற்கொள்கின்றனர். ஜாக்கிங் பாதை தவிர அக்குபிரஷர் பாதையும் இருக்கிறது. ரட்லம் போன்ற சிறிய நகரத்தில் இவ்வாறு பல்வேறு உடற்பயிற்சி செயல்பாடுகள் நிகழ்வது எல்லாருக்கும் விழிப்புணர்வு ஊட்டுவதாக திகழ்கிறது மற்றும் இதில் ரோட்டரியின் பங்கு எல்லோராலும் பாராட்டப்படுகிறது. இதைவிட என்ன சிறப்பான மக்கள் தொடர்பு இருக்கக்கூடும் என்ற படி நான் வியந்து கொண்டே வந்தேன்.

இது வருமுன் காக்கின்ற நோய்த்தடுப்பு முறையும் கூட என்று DGE எனக்கு நினைவூட்டினார். ரோட்டரி நகரத்தில் பல்வேறு ஜாகிங் பார்க்குகளை அமைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது மற்றும் கடந்த 50 ஆண்டுகளில் “நாங்கள் பெரும்பாலான மக்களின் பழக்கத்தை மாற்றியுள்ளோம் மற்றும் அதிகாலையில் எழுந்து அவர்களுடைய இயற்கையான சூழ்நிலையை அனுபவிப்பதற்கான காரணத்தை தெரிய வைத்துள்ளோம்.”

## மற்றொரு பூங்கா

ரோட்டரி தோட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, நகரிலுள்ள மேலும் பல பூங்காக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இப்போது ரட்லம் ரோட்டரி சங்கமே நகரத்திற்கு மற்றொரு பூங்காவினை பரிசாக அளிக்கிறது. சங்கம் நகராட்சியிடம் இருந்து பெற்றுக்கொண்ட இடத்தை DGE குஸ்டாட் மற்றும் சங்கத்தின் தற்போதைய தலைவர் பிரத்யமன் மஜாவாடியா ஆகியோர் என்னை அழைத்துச் சென்று காட்டினர்.

“20,000 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட இந்த இடம் குப்பை மேடாக இருந்தது. ஆகையால் முதலில் நாங்கள் அதை சுத்தப்படுத்தி, அதன் தளத்தை 5 அடி உயர்த்தினோம் மற்றும் ரோட்டரி தோட்டத்தின் வழிமுறைப்படி இங்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கப் போகிறோம்,’’ என்று மஜாவாடியா கூறினார்.

ஜாகிங் பாதை ஏற்கனவே தயாராகிவிட்டது; அந்த இடத்தை பசுமையாக்க மரங்களும், நடப்பட்டுள்ளது, இங்கு பெண்களுக்கான ஒரு திறந்தவெளி உடற்பயிற்சி நிலையம் மற்றும் ஒரு இயற்கை ஜூஸ் சென்டர் வைக்கப்பட உள்ளது. குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வந்து விட்டது ஆனால் இன்னும் பிரிக்கப் படாமல் இருக்கின்றது. “நாங்கள் தண்ணீர் குளிர்விப்பான்கள், LED விளக்குகள் முதலியவற்றை நிறுவுகிறோம். 15 லட்சம் ரூபாய் திட்டமான இது விரைவில் தொடங்கப்படும்’’.

சங்கமானது மாநில அரசுக்கு, ஒரு சமூக சுகாதார நிலையத்தை புதுப்பிக்கும் படி ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளதாகவும் மற்றும் அதன் கட்டிடத்தை பெரிதாக்கி மேற்கொண்டு தேவையான சுகாதார வசதிகளை செய்து தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். இது ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள குளோபல் கிரான்ட் திட்டமாகும், அரசாங்க உத்தரவுக்காக காத்திருக்கிறது.

*படங்கள்: ரஷிதா பகத்*
*வடிவமைப்பு: கிருஷ்ணமூர்த்தி*



# *Our Esteemed Guest*

**Rtn Barry Rassin & Ann Esther**
RI President 2018–19

Rotary

PASSION TO SERVE

Rotary Institute 2018
Chennai | 5-7th October
Zone 4, 5 & 6A

## Convener's Message



**RID Basker Chockalingam**
**Ann Malathi**

**Dear Rotary Leaders,**

Rotary Zone Institutes give opportunity to Rotary leaders, past, present and future, to meet and greet each other, exchange ideas and debate on how to take Rotary forward. **Malathi & I** deem it a privilege and pleasure, to invite you and your spouse, to Rotary Institute 2018, to be held during October 5–7, 2018, at **Hotel Leela Palace, Chennai**. With a set of wonderful speakers and world class entertainment, this will be truly an Institute with a difference. We will have the rare opportunity of having with us the Rotary senior leadership, who will make the event a memorable one for us. The dynamic Institute Chairman PDG I S A K Nazar and his wonderful team are making every effort, to ensure that, we all have a grand Rotary Institute 2018 — **Passion To Serve —** at Chennai.

With warm regards,
**RID Basker Chockalingam,** RI Director (2017–19)




## Chairman's Message



**Ann Afzalunnisa**
**PDG I S A K Nazar**

**Dear Rotary Leaders,**

Greetings from Team — Rotary Institute 2018.

It's a great opportunity given by Director / Convener Rtn C Basker to have our **Rotary Institute 2018** at Chennai, at the grand venue — **Hotel Leela Palace,** Chennai — on 5th, 6th and 7th October 2018. Please be ready to witness one of the most memorable Rotary Institute at Chennai. We are all set to deliver an outstanding and memorable Institute. With a galaxy of eminent speakers, a new experience in entertainment and all that a successful Rotary Institute can be remembered for, awaits you. On behalf of Rotary Institute 2018 Team, I welcome you to **Passion to Serve, Rotary Institute 2018.** Please register immediately.

**PDG I S A K Nazar**
Chairman — Rotary Institute 2018

**Please send this form duly filled by post / courier to:**

**Rtn PDG I S A K Nazar,** Chairman, Rotary Institute 2018
Manna Foods, 129, Z Block, 6th Avenue, Anna Nagar, Chennai – 600 040, Phone: 044 2683991, Mobile: 94449 76846
e-mail: rotaryinstitute.chennai2018@gmail.com, nazarisak@gmail.com

# REGISTRATION DATA SHEET

Name: Rtn. ........................................................ Call / Badge Name:.............................................

Classification: ........................................................................................................................

Address: ...............................................................................................................................

City: ............................................... Pin ......................................... Country ................................

Mobile: ................................................ e-Mail: ...........................................................................

*(Note: Include country and area code for Telephone / Fax Number)*

☐ PDG ☐ IPDG ☐ DG ☐ DGE ☐ DGN ☐ DRFC ☐ DMC ☐ DRC

Home Club: ............................................................ RI District: ............................................................

Name of Spouse: ...................................................... Call Name: ............................................................

| Food Preference | | | Collar size |
|---|---|---|---|
| | **Rotarian** | **Spouse** | |
| **Veg** | ☐ | ☐ | ☐ **38** ☐ **40** ☐ **42** ☐ **44** ☐ **46** |
| **Non Veg** | ☐ | ☐ | |

| REGISTRATION | | | Couple | Single | Amount |
|---|---|---|---|---|---|
| **Institute Registration** | **Couple** | **Single** | | | |
| Upto 30th June 2018 | INR 25000 | INR 15000 | | | |
| After 30th June 2018 | INR 26000 | INR 17000 | | | |
| | | | | | |
| GETS (Couple) | 2,3,4 October 2018 | INR 60000 | | | |
| DGs Training Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| DGN Training Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| Dist Trainers Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| COL Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| TRF Dinner | 4th October 2018 | INR 5000 per Couple<br>INR 3000 per Single | | | |
| TRF Seminar | 5th October 2018 | INR 5000 per Couple<br>INR 3000 per Single | | | |
| **HOTEL ACCOMODATION** | | | | | |
| The Leela Palace | Double Executive | INR 10000 Per Nite | | | |
| | Single Executive | INR 9000 Per Nite | | | |
| Ramada Plaza | Double Deluxe | INR 8000 Per Nite | | | |
| | Single Deluxe | INR 7000 Per Nite | | | |
| The Savera Hotel | Double Deluxe | INR 7000 Per Nite | | | |
| | Single Deluxe | INR 6000 Per Nite | | | |
| | | | Total | | |

**Kindly tick whichever is applicable.*

*Please note that the Accomodation is purely on first come first serve basis.

| | |
|---|---|
| The cheque and draft shall be in favour of **"Rotary Institute 2018"** payable at Chennai. | *Online payment details:*<br>**Account Name:** Rotary Institute 2018<br>**Bank:** Karur Vysya Bank **Branch:** Saidapet, Chennai - 15<br>**Account No.:** 1651155000067299 **IFSC Code:** KVBL0001651 |

The Institute registration covers the following:

a) Inaugural plenary on Friday, Oct 5, 2018 followed by dinner.

b) Lunch and dinner on Saturday, Oct 6, 2018.

c) Lunch on Sunday, Oct 7, 2018.

The other events such as GETS (Couple), DG Seminar, Membership Seminar, DGN Seminar, COL, TRF Seminar, Foundation Dinner have additional registration as mentioned above.

Date: .........................................

Signature: .................................

# மும்பையிலும், கொல்கத்தாவிலும் களைகட்டிய இரண்டு நிகழ்ச்சிகள்!

ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ

*RIDN பரத் பாண்ட்யா மற்றும் RIDN கமல் சங்வி அவர்களுக்கு பாராட்டு விழா மும்பையிலும் கொல்கத்தாவிலும் நடைபெற்றது.*

மும்பை, கொல்கத்தாவில் நடைபெற்ற கோலாகலமான நிகழ்ச்சியில் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் இயக்குநர்களாகப் பொறுப்பேற்கும் பாரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் K R ரவீந்திரன், மேடைப் பேச்சில் நான் 8ஆவது ஹென்றி மாதிரி... என்று கூறிவிட்டு, 8ஆவது ஹென்றி தனது 6 மனைவிகளிடம் “உங்களை நீண்ட நேரம் காத்திருக்கச் செய்ய மாட்டேன்” என்பாராம். அது மாதிரிதான் நான் மேடைப் பேச்சில் என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், இங்கே கூடியிருக்கும் பெரியவர்களைப் பார்க்கும்போது, 8வது ஹென்றியின் கடைசி மனைவியைப் போல உணர்கிறேன். என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை அறிவேன். ஆனால், எப்படி வித்தியாசமாகப் பேசுவது என்று தெரியவில்லை என்றதும் அரங்கமே சிரிப்பொலியில் அதிர்ந்தது.

பேச்சைத் தொடர்ந்த ரவீந்திரன், உங்கள் திறமையை வெளிப்படுத்தும்போது வெற்றி பெறுவீர்கள். முதலில் சங்கத்தின் மீது கவனம் கொள்ளுங்கள். இரண்டாவது சங்கத்தின் மீது கவனம் கொள்ளுங்கள். மூன்றாவது, சங்கத்தின் மீது கவனம் கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டார். மேலும், இந்தப்பணியை அனுபவித்துச் செய்தால், பிழையே நேராது. கூட்டாகச் செயல்படுவது கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். பெரிய மனிதர்களையும்

*இடதுபுறத்திலிருந்து : PRID சேகர் மேத்தா, TRF அறங்காவலர் சுஷில் குப்தா, PRIP KR ரவீந்திரன், DG ப்ரஃபுல் சர்மா, RID C பாஸ்கர், PRIP ராஜேந்திர சாபு, RIDN பரத் பாண்ட்யா, மாதவி பாண்ட்யா அவர்களின் புதலிவகள் சாஷ்வி மற்றும் நிதி, PRIDs அசோக் மகாஜன், PT பிரபாகர், YP தாஸ், PRIP கல்யாண் பெனர்ஜி, பினோட்டா பெனர்ஜி, PRID மனோஜ் தேசாய், ஷர்மிஷ்டா தேசாய், நயன்தாரா மகாஜன், DG BM சிவ்ராஜ், RIDN கமல் சங்வி மற்றும் சோனல் சங்வி.*



சாதாரணமானவர்களையும் காண்பீர்கள். தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும். மிகத் துல்லியமாகச் செயல்படுவோரை வைத்து க்கொள்வதற்குப் போராடுவீர்கள். உங்களையே மறந்து, சங்கத்தின் மீது ஈடுபட்டு வேலை செய்யும்போது, அப்படி சிறப்பாகத் தலைமையேற்கும் பண்பு உங்களிடம் இருப்பதைப் புரிந்துகொள்வீர்கள் என்றார்.

பாண்ட்யா, சங்வி ஆகிய இருவரும் பல்வேறு நிலைகளில் தலைமை வகித்தவர்கள். தலைமை வகிப்பதற்கும், தலைவராகச் செயல்படுவதற்கும் வித்தியாசம் உண்டு. தலைமை வகிப்பது மற்றவர்கள் விரும்பி பின்பற்றும்போது அமைவது. தலைமை அப்படியல்ல என்று ரவீந்திரன் குறிப்பிட்டார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் இருவரும் வலுவான தலைவரான மார்க் மலோனி தலைமையிலான வலுவான போர்டு ஒன்றில் நமது மண்டலங்களின் பிரதிநிதிகளாக இருந்து நமது தொலைநோக்கு அறிக்கையை முன்வைப்பர். உலகளாவிய போர்டில் இந்தியாவின் பிராண்ட் அம்பாச டர்களாக இருப்பார்கள் என்றும் ரவீந்திரன் கூறினார்.

ரவீந்திரன் தற்போது தி ரோட்டரி ஃபவுண்டேஷனின் அறங்காவலராக இருக்கிறார். அவர் மேலும் பேசு கையில், தவறிழைக்கும் மாவட்ட தலைமைகள் மீது அண்மையில் போர்டு எடுத்த கடுமையான சில நடவடிக்கைகளை நான் ஆதரிக்கிறேன். காரணம், ரோட்டரி வெறும் வெற்றுச் சின்னம் அல்ல, அமைப்பினரின் ஒவ்வொரு சொல், செயல், முடிவுகளில் அது நிறைந்திருக்கிறது. யாராவது முறைகேடாக நடந்துகொண்டால், அந்த அடையாளத்தையே சிதைப்பதாகிவிடும்.

“ரோட்டரியினர் மிக உன்னதமான நிலையில், நெறிகளுடன் இருப்பவர் கள். பெறுவதை விட அளிப்பதே அதிகம் என்று செயல்படுவோர்” என்று ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் பாப் பார்த் கூறியதை அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன்

தொடர்ந்து பேசிய ரவீந்திரன், ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு வெவ்வேறு புவி அமைப்புகள், 9 மொழிகள், 26 வகையான கரன்சிகளைக் கொண்ட 200 நாடுகளை உள்ளடக்கிய பன்முக கலாசாரங்களைக் கொண்டதாகும். 2016–17ம் ஆண்டில் முதலீடு செய்வதற்கான மொத்த நிதி அளவு 110 கோடி டாலர் (ரூ.735 கோடி) ஆகும். ரோட்டரி அமைப்பினரோ சுமார் 100 கோடி டாலர் (ரூ.670 கோடி) மதிப்புள்ள பணிகளை மேற்கொள்கிறார்கள் என்பது

*எல்லோரும் உங்களைப் பற்றிப் பெருமைப்படுகின்றனர். நிறைய எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்புகளுக்கும் மேலாகப் பணிபுரியுங்கள்.*

PRID YP *தாஸ்*

சுவையான தகவல். நமது மொத்த மதிப்பு சுமார் 250 கோடி டாலர் (ரூ. 16,000 கோடி) அளவுக்கு இருக்கிறது. அதுதான் புதிதாகப் பொறுப்பேற்கும் இயக்குநர்களுக்கு நாம் சொல்ல வேண்டியது என்றார்.

மும்பையிலும், கொல்கத்தாவிலும் இரு தலைவர்களும் பாராட்டி சிறப்பிக்கப்பட்டனர்.

கொல்கத்தா நிகழ்ச்சியில் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி பங்கேற்றார்.

4வது மண்டலத்திலிருந்து RI இயக்குநராகப் பொறுப்பேற்க குஜராத்தி பேசவேண்டும். தலைவராக வேண்டுமானால், கொல்கத்தாவிலிருந்து செல்ல





RIDN *கமல் சங்வி மற்றும் சோனல் சங்வியின் பாராட்டு விழாவில் ரோட்டரி தலைவர்கள்.*

வேண்டும் என்று நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

பாண்ட்யா, சங்வி, முன்னாள் இயக்குநர் மனோஜ் தேசாய் ஆகியோர் குஜராத்திகள், RI முன்னாள் தலைவர்கள் நிதீஷ் லஹாரிவும், ராஜேந்திர சாபூவும் கொல்கத்தாவுடன் தொடர்புள்ளவர்கள் என்பதை சுட்டிக் காட்டினார்.

மும்பையில் ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், ஆளுநர்கள், ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பினர் ஜூன் 30 முடிந்ததும் புதியதாக இயக்குநர்கள் மாற்றப்படுகிறார்கள். இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மாறுகிறார்கள். வேறு சில ரோட்டரி அமைப்புகளும் நம்மைப் போலவே சுமுகமான தலைமை மாற்றத்தைச் செய்கின்றன.

இந்தியாவிலிருந்து RI அமைப்புக்கு ஒரு பிரதிநிதிதான் இருந்துவந்தார். இப்போது இருவர் இடம்பெறுவது பெருமையாக இருக்கிறது. இதை சில ஆண்டுகளாகவே முன்னெடுத்து வந்த முன்னாள் தலைவர் மனோஜ் தேசாய் பாராட்டுக்குரியவர். இது இந்தியாவின் முக்கியத்துவத்தை அதிகரிப்பதைக் காட்டுகிறது என்றார்.

டாக்டர் பாண்ட்யா மீது தனி மதிப்பு உண்டு. அமைதியானவர், ஆழமாக சிந்திப்பவர், எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருப்பவர் என்று புகழ்ந்தார்.

CoLல் பாண்ட்யா தனது பேச் சாற்றலால் 500 மாவட்ட பிரதிநிதிகள், ரோட்டரி போர்டு, அறங்காவலர்கள், முன்னாள் RI தலைவர்கள் எல்லோரையும் திருப்தி செய்யும் வகையில் வசீகரித்துப் பேசியதை மறக்க முடியாது. இந்திய ரோட்டரி அமைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கான சரியான நபர். அவரது மனைவி மாதவி நல்ல புரிதல்கொண்ட இதமான வாழ்க்கைத் துணை என்று இருவரையும் பாராட்டினார்.

அதைப் போல் சங்வி தலைமைப் பண்புள்ள சிறந்த ரொட்டேரியன். 79 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். அவரது கூட்டாளியாக சோனல் இருக்கிறார். சங்வி, பானர்ஜி ஆகிய இரு தலைவர்களும் இந்திய ரோட்டரி இயக்கத்தை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்வார்கள் என்றார் ரவீந்திரன்.

நிகழ்ச்சியில் RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ: ஒரு சமயம், பிரிட்டன் - அயர்லாந்து ரோட்டரி (Rotary International in Great Britain Ireland - RIBI) தொடர்பான ஒரு தீர்மானத்தை முறியடித்ததில் பாண்ட்யாவின் திறமையை அவர் விவரித்தார்.

RIக்கும் RIBI அமைப்புக்கும் இடையில் தற்போதுள்ள நிலையைப் புரட்டிப் போடும் வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர பிரிட்டன் - அயர்லாந்து ரோட்டரி இன்டர்நேஷனல் (RIBI) முயன்றதை CoLல் பாண்ட்யா தனது திறமையான வாதத்தால் முறியடித்தார். அதற்கு முன்னதாக அந்தத் தீர்மானத்தை அவர் படித்த வேகத்தையும், அதன் மீது அவர் விரைந்து முடிவெடுத்ததையும் பார்த்தால் வியப்பாக இருந்தது. அவரது பேச்சினால் தீர்மானம் முறியடிக்கப்பட்டபோது, அங்கே இருந்தவர்கள், "இந்தியாவிலிருந்து வந்துள்ள இந்த நபர் யார்? இதையெல்லாம் எப்படித் தெரிந்து வைத்திருக்கிறார்?" என்று வியப்பாகப் பார்த்தனர். இந்தச் சம்பவம் எனக்கு அவர் மீதான மதிப்பை அதிகரிக்கச் செய்தது என்று புகழாரம் சூட்டினார்.

பாண்ட்யா ஷேக்ஸ்பியர், பைரன், வேர்ட்ஸ்வர்த், இந்திய காப்பியங்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசுவது அழகு... அவரைப் போலவே சங்வியும் என்னை மிகவும் கவர்ந்தவர். புவனேஸ்வரத்தில் நடந்த




மாநாட்டுக்கு என்னை அழைத்தார். நல்ல நினைவாற்றல் கொண்டவர் என்று குறிப்பிட்டார்.

ரோட்டரியின் மூத்தத் தலைவர்களை குரு என்று அழைத்த சங்வியிடம் சாபு, இப்போதெல்லாம் குரு என்று யாரையும் சொல்லவும் தயக்கமாக இருக்கிறது என்று நகைச்சு வையாகக் குறிப்பிட்டார், எல்லோரும் இவான்ஸ்டனில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் போர்டு பற்றியே பேசினர். அதை அடைவது தான் கடைசி இலக்கு என்று நினைத்துக் கொள்ளவேண்டாம். உங்களது இரண்டாண்டு கால பதவிக் காலம் ஓடிவிடும். பதவியில் இருந்தபோது நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதுதான் நினைக்கப்படும். போர்டு கூட்டத்தில் பதவிக் காலம் முடியும்போது, ஜூலை 1ம் தேதி முதல் நாம் ஒன்றும் இல்லை என்று பேசிக் கண்ணீர் விட்டவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஒன்றை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் முன்னாள் தலைவர், முன்னாள் ஆளுநர், முன்னாள் இயக்குநர் ஆகலாம். ஆனால், ஒரு போதும் முன்னாள் ரொட்டேரியன் ஆக முடியாது என்று கூறினார்.

RI இயக்குநர் C பாஸ்கர் பேசுகையில், தான் இதைப் போல் பொறுப்பு பெற்றபோது, மதுரையில் நடந்த பாராட்டு விழாவை நினைவில் கொண்டார்.

இந்தப் பொறுப்புகள் ஏதோ ராஜாவின் வேலை போல நினைத்துக் கொள்ளவேண்டாம். அவ்வளவு சுலபமான வேலை இல்லை என்பதைப் புரிந்துகொள்வீர்கள். கடுமையாகப் பணியாற்ற வேண்டும். இருந்தாலும், "நாம் இப்பணிகளை ஏற்று, முன்னெடுத்துச் செல்கிறோம் இந்தியாவை வளர்ந்த நாடுகளுக்கு இணையாக மாற்றுவதற்கு உழைப்போம்" என்ற வகையில் நமது செயல்கள் அமையவேண்டும். அதற்கேற்ற திறமையும் ஆற்றலும் இருவருக்கும் இருக்கின்றன என்றார்.

பாஸ்கர் மேலும் பேசுகையில், நம் நாடு கடந்த ஐந்தாண்டுகளில் அதிவேகமாக முன்னேறி வருகிறது. இருந்தாலும், அடித்தளத்தில், ரோட்டரி சங்க நிலையில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது பெரிய சவால். நாட்டில் 30 சதவீத ரோட்டரி சங்கங்கள் வலுவில்லாமல் இருக்கின்றன. 75 சங்கங்களுக்கு ரோட்டரி பணியே தெரியவில்லை. ஏராளமானோர் ரோட்டரியில் சேருகிறார்கள். அதே போல் ஒட்டுமொத்தமாக விலகி விடுகிறார்கள்.

ரோட்டரி சங்கங்களின் தலைவர்களுக்கு வழிகாட்டிகளாக இருவரும் திகழவேண்டும். அவர்களது திறமை, ஆற்றலை வளர்த்துக் கொள்ளப் பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தவேண்டும். நம் நாடு வளம் மிக்கது. AKS உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றாம் இடத்திலும், அறக்கட்டளை நன்கொடை அளிப்பதில் இரண்டாம் இடத்திலும், அதிகமான வெகுமதி அளிப்பதில் முதலிடத்திலும் இந்திய ரோட்டரி இருக்கிறது. அதைப் போல் உறுப்பினர் எண்ணிக்கையிலும் நல்ல இடத்தில் இருக்கிறோம். ஆனால், இத்தகைய பணியில் ஓர் ஒழுங்குமுறை கொஞ்சம் குறைவுதான் என்றார்.

ரவீந்திரன் அறிவுரைப்படி சங்வி, பாண்ட்யா உள்ளிட்டோர் அடங்கிய முக்கியமான தகவல் தொடர்புமுறையை உருவாக்கியுள்ளோம். காரணம், மற்றவர்களை நம் வட்டத்துக்குள் கொண்டுவருவதுதான் பெரிய சவால் என்று ரவீந்திரன் கூறியுள்ளார் என்றார்.

பாண்ட்யாவைப் பாராட்டிப் பேசிய RI முன்னாள் இயக்குநர்

# “இந்திய மாஃபியா”



PRID அசோக் மகாஜன் RIDN பரத் பாண்ட்யாவை கௌரவிக்கிறார். PRID கல்யாண் பெனர்ஜி, PDG (3292) பாசுதேவ் கோல்யான் அவர்களும் உடன் உள்ளனர்.

*2011–12ம் ஆண்டில் சேகர் மேத்தாவும் Y P தாஸும் RI இயக்குநர்களாக இருந்த காலத்தை நினைவுபடுத்திப் பேசிய RI முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி, ரோட்டரி போர்டு கூட்டத்தில் நாங்கள் ஏதாவது பேசினால், உடனே “இந்திய மாஃபியா கும்பல்” என்ற விமர்சனம் முணு முணுக்கப்படும். எப்போது போர்டு கூட்டம் நடந்தாலும், அதற்கு முன்பே நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து தீவிரமாக விவாதித்து சரியான உத்தியைத் தயாரித்துக் கொள்வோம். காரணம், நாங்கள் இந்தியர்கள் எல்லோரும் ஒன்று என்பதை நிரூபிப்பதற்காகவே. அதே மாதிரியான உத்தியை நீங்களும் பின்பற்ற வேண்டும் என்றார்.*

*RI அமைப்பில் சில சிறு பிரச்சினைகள் தொடர்பாக நீதி மன்றத்துக்கு இழுத்த, அது முதல் நாம் தண்டிக்கப்பட்டு வருகிறோம். உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்தி சாதனை புரிந்தபோதும், ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அதிகமான நன்கொடை திரட்டித் தந்தபோதும், RI அமைப்பின் பணிகள் எதுவும் நமக்குத் தரப்படுவதில்லை. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நமக்குள்ளே பேசித் தீர்வு காண வேண்டும். இந்தியா ரோட்டரி பணிக்கு ஏற்ற சிறந்த நாடு. ஆனால், எல்லா நீதிமன்ற வழக்குகளையும் தீர்த்துவிட்டால், இந்தியா மிகப் பெரிய ரோட்டரி நாடாக உருவாகும். ரோட்டரி என்பது நமது கவுரவத்தை காட்டிக் கொள்வதற்கான அமைப் பல்ல என்பதை உணரவேண்டும். உலகில் பல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு ஒன்றிணைந்து மனித குலத்திற்கு நற்பணிகளைச் செய்யும் அமைப்பாகும். இதையெல்லாம் செய்தால் ரோட்டரி உலகில் முதல் இடம் வகிப்போம். அதுதான் பரத், கமல் இருவருக்கும் உள்ள பெரிய சவால். உங்களுக்கு வாழ்த்துக்கள்! இறையருள் கிட்டட்டும்! என்றார்.*



அசோக் மகாஜன், 1993-94ஆம் ஆண்டு மாவட்ட ஆளுநராக இருந்தபோது மிகச் சிறந்த ரோட்டரி மாவட்டத் தலைவராக தேர்வு பெற்ற பாண்ட்யா இன்று ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார். சிறந்த தலைமைப் பண்புகள், ரோட்டரியின் விழுமியங்களைப் பாதுகாக்கும் திறன் ஆகியவை இருக்கின்றன. பாண்ட்யாவின் பேச்சை எப்போதும் மதிப்பவன் நான் என்றார்.

RI முன்னாள் இயக்குநர் Y P தாஸ் பேசுகையில், RI போர்டில் இந்தியாவின் சார்பாக மட்டுமின்றி ஒட்டுமொத்த ரோட்டரி உலகின் சார்பாகவும் நீங்கள் பங்கேற்கப் போகிறீர்கள். இரண்டு ஆண்டுக்குப் பிறகு ரோட்டரி அலுவலகத்தை எந்த நிலையில் கொண்டுவரப் போகிறோம் என்பதில்தான் உங்களது கவனம் இருக்க வேண்டும். உங்கள் அலுவல் காலம் முடிந்த பிறகு, எப்படிப் பொறுப்பை ஒப்படைத்து வரப் போகிறீர்கள் என்பது



RIDN *பரத் பாண்ட்யா, கமல் சங்வி, மாதவி மற்றும் சோனல் அவர்களுடன்* 2019–20 *மாவட்ட ஆளுநர்கள்.*

முக்கியம். எல்லோரும் உங்களைப் பற்றிப் பெருமைப்படுகின்றனர். நிறைய எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்புகளுக்கும் மேலாகப் பணிபுரியுங்கள். எல்லோரையும் எல்லா விதத்திலும் பெருமைப்படச் செய்யுங்கள் என்றார்.

TRF அறங்காவலர் சுஷில் குப்தா பேசுகையில், இருவரும் பொறுப்பேற்பதன் மூலம் இந்தியா பெரிய பங்கினை வகிக்கத் தயாராகிவிட்டது. உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உலக அளவில் இரண்டாம் இடம் வகிக்கும் நம் நாட்டில் 1.4 லட்சம் ரோட்டரி உறுப்பினர்கள் இருக்கிறார்கள், ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அதிக நன்கொடை அளிக்கிறோம் என்றாலும் "மிகப் பெரிய மக்கள் தொகையுள்ள நம் நாட்டில் 12 லட்சம் பேர் ரோட்டரி உறுப்பினர்களாக இருக்க வேண்டும்" என்று RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மறைந்த சாம் ஓவோரி கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றார்.

வெளிப்படைத் தன்மை, செயல்பாடு ஆகியவற்றில் கவனம் தேவை. ஒட்டுமொத்த ரோட்டரி உலகமும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அளித்த 35 நன்கொடைகளில் 34 நன்கொடைகள் சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே ஒரு நன்கொடையைப் பயன்படுத்துவதில் சவால் இருந்தது. அது அறக்கட்டளைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. எதிலும் சரியான பார்வை முக்கியம் அதை மறந்துவிடக் கூடாது என்று அறிவுறுத்தினார் குப்தா.

கொல்கத்தாவில் கோலாகல விழா:

கொல்கத்தாவில் நடைபெற்ற கூட்டம் வண்ணமயமாக அமைந்தது. 3291, 3240, 3250, 3261, 3262, 3292, 3120 ஆகிய ஏழு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய RI முன்னாள் இயக்குநர் சேகர் மேத்தா, கமல் சங்வி, பாரத் பாண்ட்யா ஆகிய இருவரையும் பாராட்டிச் சிறப்பித்தார். இந்த வண்ணமயமான நிகழ்ச்சியில் ரோட்டரியின் 8 மாவட்ட ஆளுநராக நியமனம் பெற்றோர், மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்க இருக்கும் 11 பேர், ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ஒருவர், ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர்கள் நான்கு பேர் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய குப்தா, ரோட்டரி வரலாற்றில் இது சாதாரண நல்ல நாள் அல்ல, மகத்தான சிறப்புக் குரிய நல்ல நாள் ஆகும் (Lagta hai ke Rotary mei is part of the world se acchhe din hi nahi, bahut acchhe din aane vale hai) என்றார்.

சங்வி எனது தம்பியைப் போல... என்று கூறிய மேத்தா, அவருடன் இணைந்து பல ஆண்டுகள் பணியாற்றிய சம்பவங்களையும் கொல்கத்தா மண்டல நிறுவனத்தையும் பல்வேறு எழுத்தறிவு உச்சி மாநாடுகளை நடத்தியபோது உதவியதையும் நினைவுகூர்ந்தார்.

கமல் எளிதாக நண்பர்களை இணைத்துக் கொள்வார். பரத்துடன் இணைந்து பணியாற்றுவது உற்சாகம் அளிக்கும் என்றார் அவர்.

விழாவினரை RI முன்னாள் இயக்குநர் மனோஜ் தேசாய் வரவேற்றார்.

அவர் பேசுகையில், இந்த ரோட்டரி இன்டர்நேஷனலில் இயக்குநராக இடம்பெறும் இரண்டாவது இந்திய டாக்டர் பாண்ட்யா என்றார். பாண்ட்யா, சங்வி ஆகியோருடன் இணைந்து 2010ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகப் பணியாற்றியதைக் நினைவுக் கூர்ந்தார். அத்துடன், தான் இயக்குநராக இருந்தபோது, மாவட்ட ஆளுநர்கள் குழுவினருடன் சிறந்த வகையில் பணியாற்றியதை தேசாய் நினைவுபடுத்தினார். இயக்குநர்களாகப் பொறுப்பேற்கும் இருவரும் குஜராத்திகள் என்று குறிப்பிட்ட அவர், அறங்காவல் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குலாம் வாஹன்வதி உள்பட ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டிலும் ஃபவுண்டேஷனிலும் இப்போது மூன்று குஜராத்திகள் இருக்கின்றனர் என்றார்.

RI முன்னாள் இயக்குநர் தாஸ் பேசுகையில் இந்தியாவின் சார்பில் தானும் மேத்தாவும் 2011-13ஆம் ஆண்டுகளில் முதல் முறையாக இயக்குநர்களாக இடம்பெற்றதைச் சுட்டிக் காட்டினார்.

நமது மண்டலத்தின் பிரதிநிதியாக தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள் கூட அதில் இடம்பெற்றிருந்தனர். இப்போது இயக்குநர்களாகும் இரு இளைஞர்களும் இந்தியாவை மிகப் பெரிய உயரத்துக்கு இட்டுச் செல்வர் என்று திடமாக நம்புகிறேன் என்றார்.

பாண்ட்யாவும், சங்வியும் ஏதாவது கோஷ்டி மனப்பான்மை வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார் தாஸ்.

சேகரும் நானும் இயக்குநர்களாக இருந்தபோது, தனித்தனியாக இரு கோஷ்டிகளில் சேரும்படி சிலர் கேட்டுக் கொண்டனர். அதற்கு நாங்கள் மசியாமல் ஒன்றாகவே இருந்தோம். அவர்களது வலையில் சிக்கவில்லை. ரோட்டரியை முன்னெடுத்துச் செல்ல தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்துவிடுங்கள். நம் எல்லோருக்கும் பெருமை சேருங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

RI முன்னாள் இயக்குநர் P T பிரபாகர் இரு புதிய இயக்குநர்களையும் பாராட்டினார். நம் நாட்டில் ரோட்டரி கொடி உயர்ந்து பறக்கும்போது, இருவரும் இந்தியாவின் பிரதிநிதிகளாக RI அமைப்பில் இடம்பெறுகிறார்கள். உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நாம் பல ஆண்டுகளாக முந்தியிருக்கி றோம். கடந்த ஆண்டு தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு 2 கோடி டாலர் (சுமார் ரூ. 133.67 கோடி) அளித்து இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். உலகளாவிய ரோட்டரி அமைப்பில் இந்திய ரோட்டரிக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இருவரும் இயக்குநர்களாகப் பங்கேற்பது நமது பாக்கியம் என்றார்.

முன்னாள் மாவட்ட ஆளுநர் J B காம்தார் இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பயிற்சிக் கருத்தரங்கில் (GETS) பாண்ட்யாவுடன் பங்கேற்ற நிகழ்வுகளை நினைவுகூர்ந்தார்.

பாண்ட்யாவும் நானும் மாவட்ட ஆளுநர் பணியில் சம காலத்தில் பணியாற்றினோம். பயிற்சி பெற்ற அணியில் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர் பரத். ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அதே போல் அன்புக்குரிய ரோட்டரி தலைவராகத் திகழ்கிறார். எந்த மாற்றமும் இல்லை. கனிவான பேச்சு, நாகரிகம், இதமான பழக்கம், அடக்கம், அன்பு கொண்ட ரோட்டரி தலைவர் என்று புகழ்ந்தார்.

ரொட்டேரியன் டாக்டர் குல்தீப் சிங் சந்து பேசுகையில், டாக்டர் பாண்ட்யா சக மருத்துவர் மட்டுமல்ல, தனது 42 ஆண்டுகால நண்பர் என்றார்.

புகழ்மிக்க டாக்டர் S S பாண்ட்யாவின் மகனாக இருந்தாலும் தன்னடக்கத்தோடு வாழ்ந்தவர், தாராளமனம் கொண்டவர். அவர் கோபப்பட்டு பார்த்ததேயில்லை.

## கேள்வி பதில்

*கொல்கத்தா நிகழ்ச்சியில் விரைவு விடை அளிக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதை PRID சேகர் மேத்தா நடத்தினார். கமல் சங்வியின் மனைவி சோனல் சங்கிவியிடம், உங்கள் கணவர் RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது எப்படி உணர்ந்தீர்கள்... என்று கேட்டதற்கு சோனல், உற்சாகமாக வும், கவலையாகவும் இருந்தது, என்றார். காரணம், டைரக்டரின் மனைவி என்பதால் என்னை எல்லோரும் இப்பொழுது டைரக்டரி என்று அழைப்பார்கள். முன்பு அவர் ஆளுநராக இருந்தபோது, என்னை எல்லோரும் ஆளுகை என்று தமாஷாக அழைத்தனர் என்றார். பாண்ட்யாவின் மனைவி மாதவியும் மகள்கள் இருவரும் ஆஸ்திரேலியா மெல்பர்னில் இருந்தனர். அங்கிருந்து காணொலி மூலம் வாழ்த்து தெரிவித்து பேசிய அவரது இளைய மகள் சாஷ்வி, உங்களது பணியில் முழுமையாக ஈடுபடுவதற்காக உங்களை இனிமேல் கொஞ்சமாகத் தான் தொந்தரவு செய்யப் போகிறேன் என்று நகைச் சுவையுடன் குறிப்பிட்டார்.*

*காணொலி மூலம் தோன்றிய கமல் சங்வியின் மகனும், RI இயக்குநரின் மகன் என்பதால் எனக்கு ஏதேனும் சலுகைகள் உண்டா என்று கேட்டார். நிகழ்ச்சியில் பேசிய சங்வி, உலகில் பல இடங்களில் அமைதிக்கான மையங்கள் இருக்கின்றன. நமக்குள் அமைதி காண்பதற்கான மையம் ஏதும் இல்லை. எனவே, அமைதி, சமாதானத்துக்கான பல நிகழ்ச்சிகளை நமக்குள்ளே நடத்துவோம் என்றார். பாண்ட்யா பேசுகையில், தலைமை கிடைப்பது அற்புதமானது. ஆனால், பதவி முடியும்போது மன நிறைவுடன் பதவி இறங்க வேண்டும் என்றார். சங்வி தனக்கு முன்னுதாரணமாக பினோதாஜியைக் குறிப்பிட்டார். (PRIP) கல்யாண் தான் தனக்கு வழிகாட்டி என்று பாண்ட்யா குறிப்பிட்டார். அமைதி குறித்து கேட்டதற்குப் பதிலளித்த பானர்ஜி, நமது தனிப்பட்ட சிக்கல்கள் நமது மண்டலத்தின் புகழுக்கு ஊறு ஏற்படுத்தும். எனவே, பொறுமையாகவும் புத்திசாலித்தனமாகவும் கையாள வேண்டியிருக்கிறது என்றார்.*



RID C *பாஸ்கர்,* RIDNs *பரத் பாண்ட்யா, கமல் சங்வி மாவட்ட ஆளுநர்கள் மற்றும்* 2018–19 *ஆளுனர்கள்.*

ஆணவத்துடன் நடந்துகொண்டதில்லை. கூர்த்த கவனம் கொண்டவர். தீவிர புத்தக வாசிப்பாளர். சொல்லாற்றல் மிக்கவர். மும்பையில் இருக்கும் மருத்துவர்களிலே நோயாளிகளிடம் குறைந்த கட்டணம் வசூலிப்பவர் இவர்தான் என்றார்.

பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்த கமல் சங்வியும், பாண்ட்யாவும் இணைந்து கடுமையாகப் பணி புரிவதாக உறுதி கூறினர். எல்லா சவால்களையும் எதிர்கொண்டு செயல் படுவோம். நம் நாட்டிலும் உலக அளவிலும் அமைதி தவழ்வதற்காகப் பாடுபடுவதற்கே முன்னுரிமை அளிப்போம். உணவு, வீடு, கல்வி, பார்வையற்றோர்க்கு விழிகள், ஆகியவை கிடைக்க உதவிக்கரம் நீட்டுவோம் என்றார்.

பாண்ட்யா பேசுகையில், இரு வித உணர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த உயரிய பொறுப்பை ஏற்கிறோம் என்ற உற்சாகம் ஒரு புறம், தோள் மீது நிறைய கடமைகள் ஏற்றப்பட்டுள்ளதே என்ற கவலை மறுபுறம் என்றார்.

பாராட்டுகளுக்கு நன்றி கூறிய அவர், “யாருக்கு அதிகம் அளிக்கப்படுகிறதோ, அவரிடம் நிறையவும் எதிர்பார்க்கப்படும்” என்ற புகழ்மிக்க வாசகத்தை நினைவுபடுத்தினார். இந்த வரி எனக்குப் பெரிய பொறுப்பு உண்டு என்பதுடன் பெரிய வாய்ப்பும் உண்டு என்பதை உணர்த்துகிறது. நேர்மையான பாதையை நிறுத்த மாட்டேன். எனக்கு திருப்தி ஏற்படும் வரையில் ரோட்டரி சிறந்த வழியில் செல்ல வேண்டும் என்று தொடர்ந்து உழைப்பேன் என்றார்.

பல பெரிய காரியங்களைச் செய்வதற்கு கிடைத்த வாய்ப்பு இது. என் தந்தை கற்றுத் தந்த நேர்மையான சுயநலமற்ற சேவைகளுக்கு மதிப்பு உண்டு. ரோட்டரி சங்கங்களை சிறப்பாக இயக்குவதே எனது முக்கியமான பணி. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் நேர்மை நீடிக்கும். எல்லா யோசனைகள், மாற்றுச் சிந்தனைகளை வரவேற்பதில் தாராளமாக இருப்பேன். தாராளமாக இருப்பது என்றால் கொள்கையில் சமரசம் செய்துகொள்வதல்ல என்றார்.

நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த ரோட்டரியின் 3141 மற்றும் 3142 ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நன்றி கூறிய அவர், D 3140 பிரிக்கப்படாத நிலையில் இருந்தபோது பணியாற்றியவன் நான். இரு மாவட்டங்களின் ஆளுநர்களான பிரஃபுல் சர்மா, B M சிவராஜ் ஆகியோர், போரிவிலி ரோட்டரி உறுப்பினர்கள் ராஜு சுப்பிரமணியன் ஆகியோருக்கும், எனது நலன் விரும்பி, வழிகாட்டி, விமர்சகர், நண்பரான என் மனைவி மாதவி, இரு புதல்வியர் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆளுநர்கள் பிரஃபுல் சர்மா, சிவராஜ் தலைமையிலான கமிட்டி ஏற்பாடு செய்திருந்தது. முன்னாள் மாவட்ட ஆளுநர் ராஹுல் திம்பாடியா, வீரேன் ஜேத்வா, போரிவிலி ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் வினய் வியாஸ், மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சசிசர்மா, ஆசிஷ் கங்குலி ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

கொல்கத்தாவில் நடந்த பாராட்டு நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர்கள் விவேக் குமார் (D 3250), அஜய் அகர்வால் (D 3262), ரஞ்சீத் சிங் (D 3292), சஞ்சய் கிரி (3292 ஆகியோர் பரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோரைப் பாராட்டிப் பேசினர்.■

படங்கள்:ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ
வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# சார்லஸ் கெல்லர் — ஒரு முழுமையான மனிதர்

ராஜேந்திர K சாபு

*"ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரே வழியில் தான் முடிவடைகிறது. அவர் எப்படி வாழ்ந்தார் எப்படி இறந்தார் என்ற விவரங்கள் மட்டுமே ஒருவரை மற்றொருவரிடம் இருந்து வேறுபடுத்துகிறது"*

*— எர்னஸ்ட் ஹெமிங்வே*

சக் கெல்லர் என்றும் அழைக்கப்படு பவராகிய சார்லஸ் சி கெல்லர் ஒரு ஞானப் புதையல், அறிவுக்கடல் மற்றும் அனுபவத்தின் ஒரு பெருங்கடலும் ஆவார். இவர் சமகாலத்திய ரோட்டரி துவங்க ஒரு தூணாக இருந்தவர். இவர் ரோட்டரி சங்கத்தின் வரலாற்றில் ஒரு அங்கமாக மட்டுமே இல்லாமல், பல வழிகளில் பல திருப்பங்களைக் கண்டு, வரலாறு படைத்த ஒரு முக்கிய நபர் ஆவார்.

நான் முதல் முறையாக சக் அவர்களை ஏப்ரல் மாதம், 1983ம் ஆண்டு மாண்டி கார்லோவில் சந்தித்ததை நினைத்துப் பார்க்கிறேன். அது எனது பன்னாட்டு ரோட்டரி இயக்குநர் பதவியின் இரண்டாம் ஆண்டு. மேலும் அங்கு நடைபெற்ற மிகவும் குறிப்பிடத்தக்க Council on Legislation கூட்டத்தின் தலைவராக அவர் இருந்தார். அந்த கூட்டத்தில் RI முன்னாள் தலைவர் கிளெம் ரினோஃப் அறிமுகப்படுத்திய "சுகாதாரம், பசி மற்றும் மனிதநேயம்' மூலமாக துவங்கப்பட்ட போலியோ ஒழிப்பு திட்டத்தை பற்றி விவாதம் செய்து கொண்டிருந்தனர். பெரிய ஜாம்பவான்களும் முன்னாள் தலைவர்களும், ரோட்டரியின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மட்டுமே சங்கங்கள் இருக்கின்றன என்றும், கூட்டு நிறுவனத் திட்டங்களை ஏற்பதற்கான எந்த விதிமுறையும் இல்லை எனவும் கூறி எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் போலியோ ஒழிப்பு திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு இதை மாற்றியமைக்க வேண்டும்.

தலைமைப் பொறுப்பு வகித்த சக், இரண்டு பக்க வாதங்களையும் பாகுபாடின்றி கேட்டு இறுதியில், சர் கிளெம் ரினோஃப் அவர்களின் முயற்சிக்கும் -இயக்குநர் கள் வாரியத்தின் நடவடிக்கைக்கும் ஒப்புதலளித்து தீர்மானம் நிறைவேற்றினார். அந்தக் குறிப்பிட்ட தலைப்பிலான விவாதத்தை சக் நடத்திய விதம் உண்மையில் அவரின் மேல் உள்ள மதிப்பை உயர்த்தியது. இந்த கவுன்சிலில் விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் நகைச்சுவையுடனும், பொறுமையுடனும்,




PRIP *சார்லஸ் கெல்லர், அவர் மனைவி கரோல் சான் டியாகோ* 2017 *பன்னாட்டு மாநாட்டில்.*

ரஷிதா பகத்

நேர்மையுடனும் சக் வழிநடத்திச் சென்ற விதம், ஒரு பாடமாக அமைந்தது.

பன்னாட்டுக் கூட்டங்கள் மற்றும் மற்ற குழுக் கூட்டங்களில் நான் சக் அவர்களை சந்தித்த போதெல்லாம், ரோட்டரி பற்றி அவருக்கு இருந்த அறிவினால் நான் கவரப்பட்டேன்.

குறிப்பிட்டுச் சொல்வதென்றால் -டென்னசி, நாஷ்வில்லியில் பன்னாட்டுக் கூட்டத்தை முடித்துவிட்டு நானும் எனது நெருங்கிய நண்பர்கள் இருவரும், மறைந்த பில் சர்ஜெண்ட் மற்றும் மறைந்த ஜார்ஜ் ஆர்சினாக்ஸ் உடன் 1986 பிப்ரவரி 23ஆம் தேதி பயணித்தது இன்னும் தெளிவாக என் நினைவில் இருக்கிறது. ரோட்டரி எப்படி பிறந்தது என்ற தலைப்பில் பேச சட்டனூகா சங்கம் என்னை அழைத்து இருந்தார்கள். RI தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நியமனக்குழு உறுப்பினர்கள்-சக் கெல்லரை 1987-88-ஆம் ஆண்டுக்கான தலைவராக தேர்ந்தெடுத்திருந்தார். ஆனால் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னாள் இயக்குநர் ஒருவர் அவரது தேர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். நாங்கள் மூவரும் விமானப் பயணத்தின்போது இதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். ஒரு தனிநபரும் அவருடைய சங்கமும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வேட்பாளருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியுமா என்றும், $ 50,000 செலவில் உலகம் முழுவதும் நடைபெற்ற தேர்தலை மாற்ற முடியுமா என்றும் நான் கேட்டேன். அந்த காலகட்டத்தில், தேர்தல் அஞ்சல் வாக்கு மூலம் நடைபெற்றது.

சிகாகோவில் COL, இன்னும் இரண்டு மாதத்தில் நடைபெறவிருந்தது மற்றும் ஒரு புதிய தீர்மானத்தை முன்மொழிய போதிய கால அவகாசம் இல்லை. இதை முறியடிக்க ஒரே ஒரு வழிதான் இருந்தது. ஒரு குறிப்பிட்ட சதவீத சங்கங்கள், எதிர்ப்பை ஏற்றுக்கொள்ளும் விதமாக ஏற்கெனவே உள்ள தீர்மானங்களில் திருத்தத்தை கொண்டு வர முன் வரலாம். அந்த திருத்தமும் ஏற்கனவே உள்ள தீர்மானங்களின் கருத்தை ஒத்திருப்பதாக இருக்க வேண்டும். அது மிகவும் சிரமமான ஒரு வேலையாக இருந்தது, ஏனெனில் நீதிபதி வில்பர் பெல் அவர்கள் கவுன்சிலின் தலைவராக இருந்தார். ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தைத் தேர்ந்தெடுத்து, நீதிபதியாக பணிபுரிந்த - ஜார்ஜ் ஆர்சினாக்ஸ் அவர்களிடம், இந்த திருத்த மசோதா கொண்டு வரும் வேலையைக் கொடுத்து விட்டோம். இந்த வியூகத்தை பில் சர்ஜன்ட்டும் ஒத்துக் கொண்டார். எந்த ஒரு தீர்மானத்தையும் உலகில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கையில் ஒரு சதவிகித சங்கங்கள் சேர்ந்தால் தான் எதிர்க்க முடியும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சக் கெல்லர் போன்ற ஒரு நல்ல மனிதரின் தேர்வு எதிர்க்கப்பட வேண்டுமா என்ற கேள்வியே இதற்கான தூண்டுதலாக அமைந்தது. ஆனால் இந்தத் தீர்மானம் அடுத்த ஆண்டிலிருந்து தான் நடைமுறைப்படுத்தப்படும். சக் கெல்லர் இந்த எதிர்ப்பைச் சமாளித்து மாபெரும் வெற்றியை கைப்பற்றினார்.

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தின் கோஷன் என்ற ஊரில் 1923 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி சக் கெல்லர் பிறந்தார். அவர் பென்சில்வேனியாவில் உள்ள கலிபோர்னியா ரோட்டரி சங்கத்தில் 1950 ஆம் ஆண்டு தமது 27 ஆம் வயதில் சேர்ந்தார். RI தலைவர் ஆவதற்கு முன்பு RI இயக்குநர், அறங்காவலர் தலைவர், இருமுறை Council on Legislation தலைவராகவும், பன்னாட்டு ரோட்டரியின் பல்வேறு கட்டமைப்புகளின் தலைவராகவும் சக் பணியாற்றியிருக்கிறார். அண்மையில் ரோட்டரி அறக்கட்டளை நூற்றாண்டு விழா கொண்டாட்ட புத்தகக் குழு உறுப்பினராக இருந்தார்.

கலிபோர்னியா மாகாண ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், சக் கெல்லர் ஆங்கிலம் மற்றும் சமூக அறிவியல் பிரிவுகளில் BS Ed படித்து முதல் வகுப்பில் தேறினார், மேலும் Distinguished Service விருதையும் பெற்றார். சட்டப் படிப்பு படித்துவிட்டு வாஷிங்டன் திரும்பியவுடன், வழக்கறிஞராக தனது வாழ்க்கையைத் துவங்கினார். Peacock, Keller, Yohe, Day மற்றும் Ecker சட்ட நிறுவனத்தின் பங்குதாரராக இருந்தார். பென்சில்வேனியா வழக்கறிஞர் கூட்டமைப்பின் நிருவாகக் குழு உறுப்பினராக பணியாற்றி, பின்பு 1983-ம் ஆண்டு அதன் தலைவராக பொறுப்பேற்றார். 1986-ல் அமெரிக்க சட்டத் துறையால் பயிற்சி வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் பல சமுதாய அமைப்புகளின் நிர்வாகியாக பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின் போது போர்விமானத்தின் விமானியாக பணியாற்றிய இவர் பின்னர் அமெரிக்க விமானப்படையில், Judge Advocate General பிரிவில் பணியாற்றினார். 1972-ல் லெப்டினண்ட் கர்னல் ஆக பணி ஓய்வு பெற்றார்.

RI தலைவராக அவர் பணியாற்றிய பொது "ஒன்றிணைந்து சேவை செய்வோம் - அமைதிக்காக அர்ப்பணிப்போம்'' என்பதை ரொட்டேரியன்களின் மையக் கருத்தாக அவர் வழங்கினார்.

அவருடன் நான் கொண்ட உரையாடல்களை எண்ணிப்பார்க்கையில், நான் RI பதவியை முடிக்கும் தருணத்தில் ஓர்லாண்டோவில் நடந்த மாநாட்டில் அவர் சொன்ன, "ராஜா, நியமனக் குழு உங்களை தேர்ந்தெடுத்தபின், அவர்கள் சரியான நபரைத்தான் தேர்வு செய்தார்களா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால் இப்பொழுது நான் எண்ணியது தவறு என்று நீங்கள் நிரூபித்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது,'' என்றார். இதுவே நான் பெற்ற மிகச் சிறந்த பாராட்டாகும்.

சக் உடன் பல குழுக்களில் பணியாற்றியதில் பெருமிதம் அடைகிறேன். நான் TRFயின் அறங்காவலர் தலைவராக இருந்தபோது துவக்கப்பட்ட ரோட்டரி அமைதிக் குழு மிகவும் குறிப்பிடத்தக்கது. நான் தலைவராக இருந்தபோது, சக் துணைதலைவராக இருந்தார். என் பதவி காலத்திற்குப் பின் அவர் தலைவராகப் பொறுப்பேற்றார். அவர் என்னை விட மிகவும்



PRIP *சார்லஸ் கெல்லர்* 2017 RI *பன்னாட்டு மாநாட்டில்* RI *தலைவர்களுடன்.*

மூத்தவராக இருந்தாலும் கூட, நெறிமுறையை அவர் ஒருபோதும் மறந்ததே இல்லை. உறுப்பினர்களின் கருத்துகளுக்கு நேர்மை யாகவும் ஜனநாயக முறைப்படியும் அவர் மரியாதையளித்தார். சில நேரங்களில் முன்னாள் தலைவர்களின் கவுன்சில் உள்ளிட்ட மற்ற குழுக்களிலும் சில பிரச்சனைகள் குறித்து எங்களுக்கு வலுவான கருத்துவேறுபாடு இருந்தது. தொடக்க காலத்தில் அவர் எனக்கு வழங்கிய ஆலோசனை எனக்கு இன்னும் நினைவிருக்கிறது: ''உங்களிடம் ஒரு நல்ல கருத்து இருந்து அது பொருத்தமானதாக இருக்கும் என்று நீங்கள் உறுதியாக நம்பினால், எந்தவித பயமும் இல்லாமல் அதைத் தொடருங்கள்.'' எங்களுடைய விவாதத்தின்போது அத்தகைய எதிர்ப்புகளை நாங்கள் எதிர்கொண்ட பின்னரும் கூட, அடுத்த நாள் நாங்கள் மறுபடியும் நண்பர்களாகப் பழகுவோம். எங்களுக்கு இடையிலிருக்கும் பரஸ்பர மரியாதை ஒருபோதும் குறையாது.

சக் பற்றி நான் சிந்தித்துப் பார்க்கும்போது என்னுடைய உணர்வுகளைப் பொறுத்தவரை, ''நாங்கள் ஒன்றாக இருந்தோம். மற்ற எல்லாவற்றையும் நான் மறந்துவிடுகிறேன்,'' என்ற வால்ட் விட்மேனின் கவிதை முற்றிலும் உண்மையாக இருக்கிறது.

உஷாவுக்கும் எனக்கும் பழக்கமான அவருடைய இரண்டு மனைவியரைப் பற்றிச் சொல்லாமல் சக் அவர்களின் கதை முழுமையடையாது. சக் மிகவும் அன்பாக நேசித்த லோ, விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார். அதன் பின்னர் மற்றொரு அன்பான பெண்மணி கரோல் அவருடைய வாழ்க்கையில் வந்தார். எல்லா நேரங் களிலும் அவரைப் பார்க்க முடியும் எனத் தோன்றும் அளவுக்கு அவர் ரோட்டரி குடும்பத்துடன் ஒன்றுக்குள் ஒன்றாகி விட்டார்.

சக் தன்னுடைய 92 வயதிலும் கூட மிகத் தீவிரமாக செயல்பட்டதன் மூலம் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினார். அதன் பிறகு, சர்வதேசக் கூட்டங்களுக்கு வருவதை நிறுத்திக்கொள்வதற்கான நேரம் வந்துவிட்டது என்று அவராகவே சொன்னார். கடந்த கூட்டத்திலும் மாநாட்டிலும் அவர் கலந்துகொள்ளாதது எங்களுக்கு மிகவும் வருத்தமளிப்பதாக இருந்தது. உண்மையில், அவரைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அவருடைய ஞாபகம் இருந்துகொண்டே இருக்கும்.

அத்தகைய மனிதருக்கு, இந்த உலகத்தை விட்டுச் சென்ற பின் அவருடைய வாழ்க்கை உண்மையிலேயே கொண்டாடப்பட வேண்டும். நம்மைப் படைத்தவரை சொர்க்கத்தில் சந்திக்கும் போது, ''புவியில் வசிக்க நீங்கள் வழங்கிய வாய்ப்புக்கும் வாழ்க்கைக்கும் நன்றி,'' என்று ஆண்டவனிடம் அவர் சொல்வார்.

சக் ஒரு முழுமையான ரொட்டேரியனாகவும், மனிதராகவும் இருந்தார்.

இதை எழுதியவர்
PRIP (1991-92)

# PRIP கெல்லிடமிருந்து ஓர் மதிக்கத்தக்க கடிதம்

Charles C. Keller
Past President (1987-88)
Rotary International
Rotary Foundation Trustee Chairman (1992-93)
Rotary Foundation Trustee (1998-94)

February 5, 2016

230 Glen Arden Circle
Washington, PA 15301
724-514-7708 (home)

Bus: 724-222-4520
~~Res: 724-938-9193~~
Fax: 724-222-3318
E-Mail: CKeller@PeacockKeller.com

Rasheeda Bhagat, Editor
Rotary News Trust
The Dugar Towers, 3rd Floor
34 Marshalls Road
Egmore
Chennai-600 008, India

Dear Editor Rasheeda:

I have been receiving "The Rotarian Magazine" and regional publications for many years and I enjoy them because they give a full picture of what Rotary is doing worldwide.

I have just finished reading the January issue of "Rotary News" and find it one of the best issues of a regional publication I have ever seen.

To start off with, the color pictures were extraordinary and very attractive. The various reports on the Jaipuria Institute were interesting and informative. The coverage of the Centennial plans for The Rotary Foundation were well done. I think the article on how Rotary International chooses its presidents, written by PRID Thomas was interesting and exceptionally informative. President Ravi's "Report Card" was very well done.

Over all, it gave a very enlightening picture of how Rotary performs and develops in India. It honestly reports the pluses and the minuses, the tremendous service activity on the one hand and the election disputes on the other hand.

I write to congratulate you on an outstanding issue. With best wishes,

Ever sincerely,

By: Charles C. Keller
Charles C. Keller
PRIP 1987-8

CCK/bad

*Rotarians-United in Service-Dedicated to Peace*

# PDG அசோக் கோஷுக்கு சைமன் மாஸ்டர் சேர்மேன் விருது

ரோட்டரி செய்திக்குழு

D 3011 ரோட்டரி சங்கத்தின் முன்னாள் ஆளுநரும் PHI Learning தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான அசோக் K. கோஷ் அண்மையில் சைமன் மாஸ்டர் சேர்மேன் விருது பெற்றார்.

இந்தியாவிலிருந்து இத்தகைய உயரிய விருது பெறுவோரில் இவர் நான்காவது நபர். லண்டன் புத்தகத் திருவிழாவில் அண்மையில் நடைபெற்ற 2018ம் ஆண்டு சர்வதேச சீரிய பணிக்கான விருதுக் குழு தி பப்ளிஷர்ஸ் அசோசியேஷனுடன் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் இந்த விருது அளிக்கப்பட்டது. உலகளாவிய பதிப்பகப் பணியில் அவர் செலுத்திய பங்களிப்பைப் பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்திய பதிப்பாளர்கள் கூட்டமைப்பு (Federation of Indian Publishers) மற்றும் இந்திய ரெப்ரோகிராபிக் உரிமைகள் அமைப்பு (Indian Reprographic Rights Organisation) ஆகியவை அசோக் கோஷைக் கவுரவ ஆலோசகராக (Honorary Adviser) நியமித்துள்ளதன் மூலம் அவருக்கு சிறப்புநிலைத் தலைமை (President Emeritus) கவுரவத்தை அளித்துள்ளன.



# புதிய RI இயக்குநர்



இடதுபுறத்திலிருந்து : மாதவி பாண்ட்யா, DGN தீரன் தத்தா, PDGs மோகன் பலேஷா, விஜய் ஜலான், விஜய் குப்தா, RIDN பரத் பாண்ட்யா, PDG கிஷோர் கேடியா, RIDN கமல் சங்வி, PDGs ரமேஷ் அகர்வால், நரேந்திர குமார் ஜெயின் மற்றும் சோனல் சங்வி.



PRIDs சேகர் மேத்தா, YP தாஸ், PRIPs ராஜேந்திர சாபு, KR ரவீந்திரன், RID C பாஸ்கர் மற்றும் PRID PT பிரபாகர்.

# களுக்கு பாராட்டு விழா






PRIDs Y P தாஸ், அசோக் மகாஜன் மற்றும் மனோஜ் தேசாய்.



PRIP கல்யாண் பெனர்ஜி, PDG விஜய் ஜலான், DGE பிங்கி படேல், பினோட்டா பெனர்ஜி, ஷர்மிஷ்டா தேசாய் மற்றும் TRF அறங்காவலர் சுஷில் குப்தா.



RIDN பரத் பாண்ட்யா மற்றும் மாதவி பாண்ட்யா.



RIDN கமல் சங்வி மற்றும் சோனல் சங்வி

PDG அசோக் டான்டட், DGND கஜேந்திர நரங், RID C பாஸ்கர், RIDN பரத் பாண்ட்யா, DGE குஸ்தாத் அங்கலேசாரியா, PDG நிதின் தஃப்ரியா, DGN தீரண் தத்தா மற்றும் PRID PT பிரபாகர்.



படங்கள் : ரஷிதா பகத்; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

**Rotary International South Asia Office, Pullman / Novotel Commercial Tower, First Floor, Asset No.2, Hospitality District, Aerocity (Near IGI Airport), New Delhi 110037**

## ரோட்டரி சான்று (2017–18)

ரோட்டரி சான்றினை (Rotary Citations) பெறுவது மிகப் பெரிய கவுரவம் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவர் இயான் ரிஸ்லி கருதுகிறார். அனைத்து ரோட்டரி சங்கங்களும் அந்த சான்றினைப் பெறுவதற்குப் பாடுபட வேண்டும். அதற்கு, எல்லாச் செயல்பாடுகளையும் முடித்துவிட்டு, ரோட்டரிக்கு சாதனை விவரங்களை ஜூன் 30ம் தேதிக்குள் தெரிவித்துவிட வேண்டும்.

ஒவ்வொரு சான்றினையும் பெறுவதற்கு எப்படி எங்கே தெரிவிப்பது என்று 2017–18 Rotary Citations Achievements Guide வழிகாட்டியுள்ளது.

My Rotaryல் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் அந்த இணையத் தொடர்பில் ரோட்டரி சங்க சான்று குறித்த விவரத்தைப் பார்க்கலாம். அதில், Club & District Administration என்ற பிரிவில் Manage என்பதன் கீழ் Report என்ற பகுதியைத் துழாவி அதனுள்ளே Awards என்ற பிரிவைப் பார்க்கவும்.

ரோட்டரி சங்கத்தினர் ஆற்றலோடும் புதியவர்களை ஈர்க்கும் வகையிலும் செயல்படு வதற்குத் தூண்டுதலாக இருக்கும் இலக்குகளும் இளம் ரோட்டரியினர் மற்றும் சிறுவர் ரோட்டரியினருக்கான ரோட்டரி சான்றுகள் (Rotary Citations for Rotaract and Interact Clubs) இடம்பெற்றுள்ளன. இளைஞர் ரோட்டரி மற்றும் சிறுவர் ரோட்டரி சான்று சாதனை வழிகாட்டுதல்கள் (Rotaract Citation Achievement Guide and Interact Citation Achievement Guide) ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டுக்கான மாவட்ட ஆளுநர்கள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மின்னஞ்சல் மூலம் தங்களது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வர். அவற்றைத் தங்களது ரோட்டரி, ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கத்தினருக்கு அளிக்கலாம்.

இது தொடர்பான மின்னஞ்சல் முகவரி: rotarysupportcenter@rotary.org.

## நன்கொடை, பங்களிப்புகளைச் செலுத்துவதற்கான வழிமுறைகள்

- நடப்பு நிதியாண்டில் (2017–18) TRFக்கான நிதியுதவிகள் வரும் ஜூன் 30ம் தேதிக்குள் வந்தடைவதை உறுதி செய்ய வேண்டும். அதைப் போல் ஆன்லைன் நிதிஅளிப்பதும் ஜூன் 30ம் தேதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.
- இந்திய நன்கொடையாளர்கள் தங்களது நிதியை Rotary Foundation (India) இணைய தளமான www.rotaryfoundationindia.org என்ற முகவரியின் மூலமாகவோ ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் www.rotary.org என்ற இணையதளம் மூலமாகவோ செலுத்தலாம். அதற்கு வருமான வரிச் சட்டத்தின் 80G பிரிவின் கீழ் சலுகை உண்டு.

## நன்கொடைகள் வழங்குவதில் மாறுதல் செய்வதற்கு

TRFக்கு முந்தைய ஆண்டில் ஒரு தலைப்பின் கீழ் அளிக்கப்படும் நன்கொடைத் தொகையை வேறு ஒரு தலைப்பின் கீழான நன்கொடைக்கு மாற்றுவதாக இருந்தால், நன்கொடை அளிக்கப்பட்டு 90 நாட்களுக்குள்தான் மாற்றிக் கொள்ள இயலும். அந்த மாறுதலுக்கான காலம் ஒரே ரோட்டரி நிதி ஆண்டுக்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். இந்த விதிமுறைக் கடுமையாகப் பின்பற்றப்பட்டால்தான் ஆண்டுதோறும் நடத்தப்படும் கணக்குத் தணிக்கை நிதி நிலை அறிக்கை, மாவட்ட ஒதுக்கீட்டு நிதியிலும் ஓர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க இயலும்.

## 2018ம் ஆண்டு ஜூலை மாத பட்டியலுக்கான உறுப்பினர் அறிக்கை

- ரோட்டரி சங்க செயலகங்கள் உறுப்பினர்கள் விவரத்தை அவ்வப்போது புதுப்பிக்க வேண்டும். 2018, ஜூன் 30ம் தேதி வரையில் புதிய உறுப்பினர் சேர்க்கை, உறுப்பினர் நீக்கம். இந்த மாற்றங்கள் கடந்த கால விவரங்களாக இருக்கக் கூடாது.
- சங்க உறுப்பினர்கள் குறித்த நடப்பு கால விவரத்தை வைத்திருக்க வேண்டும்.
- சங்க இன்வாய்ஸ் காகிதமில்லா முறையில் பெற My Rotaryஐ பார்க்கவும்.

## உலகளாவிய மானிய உதவிக்கு சமுதாயத் தேவை குறித்த மதிப்பீடு

மனிதாபிமான சேவைகள், தொழில் கல்விப் பயிற்சிகள் ஆகியவற்றுக்காக உலகளாவிய மானியம் கோரி விண்ணப்பிக்கும் எந்த ரோட்டரி சங்கமும் 2018ம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி முதல் தேவை குறித்த மதிப்பிட வேண்டும். அதன் விவரம் விண்ணப்பப் படிவத்தில் இடம்பெற வேண்டும்.

## மானிய உதவிப் பணிக்கான ஊழியர்கள்

ஃபவுண்டேஷனின் தேவைகளுக்கான திட்டங்களுக்கான விண்ணப்பங்களை ஆய்வு செய்வது, திட்டங்களுக்கு உதவுவோருக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளவும் மானிய உதவி அலுவலருடன் தொடர்பு கொள்ளவும் இதர தேவைகளுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல்: grants@rotary.org.

## கெடுதேதி குறித்து

உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க கடைசிநாள்: ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் படிப்பைத் தொடங்குவோர் உலகளாவிய உதவித் தொகைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2018, ஜூன் 30ம் தேதி அளிக்கப்பட வேண்டும்.

# RIPE பேரி ரஸின், ரோட்டராக்டர்கள் - ஓர் சந்திப்பு

ஜெய்ஸ்ரீ

இது ஒரு மணிநேர சந்திப்பு தான், ஆனால் அது DRRகளுக்கு, “ஊக்கம் பெறுவதற்கான ஒரு 60 நிமிட வாய்ப்பாக இருந்தது. அவர் மிகவும் பிரமாதமானவர், உயிர்மை நிறைந்தவராக இருக்கிறார் என்று ஒரு DRR குறிப்பிட்டார், “அவர் நம்மில் ஒருவர் போல் இருக்கிறார்” என மற்றொருவர் குறிப்பிட்டார்.

மும்பையில் நடைபெற்ற மாவட்ட ரோட்டராக்ட் மண்டல நிறுவனத்தின் கூட்டத்தில், இந்தியாவில் இருக்கும் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் (DRRs) RI தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேரி ராஸின் அவர்களை, பிரத்யேகமாக சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர். முன்னாள் DRR, RC பாம்பே மிட்டவுன் சீலேண்ட், D 3141யின் உறுப்பினருமான ரஜத் மேனன் இந்த சந்திப்பை ஒருங்கிணைத்தார்.

DRRகளிடையே தன்னுடைய சுருக்கமான உரையைத் தொடங்கும் போது, ‘‘என்னுடைய மேலங்கியை கழற்றிவிட்டு பேசக்கூடிய இந்த மாதிரி ரோட்டரி சந்திப்பு எனக்கு உற்சாகம் அளிக்கிறது,’’ என்று ராஸின் சொன்னார். போலியோ ஒழிப்பு முதலிடம் வகிக்கும் அதே வேளையில், தனது அடுத்த முன்னுரிமை ரோட்டராக்டர்கள் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும் என்பதே என்று அவர் கூறினார். உலகம் முழுவதும் சமுதாயம்-சார்ந்த ரோட்டராக்ட் சங்கங்களை நிறைய உருவாக்க வேண்டும், இது இன்டராக்ட்டில் இருந்து கல்லூரி சார்ந்த ரோட்டராக்ட், அதன் பிறகு சமுதாயம் சார்ந்த ரோட்டராக்ட் மற்றும் கடைசியாக ரோட்டரியில் ஒருவர் சேர சுலபமான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும். ஐந்து சதவீதத்துக்கும் குறைவான ரோட்டராக்டர்கள் மட்டுமே ரோட்டரியில் சேருகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

“ரோட்டராக்ட், ரோட்டரியின் ரகசிய ஆயுதம், அதை நாம் நீண்ட காலமாக அலட்சியம் செய்துவிட்டோம். நீங்கள் வேலைகாரர்கள் இல்லை, தலைவர்கள். நீங்கள் தான் நமது நிறுவனத்தின் எதிர்காலம்,’’ என அவர் கூறினார். மேலும், ரோட்டராக்டர்கள் ரோட்டரியில் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று பட்டியல் இட்டார்: ‘‘அடிப்படையில் நீங்கள் அதிகமாக கூட்டங்களுக்குச் செல்வதை விரும்புவதில்லை என்பதும், நீங்கள் செல்லும் கூட்டம் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும், நீங்கள் சேவை செய்ய ஆசைப்படுகிறீர்கள், அது அதிக செலவுடையதாக இருப்பதை நீங்கள் விரும்பவில்லை, மேலும் உங்கள் தலைமைப் பண்புகளை வளர்த்துக்கொள்ள விரும்புகிறீர்கள்.’’ ரோட்டராக்ட் உறுபினர்களை ஈர்க்கும் பொருட்டு, ரோட்டரி சங்கங்கள் இந்தக் கருத்துகளை முன்னிறுத்த வேண்டும் என்று சொன்னார். “அவர்களை சமமாக நடத்துங்கள். உங்கள் சமூக சேவைத் திட்டங்களில் பங்குதாரர்களாக அவர்களை ஈடுபடுத்துங்கள்” என்று அவர் கூறினார்.

ரோட்டராக்டர்களிடம் அவர் மேலும் சொன்னார், “உங்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் ஒரு சங்கத்தைத் தேடுங்கள். உங்களை ஈடுபடுத்தக் கூடிய ஒரு சங்கம் கிடைக்கவில்லை என்றல், ஒரு புதிய சங்கத்தை தொடங்குங்கள். நீங்களும் உங்கள் நண்பர்களும் எப்படி



*RIPE பேரி ராஸின், RID C பாஸ்கர், DG ப்ரஃபுல் சர்மா ஆகியோருடன் ரோட்டராக்ட் மண்டலத் தலைவர்கள் (DRRs).*



DREE ஹன்சிகா மற்றும் நிஷித்தா RIPE பேரி ராஸினை RID பாஸ்கர் மற்றும் DG ப்ரஃபுல் சர்மா முன்னியில் கௌரவிக்கின்றனர்.

மற்றும் அவர்களிடம் அவர் என்ன எதிர்பார்கிறார் எனக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, ராஸின் விரைவாக: "நான் உங்கள் இளமையை நேசிக்கிறேன். உங்கள் ஆற்றலும் நம்பிக்கையும் அபாரம். நான் அதை ரோட்டரியில் பரப்ப விரும்புகிறேன். நான் உங்களிடமிருந்து என்ன வேண்டுகிறேன் என்றால் நீங்கள் தலைமை தாங்கி ரோட்டரி சங்கத்திற்கு சென்று, 'நாங்கள் உங்களை ஈடுபடுத்த வேண்டும் என்று விரும்புகிறோம், உங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம்' என்று சொல்ல வேண்டும். உயிர்ப்புடன் இருங்கள்; ரோட்டரி உங்களிடம் வரவேண்டுமென காத்திருக்க வேண்டாம்,'' என்றார்.

விரும்புகிறீர்களோ அதை அப்படியே கொண்டு செல்லுங்கள், ரோட்டரிக்கான பேரார்வத்தை இழந்துவிடாதீர்கள். எங்கள் விதிமுறைகள் இன்று மிகவும் வளைந்துகொடுக்கக் கூடியவை; எனவே நீங்கள் விரும்பும் வழியில் நடக்கலாம்."

Toastmasters International நிறுவனத் துடன் இணைந்து, ரோட்டராக்டுக்காக புதிய திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என அறிவித்தார், மேடைப் பேச்சு மற்றும் தலைமைப் பண்பு வளர்க்கும் திறன் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட அந்தத் திட்டம் ஜூலை மாதத்தில் தொடங்கப்படும் என்றார். ஒவ்வொரு ரோட்டராக்டரும் இந்த வாய்ப்பைப் பெற வேண்டும்... ஒரு தனி மனிதனாக உருவாக்கப்பட வேண்டும்," என்றார்.

ரொட்டேரியன்கள் போன்ற உரிமைகள் மற்றும் சலுகைகளை ரோட்டராக்டர்கள் அனுபவிக்க வேண்டும் என்பது ஒரு நீண்ட கால இலக்காக இருக்கும். தற்போது, ரோட்டராக்ட் சங்கத் தலைவர்களின் உதவியுடன் ரோட்டராக்ட் தரவு Evanstonல் புதுப் பிக்கப்பட்டு வருகிறது. "10,000க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருப்பதாகவும், ஆனால் 40 சதவீதத்திற்கும் குறைவான சங்கங்களே தாங்கள் செயல்படுவதை உறுதி செய்துள்ளன என்று RIயிட மிருந்து நான் தெரிந்துகொண்டேன். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளவும், நாங்கள் எப்படி உதவ முடியும் என்பதை அறிந்து கொள்ளவும் எங்களுக்கு சரியான விவரங்கள் தேவைப்படுகின்றன''.

## கேள்வி, பதில் நேரம்

D 3190யின் DRRE கிரண் ராஜ், ரோட்டராக்ட் சங்கத்தை ஆரம்பித்தபின்னர் ரோட்டரி சங்கங்கள் அதை வழிநடத்துவது இல்லை என்றதற்கு ரோட்டரி சங்கங்கள் ஒரு ரோட்டராக்ட் சங்கத்தை ஆரம்பித்த பின் அதை அப்படியே விட்டுச்செல்லமுடியாது என ராஸின் கூறினார். ரொட்டேரியன்கள் ரோட்டராக் டர்களை அவர்களது வாரந்திர கூட்டத்துக்கு அழைக்க வேண்டும், மேலும் அவர்களும் ரோட்டராக்ட் கூட்டங்களுக்கு வரவேண்டும். உங்களுக்கு உதவவும் சொல்லிக் கொடுக்கவும், அவர்கள் உங்கள் அருகில் இருக்க வேண்டும். "எங்கள் சங்கம் ஆரம்பித்த ரோட்டராக்டர்கள் எங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது, அவர்கள் விருந்தினர்களாக வருவதில்லை, மாறாக உறுப்பினர்களாகவே வருகிறார்கள்" என்று கூறினார்.

PETS போலவே, ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்க தலைவர்களின் ஒருங்கிணைந்த கூட்டத்திற்கான மற்றொரு DRREயின் ஆலோசனைக்கு, PETS ஏற்பாடு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இடம் குறைவாக இருப்பதால் அங்கு தங்கும் வசதி ஒரு சவாலாக உள்ளது என்றும், "ஆனால் நங்கள் வேறு பல யோசனைகளை விவாதித்துக் கொண்டு இருக்கிறோம், ஒரு சில வருடங்களில் முடிவு செய்யப்படும்,'' என்றும் ராஸின் விளக்கினார்.

ரோட்டராக்டர்களிடம் அவருக்குப் பிடித்த விஷயம் என்ன

## ரோட்டரி-ரோட்டராக்ட் இணைப்பு

DRRகளிடம் உரையாற்றிய RI டைரக்டர் C. பாஸ்கர், "ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் இடையே ஒரு இணைப்பு இருக்க வேண்டும் அப்பொழுது தான் இருவரும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும். அதனால் தான் DRR மற்றும் DRCCகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது, இது நல்ல முறையில் உருப்பெற்று வருகிறது. ரோட்டராக்ட் தரவுத்தளத்தை DRRகள் புதுப்பித்துக்கொண்டு இருக்கவேண்டும், ரோட்டராக்டர்களுடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களுடைய தொடர்பு விவரங்கள் மிக அவசியம், நாம் இணைந்தால் சிறப்பாக செயல்பட முடியும்,'' என்று குறிப்பிட்டார்.

புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ரோட்டராக்ட் நியூஸ் இதழைக் குறிப்பிட்டு, மாவட்ட ரோட்டரி பிரதிநிதிகள் தங்களுடைய செயல்திட்டங் களின் புகைப்படங்களையும் அறிக்கைகளையும் ரோட்டரி நியூஸ் இதழுக்கு அனுப்புமாறு RI டைரக்டர் வலியுறுத்தினார். 'இது உங்களுக்கென்றே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட உங்களுடைய இதழ், உங்கள் செயல் பாடுகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லுங்கள். ஒன்றுபட்டால் நீங்கள் ஒரு மாபெரும் சக்தி. நீங்கள் சிறியவர்கள் இல்லை, உங்களால் மாற்றத்தை உருவாக்க முடியும்,'' என்றார்.

2018-19யில் அவர் ரோட்டராக்டுக்கு இணைப்பு இயக்குநராக இருக்கப் போவதாக அறிவித்தார், அதை RIPE ராஸின் அவரின் உரையில் ஆமோதித்தார்.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

# எண்ணிக்கையை நோக்கி நாம் ஓட வேண்டாம்: RI இயக்குநர்

ஜெய்ஸ்ரீ

''உறுப்பினர் நிலை திருட்டு'' - இப்படித்தான் தலைவர் ரைஸ்லி நமது உறுப்பினர் வளர்ச்சி பற்றி குறிப்பிடுகிறார், மேலும் ஒவ்வொரு பன்னாட்டு ரோட்டரி வாரியத்தின் சந்திப்பிலும், “இந்தியாவின் பிரச்சினைகள்'' என்ற குறுந்தலைப்பு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. நாம் நம்மை சீர்படுத்தி உண்மையான ரொட்டேரியன்களாக ஆக வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அனல் பறக்கும் இந்த சொற்களால், அண்மையில் சென்னையில் நடைபெற்ற, மண்டலங்கள் 4, 5 மற்றும் 6Aவின் துணை மண்டல ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் தனது பேச்சைத் தொடங்கினார் பன்னாட்டு ரோட்டரி இயக்குநர் C பாஸ்கர் அவர்கள். “ஒவ்வொரு ஆண்டும் நாம் 10,000 உறுப்பினர்களைச் சேர்க்கிறோம், அந்த ஆண்டு இறுதியில் 9,000 உறுப்பினர்கள் விலகிச் செல்கிறார்கள். எண்ணிக்கையின் பின்னால் நாம் ஓட வேண்டாம். மனிதகுலத்தின் மீது அக்கறை கொண்டிருக்கும் உண்மையான ரொட்டேரியன்கள் தான் நமக்கு வேண்டும்,'' என்று கூறினார்.

பல்வேறு சம்பவங்களில் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளதாக வெளிவந்திருக்கும் தகவல் மிகவும் வருத்தப்பட வேண்டிய மற்றுமொரு விஷயம் ஆகும். “உலகளாவிய மானியங்கள் வாயிலாக மிகப்பெரிய தொகையை நாம் பெறுகிறோம். இருப்பினும் நமது பகுதியில் கண்காணிப்பு என்பது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது. ஒரு நாடாக இத்தகைய நேர்மையற்ற தன்மைக்கு நாம் வெட்கப்பட வேண்டும்.

RC ராஜேந்திர ராய் மற்றும் அசோக் குப்தா, RRFCகள் அவினாஷ் போட்டார் மற்றும் விஜய் ஜலன், RPICகள்



*RIDN பரத் பாண்ட்யா, EMGA சாம் படிபந்தலா, TRF அறங்காவலர் தேர்வு குலாம் வஹன்வதி, PDG சசி வர்வந்தகர் மற்றும் EMGA அசோக் பஞ்வானி ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்களுடன்.*

ஆஷிஷ் தேசாய் மற்றும் ராஜதுரை மைக்கேல் ஆகியோர் தங்களுடைய உதவி ஒருங்கிணைப்பாளர் குழுக்களை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களுடன் சேர்ந்து, தலைவர்கள் இரண்டு நாள் குழுவிவாதப் பணிமனையில் பங்கேற்றார்கள், அதில் ரோட்டரியின் மூன்று முக்கிய அம்சங்களான உறுப்பினர் வளர்ச்சி, அறக்கட்டளைக்கு நிதியளிப்பது, பொது மக்களின் பார்வை ஆகியவற்றில் ரோட்டரியை மாவட்ட மற்றும் சங்க தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் தங்களுக்கு இருக்கும் கவலைகளையும் சவால்களையும் எப்படி கொண்டு சேர்ப்பது என்று பலதரப்பட்ட கருத்துக்களை பகிரப்பட்டு விவாதிக்கப்பட்டன.

“நீங்கள் இங்கே கற்றுக் கொண்ட அத்தனை பாடங்களும், மாவட்டம் மற்றும் சங்கங்களுக்கு சென்று அடைய வேண்டும் என்று RIDN பரத் பாண்ட்யா சொன்னார். மேலும் ஒவ்வொரு மாவட்டமும், சங்கமும் இந்த மூன்று அம்சங்களுக்கு தனித்தனி குழு அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். ''மாவட்டம் மற்றும் சங்க அதிகாரிகளுடன் தொடர்பில் இருக்க வேண்டும்,'' என்று அவர் கூறினார். ''உங்களை யாரும் அழைக்கும் வரை காத்திருக்க வேண்டாம் நீங்களாகவே முன்வந்து அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும்,'' என்றார்.

மாவட்ட பொறுப்பு வேண்டுமென்றால் TRFக்கு $10,000 நன்கொடை அளிக்க வேண்டும் என்று ஒரு மாவட்ட ஆளுநர் கேட்டதைப் பற்றி ஒரு பிரதிநிதி சுட்டிக்காட்டியதற்கு, TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குலாம் வஹன்வதி, “TRFக்கு பணம் சேகரிப்பது ஒரு நல்ல சிந்தனை தான், ஆனால் இந்த வழியில் பணத்தை கோருவது நிச்சயம் ஏற்கத்தக்கது அல்ல. நியமனங்கள் விற்பனைக்கு இல்லை. அவை முற்றிலும் தகுதியின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டியவை,'' என்று கூறினார். உறுப்பினர் வளர்ச்சியை பற்றி அவர் கூறுகையில், கண்மூடித்தனமான உந்துதலால் உறுப்பினர்களை சேர்ப்பதனால் தான், சேர்ந்த ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் அவர்கள் விலகிச் செல்கிறார்கள். “உறுப்பினர்களைச் சேர்க்கும் போது நாம் சரியான வழிமுறைகளை கையாளுகிறோமா என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும், ரோட்டரியைப் பற்றி எதுவுமே தெரியாதவர்கள், வெறும் நட்பின் அடிப்படையில் நண்பர்களின் வலியுறுத்தல் காரணமாக சேர ஒத்துக்கொள்கிறார்கள். எனவே இதில் நாம் போர்க்கால அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டும்.”

ஆனால் உறுப்பினர் வளர்ச்சி போல் இல்லாமல், அறக்கட்டளையின் பங்களிப்பு குறையவில்லை. “எந்தளவுக்குக் கேட்கிறோமோ அந்தளவுக்குப்



## முக்கியக் கருத்துகள்

- *மாவட்ட தலைவர்கள் பிராந்திய மொழியில் கூட்டங்களை நடத்த வேண்டும்.*
- *RCகள் மற்றும் ARCகள், சங்கங்கள் தங்களுக்கான சட்டங்களையும் துணை விதிகளையும் ஏற்படுத்த வழிகாட்ட வேண்டும், மேலும் சங்கங்கள் அதைப் பின்பற்ற ஆளுநர்கள் ஊக்குவிக்க வேண்டும்;*
- *ரோட்டரி கிளப் சென்ட்ரலில் விவரங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.*
- *உள்ளூர் சமுகத் தேவைகளை மேற்கொள்ள சங்கங்களை ஊக்குவிக்க வேண்டும், சர்வதேச கூட்டாளிகளைப் பெறுவதற்காக Rotary Showcase வசதியைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு சொல்லித் தரவேண்டும்.*
- *நாடு முழுவதும் ரோட்டரியின் திட்டங்களை எடுத்துச் சொல் வதற்காக ஊடகங்களுக்கான திட்டத்தை RPICS மற்றும் ARPICS உருவாக்க வேண்டும்.*
- *எல்லா ரொட்டேரியன்களும் அறக்கட்டளைக்கு குறைந்தபட்சம் $ 26.50 நிதியளிக்குமாறு RRFCக்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.*

பெறுகிறோம். அறக்கட்டளை என்ன செய்கிறது என்பதை முன்னிறுத்தி அறக்கட்டளைக்கு பங்களிக்கும்படி கேட்கிறோம். என்றார். பின்னர் பிரேக் அவுட் அமர்வுகளில் பேசிய RID பாஸ்கர், அங்குள்ள பிரதிநிதிகள் அவர்களுடைய திறமைக்காகவும், தலைமைப் பண்புக்காகவும், நல்ல செயல்பாடுகளுக்காகவும் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தினார்.

''மாவட்டத்தின் பங்கு பற்றிய தெளிவான குறிக்கோள் வேண்டும், பல ஆளுநர்களுக்கு இது சரியாகப் புரியவில்லை என்றார். பெரும்பாலும், RIயின் முன்னுரிமையான போலியோ ஒழிப்பு மற்றும் உறுப்பினர் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பணியாற்றுவதற்குப் பதிலாக, அவர்கள், தங்களுக்கான தனி முன்னுரிமைகளைக் கொண்டுள்ளனர். ரோட்டரியின் குறிக்கோளை மேம்படுத்துவதில் சங்கங்களுக்கு உதவ மட்டுமே மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்று சங்கங்களை விட மாவட்ட நிகழ்வுகள் அதிகமாக இருக்கின்றன,'' என அவர் சுட்டிக் காட்டினார்.

### கண்காணிப்பு

மூன்று மூத்த தலைவர்களும் மானியங்களையும் பிற நிதிகளையும் கையாள்வதில் முறைகேடுகள் நடப்பதைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை கடுகளவும் மறைக்கவில்லை. கண்காணிப்புப் பிரச்சனைகள் முக்கியமானவை மற்றும் மேலானவை என்று குறிப்பிட்டனர்.

சென்ற ஆண்டு இந்தியா எல்லா சாதனைகளையும் முறியடித்திருந்தது என்று வஹன்வதி தெரிவித்தார். அறங்காவலர் தலைவர் ரான் பர்டன், அடுத்த ஆண்டிற்கு $380 மில்லியன் டாலர் என்ற விரிவான இலக்கை நிர்ணயித்துள்ளார். "ரோட்டரி அறக்கட்டளை நம் மேல் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறது, நாமும் விருப்பத்துடன் அளிக்கிறோம். 2015–16ல் நாம் ஜப்பானுக்கு அடுத்தது இரண்டாவது இடத்தில் பெரிய இடைவெளியுடன் இருந்தோம்; கடந்த ஆண்டும் நாம் ஜப்பானுக்கு அடுத்தது இரண்டாவது இடத்தில் இருந்தாலும் அந்த இடைவெளியைக் குறைத்திருந்தோம். அந்த இடைவெளியை நாம் இன்னும் குறைப்போம். அறக்கட்டளைக்கு பங்களிப்பதில், நாம் இத்தகைய பெருமை கொள்ளும்போது, ஒரு சிலர் நம் பெயரைக் கெடுப்பதை நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?''

இந்தியாவில் உறுப்பினர்களாக இருக்கின்ற 150,000 ரொட்டேரியன் களில் 0.003 சதவீதம் (50 ரொட்டேரியன்கள்) "நம்மை தலை குனிய வைக்கிறார்கள், இவ்வளவு குறைவாக தவறு செய்பவர்களால், நாம் ஏன் இழிவு படவேண்டும்? நேர்மையின்மையை நாம் சகித்துக் கொள்ள வேண்டாம்."

10 க்கும் குறைவான உறுப்பினர் களை கொண்ட சங்கங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, இந்தியாவில் அத்தகைய 196 சங்கங்கள் இருக்கின்றன என்றும் அவை தேர்தல் நோக்கத்திற்காக மட்டுமே உள்ளன என்றும் பாண்ட்யா



TRF *அறங்காவலர் - தேரவு குலாம் வஹன்வதி,* RI *இயக்குநர்* C *பாஸ்கர் மற்றும்* RIDN *பரத் பாண்ட்யா.*



PDG *ரவி மெஹ்ரா, நடராஜன் நாகோஜி, ஹித்தேஷ் ஜரிவாலா,* RIDN *பரத் பாண்ட்யா,* PDG *ப்ரமோத் பாரீக் மற்றும் ஜெயா ஷா.*

சுட்டிக்காட்டினார். அத்தகைய சங்கங்களை அடையாளம் கண்டு மூடி விடுமாறு ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்களிடம் வலியுறுத்தினார். “நாம் 2,000 உறுப்பினர்களை இழந்துவிடுவோம், ஆனால், அது ரோட்டரிக்கு பெரிய இழப்பு அல்ல. 25க்கும் குறைவான உறுப்பினர்ககளைக் கொண்ட சங்கங்களின் மேல், நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என விரும்புகிறேன். அவர்களை அடையாளம் கண்டு, ரோட்டரி நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துங்கள், அப்பொழுது தான் தங்களது நண்பர்களையும் அழைத்து வருவார்கள்,'' என்றார்.

பப்ளிக் இமேஜ் ஒருங்கிணைப்பாளர்களுடன் பேசும்போது, மற்றவர்களுக்கு ரோட்டரியைப் பற்றி சொல்வது மட்டுமல்ல, ரொட்டேரியன்களிடம் ரோட்டரியை எடுத்துச் செல்வதும் இதில் உள்ளடங்கியிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். 'எழுபது சதவிகித ரொட்டேரியன்களுக்கு இன்னும் ரோட்டரி என்ன செய்கிறது என்றும், அவர்கள் எத்தகைய அமைப்பின் ஒரு பகுதியாக இருகிறார்கள் என்றும் தெரியாது,'' என்று அவர் கூறினார்.

## பிரேக் அவுட்

ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள் தரமான உறுப்பினர்களை சேர்ப்பது பற்றியும், இருப்பவர்களைத் தக்க வைப்பது பற்றியும் விவாதித்துக்கொண்டு இருந்த நேரத்தில், பப்ளிக் இமேஜ் குழுவினர் ரோட்டரியின் மதிப்பை உயர்த்துவதற்கான வழிமுறைகளையும் மற்றும் அறக்கட்டளை குழுவினர் மானியங்களின் மேலாண்மை பற்றி, EMGAக்கள் அஷோக் பன்ஜ்வானி மற்றும் சாம் பதிபந்த்லா ஆகியோரிடமிருந்து கற்றனர்.

ARFCகள் மற்றும் DRFCகளின் சேவையை ஆளுநர்கள் பயன்படுத்த வலியுறுத்த வேண்டும் என்ற ஒரு PDGன் கேள்விக்கு வஹன்வதி, “நீங்கள் எல்லோரும் வெற்றிகரமான ஆளுநர்களாக இருந்து வருகிறீர்கள். உங்கள் மண்டல ஒருங்கிணைப்பாளர்களுடன் நீங்கள் எப்படி நடந்துகொண்டீர்கள்? நீங்கள் அவர்களை புறக்கணித்திருந்தால், இப்போது பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை,'' என்று குறிப்பிட்டார். ஒவ்வொரு மாவட்ட டைரக்டரியிலும் ஒருங்கிணைப்பாளர்களின் குழுவைச் சார்ந்தவர்களின் தொடர்பு விவரங்கள் இடம் பெற வேண்டும் என்று அறிவுறுத்தினார், இது வழிகாட்டுவதற்காகவும் ஆதரவளிப்பதற்காகவும் சங்கத் தலைவர்கள் எளிதாக உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள வழிவகுக்கும் என்றார்.

ராய் தலைமையிலான ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்களின் அமர்வு, இரட்டை உறுப்பாண்மை, சேட்டிலைட் கிளப்கள் மற்றும் மகளிர் உறுப்பினர்களைப் பற்றி அதிகம் விவாதித்தது. முக்கியமாக பெண்களை ஈர்க்க வேண்டுமெனில் கூட்டங்கள் குறைவாகவும், கேளிக்கையும் சேவையும் அதிகமாகவும் இருக்க வேண்டும் என்பது போன்ற அம்சங்களை வலியுறுத்தினார்கள். பெண்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் மதுபானம் இருக்க வேண்டாம் என்று ARC குர்ஜீத் சிக்கோன் கூறினார். ARC பிந்து சிங் கூறுகையில், “Rotary spouse'' என்ற அடையாளம், பெரும்பாலான ரொட்டேரியன்களை “சாதாரண நபர்களாக மட்டுமே பார்க்கிறது மற்றும் ரொட்டேரியன்களாக கருதுவதில்லை'' என்று குறிப்பிட்டார்.

*படங்கள்: ஜெய்ஸ்ரீ*

# இயந்திரம் மற்றும் ரோபோ மூலம் ஏழை மாணவர்களுக்கு பயிற்சி

ரஷீதா பகத்

ராமகிருஷ்ணா மிஷன் மூலம் கல்வி கற்றுத்தரப்படும் ஆதரவற்ற சிறுவர்களை தொழில்சார் பயிற்சிக்கு மேம்படுத்தி அவர்கள் தொடக்கநிலை சம்பளத்தை அதிகரிக்கும் வாய்ப்பினால் கிடைத்த உற்சாகத்தோடு, மெட்ராஸ் கிழக்கு ரோட்டரி சங்கம் இன்னொரு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இது வரை செயல்படுத்தியதிலேயே மிகப் பெரிய $110,000க்கான குளோபல் கிராண்ட் திட்டம்.

இந்தத் திட்டம் சென்னையில் RKMல் நடத்தப்படும் பாலிடெக்னிக் கல்லூரியின் பயிற்சியாளர்களுக்கு கணினியுடன் இணைந்த தயாரிப்பு (CIM) திட்டமாகிய 'எந்திரங்கள் மற்றும் ரோபோட்கள்' எனப்படுகின்ற ஒரு அதிநவீன எதிர்காலம் சார்ந்த தொழில்நுட்பத் திறமைகளை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும்.

இந்தத் திட்டத்தைப் பற்றி தகவல் அளித்த RCME தலைவர் பி.எஸ். புருஷோத்தம், ஒவ்வொரு ஆண்டும் சங்கம் முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் நிலையான தன்மை மற்றும் அளவிடுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஒரு படி மேலே செல்ல கடினமாக உழைக்கிறது. அது பொது சுகாதார மையம் மற்றும் குழந்தைகளுக்கான அறக்கட்டளை மருத்துவமனைக்கு உதவுவதற்கான பொது சுகாதாரத் திட்டமாகட்டும், அல்லது RKM மற்றும் V-Excel ஆகியவற்றுக்கான தொழில்சார் சேவையாகட்டும், ஒவ்வொன்றும் ஒரு முக்கிய தற்கால சமூக அபிவிருத்தி தேவைகளைத் தெரிவித்துள்ளது.

உலகிலேயே மிக இளைய நாடுகளில் ஒன்றான இந்தியா, ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 16 மில்லியன் புதிய தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தினாலும் கூட, இன்றும் இந்திய சந்தையில் திறமையான தொழிலாளர்கள் கிடைக்கப்பெறுவதில் பெரும் இடைவெளி உள்ளது. NSDC (National Skill Development Centre) அளித்த புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவின் மொத்த தொழிலாளர்களில் 5 சதவீதம் பேர் மட்டுமே வேலைக்கான பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அதனால் வேலை திறன் பயிற்சி திட்டத்துக்காக ரூபாய் 70 லட்சம் மதிப்பில் இந்த குளோபல் கிராண்ட் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை RKM பாலிடெக்னிக் அருகில் சுமார் 70 ஆதரவற்ற குழந்தைகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. இந்த பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்து ஆண்டுதோறும் சலுகைகள் மறுக்கப்பட்ட பிரிவில் இருந்து 150 மாணவர்கள் படித்து விட்டு வேலைக்குச் செல்கிறார்கள். இங்கே பயற்சி பெற்ற RKM மாணவர்கள் பல்வேறு தொழில் துறைகளில் மாதம் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் பெறும் வேலையில் இருக்கிறார்கள்.

தொழிற்கல்வி பயின்ற இளம் இந்தியர்களிடையே காணப்படுகின்ற இந்த இடைவெளியை நிரப்பக் கூடிய ஒரு குளோபல் கிராண்ட் திட்டம் செயல்படுத்த முடிவு செய்தபோது, RKM நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட மாணவர்கள் பலருக்கு டிப்ளமோ படிப்பு வழங்கி வருகிறது. நாங்கள் ஏற்கெனவே அவர்களுடன் நிறைய திட்டங்களில் பணியாற்றி இருப்பதால், அவர்களை இத்திட்டத்திற்கு தேர்வு செய்தோம்'' என்று அவர் சொல்கிறார்.

இக்கல்லூரி ஏற்கெனவே சலுகைகள் மறுக்கப்பட்ட குறைந்த வருமானம் உள்ள மாணவர்களுக்கு மூன்று ஆண்டு பாலிடெக்னிக் கல்வியை வழங்கி, வேலைத்திறன் மற்றும் தொழிற்சாலைக்குத் தேவையான திறன்களை பாடத்திட்டமாக வழங்குகிறது. 1932ம் ஆண்டு முதல் இந்த கல்லூரி சேவை



CIM *பயிற்சித்திட்ட துவக்கவிழாவில்* RCME *தலைவர்* BS *புருஷோத்தம்,* DG R *சீனிவாசன் மற்றும் ரோட்டரியினர்.*

வாயிலாக சமுதாயத்தால் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் பலருக்கு டிப்ளமோ படிப்புகளை வழங்குவதோடு நல்ல பல நிறுவனங்களில் அவர்களை வேலைக்கும் அமர்த்தியுள்ளது.

## பயனாளியை ஈடுபடுத்துவது

RKM மற்றும் RC மெட்ராஸ் கிழக்கு சங்கத்திற்கும் நீண்டகால தொடர்பு உண்டு, 2015ம் ஆண்டு இந்தக் கல்லூரியின் ஆய்வுக்கூடத்திற்கு முக்கியமான ஆய்வக உபகரணங்களை சங்கத்தின் மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளோம். RIயின், முக்கிய பரிந்துரையான சமுதாயம் அல்லது பயனாளிகளின் விருப்பத்துக்கு ஏற்ப சங்கங்களாக செயல்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, சங்கம் RKM இடமிருந்து சமீபத்திய உதவித் தொகைக்கான ஆலோசனைகளைப் பெற்றது.

“RKM கல்லூரி முதல்வர் சுகுமார் கல்லூரியில் நவீனமயமான CIM ஆய்வுக்கூடம் நிறுவ வேண்டுமென கூறியதோடு, அதன் மூலம் மாணவர் களுக்கு வேலை வாய்ப்புக்கான திறன்களை கொடுக்க முடியும் என்றும், அது தொழில் சார்ந்ததாக மட்டும் இல்லாமல் தயாரிப்புத் தொழிற் சாலைக்கு பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்'', சங்க செயலாளர் பாப்பா ராவ்.



பயிற்சித்திட்ட துவக்க விழாவில் RKM பள்ளிக்குழந்தைகள்.



பின்னர், சமீபத்திய தயாரிப்பு நுணுக்கங்களில் மாணவர்கள் திறன்களை வளர்க்கக்கூடிய உப கரணங்களின் பட்டியலை RKM வழங்கியது. சுவிட்சர்லாந்தில் வசிக்கும் இச்சங்கத்தின் ரொட்டேரியன் ரகுராமன், இந்தியா வந்திருந்த போது இரண்டு வாரம் செலவழித்து திட்டத்தை சீரமைத்தார்.

ஏற்கனவே RKM உடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் India Piston நிறுவனத்தின் துணைத் தலைவர் மகாதேவன் திட்டத்தை மேம்படுத்தினார். அவரது குழு RKMன் தற்போதைய வசதிகளை ஆராய்ந்து, ரொட்டேரியன்கள் மற்றும் RKM உடன் இணைந்து இந்த நவீன CIM ஆய்வுக்கூடத்தை வடிவமைத்தது. ‘திட்டத்தின் உபகரணத் தேவைகளையும் விவரக் குறிப்புகளையும் சரியான முறையில் வடிவமைப்பதில் ரொட்டேரியன் ரகுராமனின் ஆலோசனையும் உதவியும் இன்றியமையாதது. பல தயாரிப்பாளர்களிடமிருந்து இறுதி விலைப்புள்ளிகள் வாங்கப்பட்டு கடைசியாக புனேயைச் சேர்ந்த தயாரிப் பாளர் முடிவு செய்யப்பட்டார்,'' என புருஷோத்தம் கூறினார்.

‘குளோபல் கிரான்ட் பணம் வருவதற்கு முன்பே, ரோட்டரி நன்மதிப்பில் புனே தயாரிப்பாளர் வேலையை ஆரம்பித்த சில மாதங் களிலே ஆய்வுக் கூடம் செயல் பாட்டுக்கு வந்து, முழுவதும் ஓராண்டு காலத்திற்குள் நிறுவப்பட்டது.''

செயல்திட்டத்தை திட்டமிடும்போது அமெரிக்காவில் உள்ள இர்வின் ரோட்டரி சங்க ரொட்டேரியன் ஹரிஷ் மூர்த்தியை திட்டத்தின் பன்னாட்டு பார்ட்னராக ஆக்க RCME சார்பாக நாங்கள் அணுகி ஒப்புதல் பெற்றோம் என்றார் சங்கத் தலைவர்.

கேட்ட கருவிகள் மட்டுமில்லாமல், இந்த கணினியுடன் இணைந்த கல்விக்கு உறுதுணையாக 15 டெஸ்க்டாப் கணினிகள், ஒரு டிவிடி ரைட்டர் ஆகியவையும் வழங்கப் பட்டன. இதர தொழிற்பயிற்சி நிறுவங்கள் தங்களுடைய திறன் மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்திக்கொள்வதற்காக RKM CIM ஆய்வுக்கூடம் ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும் என்று சங்கம் எதிர்பார்க்கிறது. இந்த ஆய்வகம், மற்ற பாலிடெக்னிக்கில் இருந்து உள் மற்றும் வெளிப்புற ஆசிரியர்களுக்கு’ பயிற்சியாளர்களுக்கான பயிற்சி’ திட்டத்தை வழங்குகிறது, மேலும் மெக்கானிக்கல் மற்றும் ஆட்டோமொபைல் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி தொகுதிகளை உருவாக்குவதற்கும் இது பயன்படுத்தப்படும்.

''இந்த CIM பயிற்சி மூலம், சிறந்த மாணவர்களை வேலைக்குத் தேர்ந்தெடுக்க பிரதான நிறுவனங்கள் கல்லூரிக்கு வருவார்கள் மற்றும் சிறந்த மாணவர்கள் தொடக்க சம்பளமாக குறைந்தபட்சம் 20 சதவீதம் அதிகமாகப் பெறுவார்கள்,'' என்று சங்க செயலாளர் கூறுகிறார்.■

# ரோட்டரி ஒரு உன்னதமான மனிதாபிமானிக்கு மரியாதை செய்தது

ஜெய்ஸ்ரீ

“நான் தனிப்பட்ட முறையில் இந்தியா வந்து நன்றி செலுத்தியிருந்தால், நான் அறக்கட்டளை தலைவராக பொறுப்பு வகிக்கும் இந்த வருடத்தில் மிக முக்கியமான சிறப்பம்சமாக இருந்திருக்கும், முன்னேரே உறுதி செய்யப்பட்ட தவிர்க்க முடியாத மற்றொரு வேலையினால் என்னால் அங்கு வர முடியாததற்கு வருந்து கிறேன்,'' என்ற TRF அறங்காவலர் தலைவர் பால் நெஸ்டெலின் செய்தியை, TRFன் மிகப்பெரிய நன்மதிப்பைக் கொண்ட, சமுதாய ஊக்குவிப்பு மற்றும் கிராம மேம்பாட்டுக்கான ஆதித்ய பிர்லா அறக்கட்டளையின் தலைவரான ராஜ்யஸ்ரீ பிர்லாவிற்கு மும்பையில் நடந்த ஒரு பெரிய கூட்டத்தில் RI யின் மிகப் பெரிய கௌரவமாகிய ரோட்டரி கிரிஸ்டல் வழங்கப்பட்ட பிரம்மாண்டமான ஒரு கூட்டத்தில் PRIP K R ரவீந்திரன் படித்தார்.

போலியோவுக்கு எதிரான ரோட்டரியின் போருக்கு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஆதரவளித்ததற்காக அவர் பாராட்டப்பட்டார். அவ்விழாவில் PRIP ராஜேந்திர K சாபு, PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் பினோட்டா, PRID அசோக் மஹாஜன், RID C பஸ்கர், RIDN பரத் பாண்டியா, TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள குலாம் வஹன்வதி போன்ற பல மூத்த தலைவர்களும் மற்றும் D 3141 மற்றும் D 3142 மாவட்டங்களைச் சேர்ந்த பல AKS உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். D 3142 DG பிரஃபுல் ஷர்மா இந்த நிகழ்ச்சியை நடத்தினார்.

இப்போது TRF அறங்காவலராக பணியாற்றும் ரவீந்திரன், “போலியோ ஒழிப்பு ஒரு உண்மை என்றால், அதற்கு உங்களைப் போன்ற நபர்கள் தான் காரணமாகும். நாங்கள் இங்கே என்ன பேசுகிறோமோ, ஊடகங்களில் என்ன காண்கிறோமோ அதைவிட மிக அதிகமாக நீங்கள் பங்களித்திருக்கின்றீர்கள்.”

ஆதித்யா பிர்லா குழுமம் தான் “மொத்தமாக சுமார் $ 10.24 மில்லியன் பங்களிப்புடன்'' TRFக்கு இரண்டாவது பெரிய கார்பரேட் கொடையாளியாக விளங்குகிறது. உலகளாவிய கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இது வியப்பளிக்கும் அம்சமாகும். அமெரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ கொடுக்கப்பட்ட ஒரு டாலருக்கு நாங்கள் (தெற்காசியாவில்) கொடுக்கும் ஒரு டாலரை சமன் செய்ய முடியாது. உங்கள் $ 10 மில்லியன் டாலர் மேற்கில் ஒரு பில்லியன் டாலர்கள் மதிப்புள்ளது,” என்று அவர் மேலும் கூறினார்.

சமூக நலனுக்காக தலைமுறை தலைமுறையாக பிர்லா குடும்பம் காட்டும் பெருந்தன்மை பாராட்டுக் குரியது எனக் கூறிய ரவீந்திரன், அதற்கான புள்ளிவிவரங்களை வழங்கினார். ஆதித்யா பிர்லா குழுமம் வருடந்தோறும் ரூபாய் 250 கோடியை சமுதாயத் தொண்டுக்காகவும் அறச் செயல்களுக்காகவும் செலவழிக்கிறது, 56 பள்ளிகளை நடத்துகிறது, 5,000 கிராமங்களை ஆதரிக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அளவில் 7.3 மில்லியன் மக்கள் பயனடைகின்றனர். “பிர்லா குழுவின் தத்துவம் மிகவும் தெளிவாக உள்ளது:



அவர்களுக்கு உலகெங்கிலும் தொழிற்சாலைகள் உள்ளன. பிராந்தியங்களில் உள்ள வளங்களை பிரித்தெடுப்பதற்கு பதிலாக அவர்கள் செல்கின்ற சமூகங்களுக்கு தங்கள் முதலீடுகளின் நன்மைகளை அவர்கள் கொடுக்கிறார்கள்.''

போலியோ ஒழிப்புக்கான ராஜஸ்ரீயின் ஆதரவு வழக்கமான மதிப்புகளை கடந்து உள்ளதாக அவர் மேலும் கூறினார். "அதனால் என்ன?'' என்று சிலர் சொல்லலாம், அவர்களிடம் பணம் உள்ளது. நிறைய பணம் வைத்திருந்தும் மற்றவர்களுடைய நலனுக்காக ஒரு பைசா கொடுக்காமல் இருப்பவர்களை நான் உங்களுக்கு அடையாளம் காட்ட முடியும். எனவே, பணத்தைக் காட்டிலும், கொடுக்க வேண்டிய மனம் இருப்பது முக்கியமானதாகும். பிர்லா குடும்பத்தின் இரத்தத்தில் தாராள குணாம்சம்இயங்குகிறது,'' என்றார்.

ஆனால், வேலை இன்னும் முடிந்து விடவில்லை. உலகில் போலியோ இல்லாமல் வைத்திருப்பதற்காக, 60 நாடுகளைச் சேர்ந்த 400 மில்லியன் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு செய்யப்பட வேண்டும். "உங்கள் ஆதரவைத் தொடர வேண்டுகிறோம். பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையில் இருந்து உங்கள் பங்களிப்பை இரட்டிப்பாக்க உதவுவதற்காக நாங்கள் உங்களுக்கு கடன்பட்டிருக்கிறோம்,'' என ரவீந்திரன் கூறினார்.

PRIP சாபூ கொல்கத்தாவிலுள்ள பிர்லா நிறுவனத்தில் தனது தந்தையின் வேலைகளை நினைவுகூர்ந்தார் மற்றும் பிர்லா குழும நிறுவனமான ஹிந்து ஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்தில் தான் வேலை செய்ததை நினைவு கூர்ந்தார்.

*PRIP K R ரவீந்திரன் திருமதி ராஜஸ்ரீ பிர்லாவுக்கு 'ரோட்டரி க்ரிஸ்டல்' கொடுத்து கௌரவிக்கிறார். (இடதுபுறத் திலிருந்து) : PDG ப்ரஃபுல் சர்மா, RIDN பரத் பாண்ட்யா, PRIP கல்யாண் பெனர்ஜி, PRIP ராஜேந்திர சாபு, RID C பாஸ்கர், PRID அசோக் மகாஜன், TRF அறங்காவலர் தேர்வு குலாம் வஹன்வதி மற்றும் RRFC விஜய் ஜலான் அவர்களும் உள்ளனர்.*



PRIP K R *ரவீந்திரன்,* PRID *அசோக் மகாஜன், நயன்தாரா மகாஜன் மற்றும் திருமதி ராஜஸ்ரீ பிர்லா அவர்கள்.*

2008 ஆம் ஆண்டில், ராஜஸ்ரீ TRFக்கு 250,000 டாலர் பங்களித்து AKS Societyக்குள் நுழைந்தபோது, அந்த நிகழ்வை மறக்கமுடியாததாக செய்யுமாறு கூறினார். உடனடியாக ராஜஸ்ரீ $1 மில்லியன் நன்கொடைக்கு ஒப்புக் கொண்டார், "இது மட்டுமல்லாமல், இதே போன்ற தொகையை வழங்க ஸ்டீல் வணிகர் லட்சுமி மிட்டலின் மனைவியான உஷா மிட்டலையும் தூண்டினார்.

போலியோ இல்லாத நாடாக இந்தியா அறிவிக்கப்பட்ட பின்னரும், அவர் தாராள மனப்பான்மையைத் தொடர்ந்தார் மற்றும் அட்லாண்டா மாநாட்டில் "எங்களுக்கு போலியோ இல்லாத உலகத்திற்காக வேலை செய்வதற்காக.'' மற்றொரு மில்லியன் டாலர் நன்கொடை அளித்தார்.

PRID மஹாஜனுடன் சேர்ந்து 2000ம் ஆண்டின் தொடக்கத்தில், போலியோ பாதிப்பு மிகவும் அதிகமாக இருந்தபோது போலியோவை எதிர்க்க ரோட்டரி உதவிகோரியபோது, ராஜஸ்ரீ உடனடியாக ஒரு மிகப்பெரிய தொகையை வழங்கினார் என்று PRIP பானர்ஜி நினைவு கூர்ந்தார். "அவர் அதை மிகவும் நம்பிக்கையுடன் எங்களுக்கு கொடுத்தார், மற்றும் அவரது நம்பிக்கை கொஞ்சம் கூட குறையவில்லை. இந்தியாவில் போலியோ ஒழிப்புக்கான உங்கள் ஆதரவை, வேறு யாராலும் மிஞ்சமுடியாது. நன்றி ராஜஸ்ரீ,'' என தழுதழுத்த குரலில் கூறினார்.

தனிநபர்களும் கார்ப்பரேட்டுகளும் TRF மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பற்றி பேசும்போது, 2001ம் ஆண்டு பூகம்பத்தால் பேரழிவு ஏற்பட்ட பின்னர் குஜராத்தில் உள்ள கட்ச் நகரில் நிவாரணப் பணிக்காக ஒரு இத்தாலிய ரொட்டேரியன் உடனடியாக ஒரு மில்லியன் டாலர் காசோலை கொடுத்ததை நினைவு கூர்ந்தார். "பணத்தை எப்படி செலவு செய்தோம் என்று அவர் என்னிடம் ஒருபோதும் கேட்டதில்லை, அவர் இந்தியாவிற்கு வருகை புரியவும் இல்லை. அறக்கட் டளையிலும் எங்கள் செயல்களிலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதால் இது ரோட்டரியில் மட்டுமே நிகழும்.''

''ரோட்டரி உலகில் இந்தியர்கள் வாங்குபவர்களாக அறியப்படும்போது, இங்கே உலகில் கொடுப்பதில் இரண்டாவது இடத்தில் உள்ள ராஜஸ்ரீ பிர்லா நம்முடன் உள்ளார்,'' என்று இயக்குநர் பாஸ்கர் கூறினார். கொடுப்பதைப் பற்றி திருக்குறளிலிருந்து ஒரு குறளை அவர் மேற்கோள் காட்டினார். ஏனென்றால் ராஜஸ்ரீ க்கு தமிழ் தெரியும். (ராஜஸ்ரீ தன்னுடைய பள்ளிக் கல்வியின் ஒரு பகுதியை மதுரையில் பயின்றிருக்கிறார்)

ரோட்டரி உடனான அவரது கூட்டு 16 மில்லியன் குடும்பங்களின் கண்ணீரை துடைக்க உதவியுள்ளது என்றார். "1988 ஆம் ஆண்டில் நாங்கள் போலியோவை எதிர்க்க கிளம்பியபோது, 125 நாடுகளில் இருந்து 350,000 பேர் போலியோவால் பாதிக்கப்பட்டு இருந்தனர். இன்று வெறும் ஆறு பேர் தான் உள்ளனர். மற்றும் ராஜஸ்ரீயைப் போன்ற பரந்த இதயம் கொண்ட மக்களின் ஆதரவுடன் மிக விரைவில் பூஜ்யம் என்ற நிலையை நாம் அடைவோம்'' என்றார்.



3231 மாவட்டத்தில் ஒவ்வொரு ரொட்டேரியனும் போலியோ நிதிக்கு குறைந்தபட்சம் 10 டாலர் பங்களித்திருப்பதை சுட்டிக்காட்டிய RI இயக்குனர், பார்வையாளர்களிடம் ஒரு நல்ல காரணத்திற்காக ஒருபோதும் வெட்கப்படாமல் கேட்கவேண்டும் என்று கூறி, காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதியும் போலியோவினால் பாதிக்கப்பட்டவருமான பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், March of the Dimesஐ அறிமுகப்படுத்தியதை குறிப்பிட்டார். அது போலியோ தடுப்பூசி கண்டு பிடித்த ஜோனாஸ் சால்க்கின் ஆராய்ச்சி க்கான திட்டத்தை ஊக்குவிப்பதற்கான நிதி திரட்டும் திட்டமாகும்.

அறக்கட்டளையின் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதிலிருந்து இந்திய ரோட்டரி அறக்கட்டளை ஒருபோதும் பின்வாங்காது என்றும் “அது எப்போதும் ராஜஸ்ரீயின் கூடுதல் நன்கொடை பெற்று எங்களுடைய இலக்கை அடைய உதவியது மற்றும் நன்கொடை வழங்குவதில் உலகில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்க உதவியது,” என்று PRID மஹாஜன் கூறினார்.

“தொண்டர்கள் குழு உலகத்தை மாற்றமுடியும் என்பதில் பலர் உறுதியாக இருக்கவில்லை. ஒரு சேவை அமைப்பு என்ன செய்ய முடியும் என்று தெரியாத சந்தேகவாதிகள், அறக்கட்டளைக்கு நீங்கள் தாராளமாக நன்கொடை தருவதைப் பார்த்த போது பெரிய விஷயங்களைச் செய்வது சாத்தியம் என்று நம்பிக்கை அடைந்தனர்,” என்று அவர் முடித்தார்.

ராஜஸ்ரீ அவரது பதிலில் ரொட்டேரியன்களுடன் நீண்டகால உறவு கொண்டிருக்கும் அவர், அவர்களது தன்னலமற்ற சேவையால் கட்டுண்டிருப்பதாகத் தெரிவித்தார். பிர்லா குடும்பத்தின் DNAவில் மனிதநேயத்தின் தத்துவம் ஆழமாக வேரூன்றி உள்ளது என்று அவர் கூறினார். போலியோ ஒழிப்பு குறித்து ரோட்டரி உலகில் பெருமளவில் ஈடுபட்டு வருவதற்கு பாராட்டு தெரிவித்த அவர், ஆதித்யா பிர்லா குழுவினர் இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகள் போலியோவில் இருந்து பாதுகாப்பாக இருப்பதை பார்க்க ஆவலாக உள்ளனர் என்றார். “நாங்கள் நகர்ப்புறங்களிலும் ரயில் நிலையங்களிலும் கூட்டாக வேலை செய்கிறோம். நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள போலியோ பூத்கள் மூலம் 27 மில்லியன் போலியோ சொட்டு மருந்துகளை கொடுத்துள்ளோம்.”

போலியோ தவிர, அவரது அமைப்பு நீரிழிவு நோயைக் கண்டறிவதற்காக ரோட்டரி உடன் இணைந்துள்ளது மற்றும் 100,000 பேரை சென்றடைந்துள்ளது. “மும்பை யில் தலசீமியா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதிலும் நாங்கள் ரொட்டேரியன்களுக்கு ஆதரவு அளிக்கிறோம்.”

மகாத்மா காந்தியுடன் அவரது மாமனாரின் தந்தை G D பிர்லாவின் நட்பு பற்றி பேசிய ராஜஸ்ரீ, காந்திஜி தனது ஆலோசகர்களில் ஒருவரான பிர்லாவை எப்படிக் கருதினார் என்பதை விளக்கினார். “தாதூஜி என்று எங்களால் என்றும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், தான் மகாத்மாவை பின்பற்றுபவர் என்று கூறுவார். அவர்கள் இருவரும் ஒரு சிறப்புப் பிணைப்பை உருவாக்கியிருந்தனர்...” என்றார். “பிர்லா எங்கள் அனைவருக்கும் தேவையானவர்களுக்கு உதவும் மரபை விட்டுச்சென்றிருக்கிறார். என்னை பொறுத்தவரை, கொடுப்பது என்பது நம் வாழ்க்கையை எவ்வளவு நன்றாக வாழ்ந்தோம் என்பதற்கான அளவுகோல்... மற்றவர்களுக்காக வாழ்கின்ற வாழ்க்கை மட்டுமே வாழத் தகுதியான வாழ்க்கை,” என்று சொன்னார்.

நன்றி தெரிவிக்கும் போது RIDN பரத் பாண்டியா, ஆல்பர்ட் சபினின் பெருந்தன்மையை நினைவுகூர்ந்தார். வாய்வழி போலியோ தடுப்பூசியின் கண்டுபிடிப்பிற்கு அவர் காப்புரிமை பெற மறுத்து சொன்ன வரலாற்று புகழ்மிக்க பதிலானது “சூரியனுக்கு காப்புரிமை பெற முடியுமா?” என்று அவர் கேட்டார். ரோட்டரி மற்றும் பிர்லா குடும்பத்தின் இணைப்புப் பாலமாக இருப்பதற்கு சாபூ மற்றும் மஹாஜனுக்கு நன்றி தெரிவித்தார். “குலாமும் நானும் ராஜஸ்ரீயின் மகனான குமரமங்கலம் பிர்லாவை சந்திக்க வீட்டிற்கு சென்றபோது பிர்லா குடும்பத்தின் விருந்தோம்பலை அனுபவித்தோம். தங்கள் தாராள மனப்பான்மையைப் போலவே, தங்களுடைய விருந்தோம்பலிலும் அவர்கள் மிகுந்த தாராளம் காட்டினர். அவர்களிடம் பணம் இருப்பதினால் அவர்கள் செல்வந்தர்களாக இல்லை, கொடுப்பதினாலேயே அவர்கள் செல்வந்தர்களாக இருக்கிறார்கள்.... ஏனெனில் அவர்கள் நம்பும் விஷயங்களுக்கு கொடுத்து உலகில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார்கள்.”■

COLLECT ROTARY ON STAMPS

More than 100 nations have issued Postage stamps honouring Rotary and its activities


USA 1955 (50th year)


Japan 1978


India 1987


India 2005 (Centenary)


Germany 1980 (75th year)

Rotary On Stamps
Active RI fellowship
www.rotaryonstamps.org

"Rotary on Stamps" - a comprehensive beginner's collection available at Rs. 3200/-
For Details contact -

Rtn. Pradip Jain, FRPSL, Philatelist, Expert, Rotarian since 1977
WWW.PHILA-ART.COM, Whatsapp +91 9334132612 Email : philapradip@gmail.com

Phila Art
www.phila-art.com


# Rotary Global Rewards

வினய் குல்கர்ணி

PRIP KR ரவீந்திரன் அவர்களின் பதவிக் காலத்தில் Rotary Global Reward திட்டம் அறி முகப்படுத்தப்பட்டது, இந்த திட்டத்தின் மூலம் ரொட்டேரியன்கள் ஒருவருக்கு ஒருவர் வியாபார ரீதியாக உதவிக்கொள்ள முடியும்.

பயணம், ஆன்லைன் ஷாப்பிங், உணவு, கேளிக்கை மற்றும் பிற பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் உறுப்பினர்கள் தள்ளுபடிகளை பயன்படுத் திக்கொள்ளலாம். Amazon. com, Flipkart, Marriott, MakeMyTrip, Hertz மற்றும் Samsung ஆகியவை பங்கேற்கும் நிறுவனங்கள் ஆகும். ரோட்டரிக்கு குறிப்பிட்ட சதவீதத்தை திரும்ப நன்கொடையாக கொடுக்கிறார்கள்.

www.rotary.org/globalrewards என்ற இணைப்பின் வாயிலாக உறுப்பினர்கள்




RGR திட்டத்தில் சேரலாம். Rotary Global Rewards செயலியை Apple App Store® அல்லது Google Play™-யில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ரோட்டேரியன்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், Rotary Global Rewards திட்டத்தின் மூலம் ஆன்லைனில் ஷாப்பிங் செய்யும் போது கேஷ்பேக் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தங்களுடைய கேஷ்பேக் தொகையை ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கலாம்.

RGR திட்டத்தின் கீழ் Jet Airways ஒரு பிரதான பிராண்ட் ஆக விளங்குகிறது. Jet Airways-இன் அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான பயணத்தின் மீது ரொட்டேரியன்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் 10 சதவீதம் தள்ளுபடி பெற முடியும்

- Rotary Global Rewards தளத்தில் Jet Airways சலுகைகளை கிளிக் செய்யவும். இந்த சலுகையை பெற நீங்கள் My Rotary-யில் நுழைய வேண்டும்.
- www.jetairways.com என்ற வலைத்தளத்தில் - Claim Offer-ஐ கிளிக் செய்து 9WROTARY10 என்ற சலுகைக் குறியீட்டை அதற்குரிய கட்டத்தில் குறிப்பிடவும்.
- இந்த சலுகை இந்திய நகரங்களில் இருந்து புறப்படுகின்ற உள் நாட்டு அல்லது வெளி நாட்டு பயணத்திற்கு மட்டும் பொருந்தும்.
- அடிப்படைக் கட்டணத்தில் 10 சதவிகித தள்ளுபடி திரையின் வலதுபுறத்தில் கட்டணக் கணக்கீட்டு அட்ட வணையில் தோன்றும்.

இதன் ஆசிரியர் - தலைவர், WAS-MGI குழு, மற்றும் உறுப்பினர்- TRF நிதி மேம்பாட்டுக் குழு.

# ரோட்டரியுடன் கரூர் வைஸ்யா வங்கி பங்கேற்பு

வி. முத்துக்குமரன்



*R 3000 DG P கோபாலக்கிருஷ்ணன் KVBன் தலைவர் B சுவாமிநாதன் மற்றும் இயக்குனர் PR சேஷாத்ரி அவர்களுக்கு TRFன் பாராட்டிதழ் வழங்கினார். மாவட்ட பொதுச் செயலாளர் M பாலாஜி, PDG S ராஜேந்திரன் மற்றும் செயலாளர் L சுப்பையா அவர்களும் உள்ளனர்.*

தமிழகத்தில் திருச்சி, கரூர், தேனி, திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களில் டயாலிசிஸ் சிகிச்சை மையங்களை அமைப்பதற்கு TRFக்கு கரூர் வைஸ்யா வங்கி (KVB) ரூ.1.2 கோடி அளித்துள்ளது. ஒவ்வொரு மையத்திலும் தலா ஆறு டயாலிசிஸ் இயந்திரங்கள் வைக்கப்படும். TRFன் பங்களிப்பையும் சேர்த்து திட்டச் செலவு ரூ.2.2 கோடியாகும்.

ஒரு கார்ப்பரேட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியுதவியின் (CSR) கீழ் ரோட்டரிக்கு அளிக்கப்படும் அதிகமான தொகை இதுதான் என்று D 3000 மாவட்டத்தின் ஆளுநர் P கோபாலகிருஷ்ணன் கூறினார்.

சில மாதங்களாக வங்கியின் முதன்மைச் செயல் அலுவலர் PR சேஷாத்ரி மற்றும் பல்வேறு உயர் அதிகாரிகளுக்கும் ரோட்டரி ஃபவுண்டேஷன் கொள்கைகள், திட்ட அமலாக்கம், ரோட்டரியின் சேவை மற்றும் மனிதநேயத் திட்டங்களை விவரித்து ள்ளார் கோபாலகிருஷ்ணன். பல்வேறு நடைமுறைகளை அடுத்து KVB உரிய நிதியை அளித்தது.

## உருவானது பரஸ்பர புரிதல்

TRF உள்பட கார்ப்பரேட் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக RI அமைப்பு அனுமதித்ததை அடுத்து ரோட்டரி மாவட்ட அமைப்பு பல்வேறு நிறுவனங்களை அணுகியது என்று கரூர் டெக்ஸ்சிட்டி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த மாவட்ட ரோட்டரி செயலாளர் L. சுப்பையா தெரிவித்தார்.

KVB யின் 11 இயக்குநர்களில் நான்கு பேர் ரோட்டரி அமைப்பைச் சேர்ந்தவர்கள். வங்கியின் பல்வேறு திட்டங்களின் கீழ் கார்ப்பரேட் சமூகப் பங்களிப்பு பெறுவது தொடர்பாக நாங்கள் வலுவாக எடுத்துரைத்தோம், என்றார் DG.

கரூரில் டெக்ஸ்சிட்டி ரோட்டரி சங்கச் செயலர் A J சூரியநாரயணா, கரூர் ஏஞ்சல்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் S நிருபமாவின் கணவர் Rtn. M V சீனிவாசமூர்த்தி ஆகியோர் KVB போர்டு சார்பில் பங்கேற்றனர்.

TRF திட்டங்கள் குறித்து KVB மேலாண் இயக்குநர் உள்பட உயர் அதிகாரிகளுக்கு விவரிப்பதற்காக RI இயக்குநர் C பாஸ்கர் KVB தலைமை அலுவலகத்துக்கு வருகை தந்தார். எங்கள் இயக்குநரின் முயற்சி வங்கியின் கார்ப்பரேட் உதவி பெறுவதில் பெரிதும் துணைபுரிந்தது என்றார் கோபாலகிருஷ்ணன்.

நான்கு டயாலிசிஸ் மையங்களிலும் சிகிச்சை பெற 65 சதவீதம் வரையில் கட்டணச் சலுகை அளிக்கப்படும். ஒவ்வொரு மையத்திலும் அதன் பணிகளை மேற்பார்வையிட இரு டாக்டர்கள், இரு ரொட்டேரியன்கள் ஒரு பயனாளி என அதற்கான குழுவில் 5 பேர் இடம்பெறுவர்.

இது தொடர்பாக கரூர் KVB தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோபாலகிருஷ்ணன் தலைமையில் மாவட்டத்தின் சங்கத் தலைவர்கள், சுவாமிநாதன், சேஷாத்ரி, மற்றும் 9 இயக்குநர் களுக்கு தனித்தனியாக பாராட்டி தழும் வழங்கப்பட்டது.

RI அமைப்பின் தலைவர் இயான் ரிஸ்லி, அறக்கட்டளைத் தலைவர் பால் நெட்ஸெல் ஆகியோர் கையெழுத்திட்ட ரோட்டரி ஃபவுண்டேஷன் சான்றிதழை மாவட்ட ஆளுநர் P கோபாலகிருஷ்ணன் வங்கி அதிகாரியைப் பாராட்டி சேஷாத்ரிக்கு வழங்கினார்.■

# District Wise TRF Contributions as on April 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | India | | | | |
| 2981 | 37,456 | 4,675 | 0 | 0 | 42,131 | 213 | 4.9% |
| 2982 | 62,534 | 2,320 | 2,725 | 0 | 67,579 | 396 | 14.6% |
| 3000 | 83,244 | 7,267 | 344,802 | 41,265 | 476,579 | 2,084 | 41.2% |
| 3011 | 123,508 | 714 | 110,743 | 16,462 | 251,427 | 408 | 13.4% |
| 3012 | 39,251 | 6,693 | 112,590 | 3,016 | 161,549 | 213 | 6.1% |
| 3020 | 57,745 | 23,554 | 49,950 | 42,478 | 173,727 | 196 | 4.6% |
| 3030 | 923 | 22,724 | 1,050 | 0 | 24,697 | 3 | 0.1% |
| 3040 | 11,706 | 15 | 48,307 | 0 | 60,028 | 43 | 2.0% |
| 3053 | 9,283 | 78 | 22,129 | 25,000 | 56,490 | 25 | 0.9% |
| 3054 | 16,578 | 203 | 305,368 | 1,000 | 323,150 | 47 | 0.8% |
| 3060 | 143,203 | 1,503 | 206,936 | 26,992 | 378,635 | 1,106 | 29.0% |
| 3070 | 40,482 | 198 | 25,794 | 1,084 | 67,559 | 221 | 7.5% |
| 3080 | 112,877 | 16,151 | 21,178 | 92 | 150,299 | 195 | 6.0% |
| 3090 | 608 | 0 | 2,500 | 0 | 3,108 | 3 | 0.1% |
| 3100* | 14,629 | 0 | 0 | 0 | 14,629 | 56 | 3.5% |
| 3110 | 65,802 | 3,498 | 60,631 | 0 | 129,931 | 166 | 4.3% |
| 3120 | 81,367 | 508 | 50,231 | 0 | 132,106 | 111 | 3.8% |
| 3131 | 400,754 | 734 | 361,055 | 90,098 | 852,641 | 1,293 | 25.4% |
| 3132 | 75,426 | 1,406 | 7,875 | 16,000 | 100,707 | 229 | 5.2% |
| 3141 | 620,700 | 23,006 | 738,463 | 105,001 | 1,487,169 | 1,117 | 21.9% |
| 3142 | 344,523 | 18,808 | 788 | (1,000) | 363,119 | 800 | 29.6% |
| 3150 | 56,064 | 12,557 | 44,750 | 62,000 | 175,370 | 330 | 9.2% |
| 3160 | 125,394 | 1,000 | 0 | 8,338 | 134,732 | 184 | 7.9% |
| 3170 | 48,107 | 8,058 | 23,815 | 0 | 79,979 | 327 | 6.1% |
| 3181 | 91,783 | 1,091 | 0 | 78 | 92,952 | 698 | 23.1% |
| 3182 | 78,094 | 0 | 39,417 | 0 | 117,510 | 721 | 22.9% |
| 3190 | 86,340 | 27,448 | 108,689 | 93 | 222,570 | 79 | 1.6% |
| 3201 | 156,262 | 14,114 | 206,098 | 5,323 | 381,797 | 236 | 4.6% |
| 3202 | 51,430 | 7,819 | 0 | 2,773 | 62,021 | 114 | 2.4% |
| 3211 | 120,642 | 100 | 0 | 53,846 | 174,588 | 118 | 2.8% |
| 3212 | 254,909 | 35,135 | 32,500 | 2,000 | 324,544 | 574 | 15.5% |
| 3231 | 125,350 | 15,250 | 171,250 | 70,914 | 382,764 | 90 | 3.6% |
| 3232 | 351,483 | 33,718 | 114,382 | 20,300 | 519,884 | 449 | 12.2% |
| 3240 | 83,006 | 1,942 | 0 | 8,367 | 93,315 | 310 | 10.6% |
| 3250 | 83,410 | 100 | 9,673 | 10,000 | 103,183 | 195 | 5.5% |
| 3261 | 39,221 | 115 | 29,112 | 0 | 68,448 | 130 | 5.5% |
| 3262 | 76,220 | 227 | 7,981 | 0 | 84,428 | 294 | 8.9% |
| 3291 | 53,961 | 26,675 | 58,789 | 119,279 | 258,703 | 53 | 1.4% |
| **India Total** | **4,224,275** | **319,404** | **3,319,569** | **730,800** | **8,594,048** | **13,827** | **10.0%** |
| 3220 Sri Lanka | 119,518 | 10,427 | 6,998 | 1,217 | 138,160 | 575 | 30.2% |
| 3271 Pakistan | 39,401 | 70,699 | 11,752 | 0 | 121,851 | 84 | 5.9% |
| 3272 Pakistan | 33,009 | 2,799 | 0 | 1,000 | 36,809 | 62 | 2.3% |
| 3281 Bangladesh | 387,884 | 15,106 | 328,990 | 86,037 | 818,016 | 704 | 12.5% |
| 3282 Bangladesh | 102,819 | 1,964 | 0 | 1,000 | 105,783 | 453 | 12.0% |
| 3292 Nepal | 134,681 | 26,214 | 618,772 | 0 | 779,668 | 662 | 15.1% |
| **South Asia Total** | **5,041,587** | **446,613** | **4,286,082** | **820,054** | **10,594,336** | **16,367** | **12.0%** |
| **World Total** | **97,206,324** | **28,158,399** | **14,799,410** | **20,943,478** | **161,107,611** | | |

* Non-districted

Source: RI South Asia Office

# D3232ன் துணிச்சல்மிக்க பெண் தலைவர்கள்

ஜெய்ஸ்ரீ மற்றும் கிரண் ஜெஹ்ரா

மாவட்டம் 3232 சமீபத்தில் அதன் 20 பெண் தலைவர்களை அவர்களது தலைமைப் பங்கிற்காக மகிழ்ச்சியாக பாராட்டிக் கொண்டாடியது. மாவட்டத்திலுள்ள 103 சங்கங்களில் இந்த வருடம் 20 சங்கங்கள் பெண்களால் தலைமை தாங்கப்பட்டது. “அவர்கள் நம் மாவட்டத்தின் நவரத்தினங்கள். எந்த ஒரு அமைப்பும் வெற்றி பெற வேண்டுமென்றால் நாம் பெண்களின் முயற்சியை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். மேலும் அவர்களது அபரிமிதமான திறமையை நாம் உபயோகித்துக்கொள்வதோடு நிறைய பெண்கள் தங்களுடைய முன்மாதிரிகளை பின்பற்றுவதையும் தங்களுடைய கூட்டைவிட்டு வெளியே வருவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும்,’’ என்று DG ஸ்ரீனிவாசன் கூறினார். மே 6 அன்று சென்னையில் நடைபெற்ற மகளிர் தலைமைத்துவ உச்சிமாநாடு, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1987 மே 4ஆம் தேதி பாலின அடிப்படையில் ரோட்டரி சங்கங்கள் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்வதை தவிர்க்கக்கூடாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை கொண்டாடியது. தலைவர்கள் பற்றிய நகைச்சுவையான ஒலி-ஒளிக் காட்சி அறிமுகத்தில் இருந்து நன்றாக நடத்தப்பட்ட அமர்வுகள் வரை, மற்றும் சிறிது நன்கொடைகள் என்று அந்த மாலைப்பொழுது கேளிக்கை நிரம்பிய நடவடிக்கைகளாலும் செயல்பாடுகளாலும் நிறைந்திருந்தது.

அதே சமயம், அரங்கத்தின் வெளியே ஆறு குழந்தைகள் கருப்பு வெள்ளை உடையணிந்து இசையின் தாளத்துக்கு (கை அடி) ஏற்ப உற்சாகத்துடன் நடனம் பயின்று கொண்டிருந்தார்கள். அதில் ஒரு பெண்குழந்தை கூறினாள், “எங்கள் நடனத்தின் மூலம் அனைவருக்கும் நாங்கள் HIV தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை சொல்லப் போகிறோம்.’’ HIV பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் வாய்ப்பினை வழங்குவதற்காக 20 சங்கங்களின் ஒருங்கிணைந்த திட்டமான Project Hopeன் பிரதிநிதிகளாக அந்த குழந்தைகள் விளங்கினர்.

திரைப்படக் கலைஞர் கஸ்தூரி சங்கர், Women of substance என்ற அமர்வை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது, “எந்த ஒரு பெண் அசைக்க முடியாத சுயமரியாதையுடன் தன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறாளோ அந்தப் பெண் தான் women of substance.’’ பெண்கள் ஆண்களை விட ஒரு முழு தலைமுறைக்கு நேர்மறையான வழியை காட்ட முடியும், ஆனால் துரதிஷ்டவசமாக இந்தியப் பெண்களுக்கு இன்னும் தங்கள் மதிப்பு தெரியவில்லை.

*ரோட்டரியில் சேருவதற்கு ரொட்டேரியன்களின் மனைவிமார்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.*

**அனிதா பரமசிவன்**
*தலைவர், RC சென்னை, K K நகர்*



"சக்தியும் மற்றவர் மீது நேர்மறையான தாக்கமும் உள்ள பெண்கள் தான் women of substance," என மெட்ராஸ் மிட்டவுன் சங்கத் தலைவர் உஷா குமார் கூறினார். "நீங்கள் அசௌகரியமாக உணரும்போது உங்கள் குரலை உயர்த்த வேண்டும். மேலும் அடுத்தவர்கள் தவறு செய்யும்போது அதை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மிக முக்கியமாக, உங்கள் மகன்களுக்கு பெண்களை மதிக்க கற்றுக் கொடுங்கள். இந்த உலகம் இனிமேல் ஒரு நிர்பயாவை பார்க்கக் கூடாது," என மெட்ராஸ் நார்த் RC தலைவர் அனிதா டேவிட் பெண்களிடம் வலியுறுத்தினார். சென்னை கீழ்ப்பாக்கம் RC தலைவர் ராஜஸ்ரீ, ஆறு வயதில் அவருடைய மகன் பள்ளியில் ஒரு கட்டுரை எழுதும்போது அதில் தன்னுடைய தாயார் தான் அவருக்கு முன்மாதிரி



*சங்கத் தலைவர்கள் அனிதா பரமசிவன், லதா கமலேஷ், M சுகுணா தேவி மற்றும் உஷா அஜித் குமார் சமூக ஆர்வலர் லஷ்மி ராமகிருஷ்ணனுடன்.*



*இடதுபுறத்திலிருந்து : ப்ரமீளா, உஷா குமார், சாரதா சுந்தரம், கஸ்தூரி சங்கர், ராஜஸ்ரீ தாண்டி, அனிதா டேவிட் மற்றும் ஹேமலதா கேசவன்.*

*உங்கள் மகன்களுக்கு பெண்களை மதிக்க கற்றுக் கொடுங்கள். இந்த உலகம் இனிமேல் நிர்பயாவை பார்க்கக் கூடாது.*

அனிதா டேவிட்
தலைவர், RC மெட்ராஸ், நார்த்

என்று எழுதியிருந்ததை இன்று அவரது இருபத்தோராவது வயதிலும் கடைப்பிடிக்கிறார் என்று தெரிவித்தார்.

அரங்கில் உள்ள பெண்களின் பன்முகத்தன்மையை குறித்து கஸ்தூரி பேசும்போது, "ரோட்டரி பல்வேறு பின்னணியில் இருக்கும் பெண்களை இணைக்கவும் நன்மைகள் செய்யவும் ஒன்று கூடுகிறது. அதனால் இந்த ஒரு வருடத்தோடு நிறுத்திவிடாதீர்கள். வெளியே சென்று பெண்களை ஊக்குவித்து அவர்களின் திறமையை அவர்களுக்கு காண்பியுங்கள். அதுவும் உங்கள் கடமையின் ஒரு பகுதியாகும்,'' என்றார்.

பெண்களின் பல்வேறு பங்கு குறித்த ஒரு விவாதத்தின் போது அரங்கில் உள்ள ஆண்களைப் பார்த்து கஸ்தூரி கேட்டார்: "உங்கள் மனைவி

# தலைவர்களின் குரல்கள்

*தலைவர்கள் எப்படி தங்கள் வருடத்தை நிர்வகித்தார்கள் என்பதையும் அவர்கள் சந்தித்த சவால்களை பற்றிய கேள்விக்கு ஒரு சுவாரஸ்யமான உட்பார்வை அளித்தனர். அனிதா பரம சிவன் (சென்னை K K நகர் RC) செழியன் திட்டம் அவரது மனதிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. காஞ்சிபுரம் அருகே உள்ள கடலாடி கிராமத்தில் 7 லட்ச ரூபாய் மதிப்புள்ள ஆறு விசைத் தறிகள் வழங்கப்பட்டன. "அந்தப் பகுதியைச் சேர்ந்த 4,500க்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச கண் கண்ணாடி மற்றும் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது; காமதேனு திட்டத்தின் கீழ், சமுதாயத்தில் பின்தங்கியிருப்பவர்களுக்கு சிறுகடன் உதவி மற்றும் வேலை வாய்ப்பு அளித்தது போன்றவை பிற திட்டங்கள். "ஒரு விதவைக்கு ஒரு தேநீர் கடை அமைக்க உதவியது எனக்கு மகிழ்ச்சியை தந்தது, இப்போது அவர் மாதம் ஒன்றுக்கு ரூ 15,000 சம்பாதிக்கிறார்."*

*அனிதா, ஒரு கதிரியக்க மருத்துவர், பல்வேறு சங்கங்களில் ஆன்ஸ்களுக்கு மார்பக புற்றுநோய் பற்றிய விழிப் புணர்வு ஏற்படுத்தியுள்ளார். "பல பெண்கள் மார்பகத்தின் ஒரு சிறிய கட்டி இருந்தால் கூட அது மார்பக புற்று நோயாக இருக்குமோ என பயப்படுகிறார்கள். ஆனால் அது புற்றுநோயாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. என்னுடைய தொழில் வாயிலாக அந்தக் கட்டுக்கதையை நான் தகர்க்க விரும்புகிறேன்," என்றார்.*

*பெண் உறுப்பினர் எண்ணிக்கையை எவ்வாறு மேம்படுத்துவது என்று பேசும்போது: "ரோட்டரியில் சேருவதற்கு ரொட்டேரியன்களின் மனைவிமார்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களில் பெரும்பாலோர் ரோட்டரி நடவடிக்கைகளுக்கு தங்கள் மனைவியை அழைத்துவர விரும்புவதில்லை. அதிக குடும்ப பங்களிப்பு பற்றி இந்த ஆண்டு நான் வலியுறுத்தினேன்."*

*ஷாரதா சுந்தரம் (சென்னை ஸ்பாட்லைட் RC-அனைத்து மகளிர் சங்கம்) அவரது முதல் திட்டம் யாத்ரா மூலம், அங்கு நான்கு பெண்கள் தமிழ்நாட்டின் மாவட்டங்களில் பயணித்து, சமீபத்தில் வர்தா போன்ற சூறாவளிகளின் அழிவுகளை எதிர்கொள்ளும் உள்ளூர் மரங்களை நடுவதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். ''பிற இடங்களில் ரொட்டேரியன்கள் விருந்தோம்பும் பண்பு ரோட்டரி என்றால் என்ன என்ற உண்மையை எடுத்துரைக்கும் விதத்தில் இருந்தது. பிணைப்பு மற்றும் தோழமை மற்றும் ஒரு ரொட்டேரியனாக இருப்பதன் பெருமை ஆகியவற்றை நான் அதிலிருந்து கற்றுக்கொண்டேன்," என்று அவர் கூறினார்.*

*அனிதா டேவிட் (49), சென்னை நார்த் சங்கத்தின் முதல் பெண் தலைவராகவும், சங்கத்தின் ஒரே பெண் உறுப்பினராகவும் இருக்கிறார். "நான் மூன்று பெண் உறுப்பினர்களைச் சேர்த்துள்ளேன்." அவர் ஒரு ஆண் மேலாதிக்கம் உள்ள சங்கத்தில் ஏதாவது சவால்களை எதிர்கொண்டாரா? "இல்லை, ஒவ்வொரு உறுப்பினரும் மிகுந்த ஒத்துழைப்போடு ஆதரவையும் வழங்கினர். நான் ஏதாவது ஒரு திட்டத்தைப் பரிந்துரைக்கும்போது, பணம் கொட்டும் மற்றும் அனைத்து உறுப்பினர்கள் தொண்டு செய்ய தயாராக இருந்தனர்," என்று அவர் கூறினார். அவரது தலைமையின் கீழ், சங்கம் புழல் சிறைச்சாலையின் கைதிகளுக்கு புத்தகங்களை நன்கொடையாக அளித்ததுடன் அவர்களுக்கு ஒரு RYLA ஏற்பாடு செய்தது. அவர் ஒரு சரக்குப் பகிர்வு நிறுவனத்தின் இயக்குனராக இருக்கிறார். அவர் தலைவராகப் பணியாற்றுகின்ற காலத்தில் அவரது வேலையை சென்னை சினைசன்ஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரான அவரது கணவர் கவனித்துக்கொள்கிறார்.*

*ராஜஸ்ரீ (கீழ்பாக்கம் RC) ஒரு மென்பொருள் நிறுவனத்தில் மூத்த இயக்குநராக உள்ளார். சங்கம் 7 பெண்களுடன் 33 உறுப்பினர்களை கொண்டுள்ளது. பெண்கள் ரோட்டரியில் ஏன் சேரவில்லை என்பதை பற்றி அவரது கருத்துக்கள்: "ரோட்டரியில் சேவை புரிய நிறைய பணமும் நேரமும் தேவைப்படும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், எவ்வளவு நன்கொடை வழங்க வேண்டும், எப்படி பங்களிக்க விரும்புகிறீர்கள் என்பது உங்களுடைய விருப்பம் என நான் கருதுகிறேன். "மூன்று பள்ளிகளுக்கு ஸ்மார்ட் வகுப்புகள், செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள் மற்றும் காது கேளாதோருக்கு ஆடியோமெட்ரிக் கருவிகள் ஆகியவற்றை நன்கொடை யளித்தது என் மனதைத் தொடும் திட்டங்களாகும் என்று புன்முறுவல் புரிந்தார்.*

*அபூர்வா பிரசாத் (மெட்ராஸ் நெக்ஸ்ட்ஜென் RC) ஒரு மனிதவள ஆலோசகர். "எங்கள் குழுவில் பல்வேறு கருத்துகளையும் யோசனைகளையும் கொண்ட உயிர்ப்பான 55 பேர் உறுப்பி னர்களாக இருக்கிறோம். "அவர் 10 புதிய உறுப்பினர்களை சேர்த்துள்ளார். மாவட்டத்தின் மானியங்களைப் பயன்படுத்தி காதுகேளாதோருக்கான பள்ளியின் பெண்கள் கழிப்பறையை புனரமைத்தது தான் அவரின் பிரதான திட்டம். மனநிலை குன்றிய குழந்தைகளுக்கு டயாபர் வழங்கியது, மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஒரு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தியது ஆகியவை மற்ற திட்டங்கள் ஆகும். "சலிப்படைந்து உட்காரும் கூட்டங்களுக்குப் பதிலாக, நாங்கள் பேட்மின்டன் ஆட்டம் அல்லது நீச்சல் அல்லது ஒரு அக்வா-யோகா செய்வோம்," என அபூர்வா கூறினார்.*

*"நாங்கள் வெளியே சென்று உலகத்தை சரிசெய்து, வீட்டிற்கு வந்து எங்கள் குழந்தையின் உடைந்த பொம்மைகளையும் சரி செய்கிறோம். பெண் தலைவர்கள் ஆண்கள் எதிர்கொள்ளாத சில சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆனால் அந்த நாள் முடிவில் இந்த சவால்கள் எங்களை வலுவாக ஆக்கும். என் நம்பிக்கையையும் உறுதியையும் வளர்க்க எனக்கு உதவி செய்த ரோட்டரிக்கு நன்றி கூறுகிறேன்," என்று மீனம்பாக்கம் சங்கத் தலைவர் ஹேமா கேசவன் தெரிவித்தார்.*

*ஆதம்பக்கம் RC தலைவர் மாலதி குருராஜன் கூறியதாவது, "பெண்கள் முன்னோக்கி செல்ல அனுமதிக்கும் வாய்ப்புகளிலிருந்து விலகக்கூடாது என்று கற்றுக்கொண்டேன். அது ஒரு வேலையாகவோ அல்லது நிறைய எதிர்பார்ப்பைக் கொண்ட ஒரு பாத்திர மாகவோயிருக்கலாம். நாம் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்."*




DG R ஸ்ரீனிவாசனும் அவர் மனைவி சுஜாதாவும் D 3232 பெண் தலைவர்களுடன்.

ஒரு முதன்மை பராமரிப்பாளரின் பங்கினை கைப்பற்றியது நியாயம் என நீங்கள் நினைக்கிறீர்களா?'' அதற்கு, ''ஆண்கள் பொதுவாக தங்கள் குழந்தை ஒரு ஆரோக்கியமான உடல் நிலையுடனும் மன நிலையுடனும் வளரும் வரை எந்த ஒரு பாதுகாப்பின்மையையும் உணர்வதில்லை,'' என PDG ரேகா ஷெட்டியின் கணவர் ஜெய் ஷெட்டி உடனடியாக பதில் அளித்தார். அவரது கேள்வி: ''மாமியாராக உங்கள் பங்கைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?'' இது உயிர்ப்பான இன்னொரு விவாதத்திற்கு வழி வகுத்தது.

கஸ்தூரி பார்வையாளர்களுக்கு ஒரு சவாலான கேள்வியுடன் அமர்வை முடித்தார்: ''விவாகரத்து செய்ய விரும்பும் பெண்கள் கடுமையான தேர்வான தனித்திருக்க தேர்ந்தெடுப்பதை நாம் சமுதாயமாக ஒப்புக்கொள்கிறோமா... அந்த மாதிரி பெண்களை ஒப்புக்கொண்டு அவர்களுக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளோமா?''

HIV நோயாளிகளுக்கு 20 சங்கங்களின் மறுவாழ்வுத் திட்டமான Project Hope பற்றிய ஒரு ஆவணப் படத்தை சமூக ஆர்வலரான லட்சுமி ராமகிருஷ்ணன் துவைக்கி வைத்தார். அத்தகைய குழந்தைகளுக்கு தொழில் திறன்கள் மற்றும் அடிப்படை கல்வி அறிவு ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக ரொட்டேரியன்கள் எடுக்கும் முயற்சிகளை காண்பித்தது.

''அவர்கள் வெளிப்படையாக வெளியே வந்து தங்கள் நிலையை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளார்கள். நாம் அவர்களை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளோமா?'' என்று லட்சுமி கேட்டார். ரொட்டேரியன் களின் பதில் மிக நேர்மறையாக இருந்தது. மெட்ராஸ் ஈஸ்ட் RC தலைவர் B S புருஷோத்தமன் மற்றும் சென்னை கேலக்ஸி RC தலைவர் அன்ஷுல் அகர்வால் இருவரும் அத்திட்டத்திற்கு ஆதரவை தெரிவித்தனர். இதனை தொடர்ந்து குழந்தைகளின் நடனம் இடம் பெற்றது, அவர்கள் தங்கள் முக மூடியைக் களைந்து அவர்களது அபிலாசைகளை வெளிப்படுத்தினர். இந்தக் குழந்தைகள் உங்கள் பரிதாபத்தை வேண்டவில்லை, அவர்களுக்கு உங்கள் பரிவு தான் தேவை. அவர்களுக்குத் தேவையானது அன்பு தான், அதை நாம் நிறைய கொடுக்க முடியும்,'' என்று அவை யோரிடம் கூறி அமர்வை முடித்தார் சென்னை மீராக்கி RC தலைவர் சிவபாலா.

கேளிக்கை நிகழ்ச்சியாக ஆனேட்ஸின் ஒரு ராம்ப் வாக் மற்றும் நடனம் நிகழ்த்தப்பட்டது.■

---

*சலிப்படைந்து உட்காரும் கூட்டங்களுக்குப் பதிலாக, நாங்கள் பேட்மின்டன் ஆட்டம் அல்லது நீச்சல் அல்லது ஒரு அக்வா-யோகா செய்வோம்.*

**அனிதா பரமசிவன்**
தலைவர், RC சென்னை, K K நகர்

---

# விவசாயிகளுடன் ரோட்டரி இயக்கம்

கிரண் ஸெஹ்ரா

விவசாயம் எளிதான வேலை என்று நினைக்கிறீர்களா? மண் வெட்டி, கடபாரையை கொண்டு நிலத்தில் வேலை செய்து பாருங்கள் தெரியும் என்கிறார், செகந்திராபாத் மேற்கு (D 3150) ரோட்டரி சங்கத்தின் தலைவர் சுரேன் போருரி.

கிராமின் மால் ஃபவுண்டேஷன் கிராம அங்காடி அறக்கட்டளையுடன் இணைந்து ரோட்டரி சங்கம் ஹைதராபாதுக்கு 70 கி.மீ. தொலைவில் உள்ள ஜெய்துபள்ளி கிராமத்தில் முழுநாள் கிராமோத்ஸவம் (கிராமத் திருவிழா) நடத்தியது. இந்தத் திருவிழா விவசாயிகளின், குறிப்பாகப் பெண்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடத்தப்பட்டது. இந்தக் கிராமத் திருவிழாவின் நோக்கம் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், மண்டல விவசாய நிறுவனங்களிடமிருந்து விவசாயத்துக்குத் தேவையான இடுபொருட்களை எளிதாகப் பெறும் வழிவகைகளைக் கூறுதல், ரோட்டரி சங்கம் தத்து எடுத்துள்ள கிராமத்துக்கான தகவல்களைத் திரட்டுதல் ஆகிய குறிக்கோள்களை மையமாகக் கொண்டு செயல்படுவது ஆகும்.

ஜெய்துபள்ளி கிராமம் அனந்தகிரி மலையைச் சுற்றிய பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 500 விவசாயிகள் இந்த விழாவில் உற்சாகமாகப் பங்கேற்றனர். ரோட்டரி சங்கத்தினரும் புதிய அனுபவம் பெற்றனர். விவசாயிகளின் இடர்பாடுகள், கஷ்டங் களையும் அவர்கள் உணர்ந்துகொண்டனர்.

சூரியகாந்தி பயிரிட்டு வளர்க்கும் லட்சுமி என்ற விவசாயி, விவசாயம் செய்வதற்குப் போதிய நிதி கிடைப்பதிலும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதிலும் மிகுந்த சவால் உள்ளது. வானிலை குறித்த தகவல்கள் தெரியாமல் போவதால், விவசாயப் பொருட்களை விற்பது சிரமமாகிவிடுகிறது. காரணம், பாரம்பரிய முறையில்தான் விவசாயம்



*DG J ஆப்ரகாம் மற்றும் ரோட்டரியினர் பயிர்களை பார்வையிடுகின்றனர்.*

செய்கிறோம். தொழில்நுட்ப தகவல் எங்களுக்குக் குறைவு என்றார்.

திட்ட ஒருங்கிணைப் பாளர் சீதாராமன், கிராமங்களில் நிலத்தடி நீரை அதிகரிக்கவும் பாசனத்தை மேம்படுத்தவும் 2013ம் ஆண்டு ரோட்டரி தடுப்பு அணைத் திட்டம் தொடங்கப்பட்டது. அது முதல் இந்தப் பகுதி விவசாயிகளுக்கு ரோட்டரி சங்கம் உருவாக்கிய விவசாய ஆதரவு மாதிரி திட்டத்தின் மூலம் மண்ணை வளப்படுத்தி, சுற்றுச்சூழலைக் காத்து, உணவு உற்பத்திக்கும், கிராமத்தினரின் ஊட்டச் சத்துப் பாதுகாப்புக்கு உதவும் பல்வேறு சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.




DG J *ஆப்ரகாம் மாவட்ட ஆட்சியர் சையது ஓமர் ஜலீலிடம்* MoU *அளித்தார்.*



அத்துடன், விவசாயிகளின் பல பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதுடன், உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் சந்தையையும் இணைத்துத் தருகிறோம் என்றார்.

ஹைதராபாதில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தானிய ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Millet Research), தண்டூரில் உள்ள இந்திய எண்ணெய் ஆராய்ச்சி மற்றும் வேளாண் ஆய்வு நிலையம் உள்பட விவசாயம் சார்ந்த நிறுவனங்கள் கிராமத் திருவிழாவை ஒட்டி தங்களது ஸ்டால்களை அமைத்திருந்தன. அவற்றுக்கு விவசாயிகள் வந்து கலந்துரையாடினர். பயிர் மகசூல் முறை, விவசாயம், சந்தை ஆகியவை குறித்த புதிய முறைகள், தகவல்களை அவர்கள் கேட்டறிந்து கொண்டனர். ரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள்ஆகியவற்றை விவசாயிகள் கைவிட்டு இயற்கை உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும்படி அறிவுறுத் தப்பட்டனர்.

இங்குள்ள விவசாயி களின் விளைபொருட்களை 12 கம்பெனிகள் நேரடியாகக் கொள்முதல் செய்ய முன் வந்தன.

ரோட்டரி சங்கத்தின் ஏற்பாட்டில் நான்கு கிராமங்களைச் சேர்ந்தவர் களைக் கொண்ட நான்கு கிரிக்கெட் குழுக்கள் அமைக்கப்பட்டு, விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. ரோட்டரி சங்கத்தினரும் சுத்தமான கிராமிய உணவுகளை ருசித்துச் சாப்பிட்டனர்.

500 லிட்டர் அளவுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான இயந்திரத் தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஆப்ரகாம் மாவட்ட ஆட்சியர் சையது ஓமர் ஜலீலிடம் அளித்தார். விவசாயிகளுக்கு ஆதரவான ரோட்டரி சங்கத்தின் சேவைகளையும் முயற்சிகளையும் மாவட்ட ஆட்சியர் மனமாரப் பாராட்டினார். ரோட்டரி திட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

## இதர திட்டங்கள்

ரூ. 7 லட்சம் செலவில் 160 மாணவியருக்கு சைக்கிள்கள் அளிப்பது, மொத்தம் ரூ. 50 லட்சம் செலவில், 13 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றுவது உள்ளிட்ட ரோட்டரியின் பல்வேறு பணிகள், திட்டங்களை சங்கத் தலைவர் போருரி விவரித்தார்.

விசாகா துறைமுக நகர ரோட்டரி சங்கம் அமெரிக்காவின் நாபர்வில்லி ரோட்டரி சங்கத்துடன் (D 6450) சர்வதேச கூட்டாளியாக இணைந்து, உலகளாவிய மானிய உதவியின் கீழ் புற்றுநோய் ஆய்வு, கண்டுபிடிப்புக் கருவியை விசாகப் பட்டினத்தில் உள்ள ஹோமிபாபா புற்றுநோய் ஆய்வு மருத்துவமனைக்கு வழங்கியது.

அத்துடன், மொத்தம் ரூ. 1.2 கோடியில் மாவட்டம் முழுவதும் 295 உப்பு நீரைக் குடிநீராக மாற்றும் கருவிகளை (RO water plants) அமைக்கவும் ரோட்டரி சங்கம் திட்டமிட்டுள்ளது.■

## Presidential Citation 2017–18

It is time for Rotary clubs to submit their reports for the Presidential Citation. The last date for filing the report of your achievements is June 30.

Please refer *Rotary News* July 2017 issue to get information as to how to qualify for the Citation, or visit *www.rotary.org/presidential-citation.* If you have questions, write to *riawards@rotary.org.*

Rotary

## Rotary at a glance

Rotarians : 12,35,496

Clubs : 35,810

Districts : 539

Rotaractors : 2,54,472*

Clubs : 11,064*

Interactors : 5,23,733*

Clubs : 22,771*

RCC members: 2,26,366*

RCC : 9,842*

* As on May 1, 2018

# Membership Summary

As on May 1, 2018

| RI Zone | RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2981 | 112 | 4,640 | 220 | 60 | 226 | 170 |
| 5 | 2982 | 69 | 3,074 | 134 | 64 | 112 | 45 |
| 5 | 3000 | 126 | 5,321 | 458 | 296 | 665 | 195 |
| 4 | 3011 | 77 | 3,407 | 664 | 58 | 109 | 25 |
| 4 | 3012 | 87 | 3,430 | 668 | 70 | 129 | 55 |
| 5 | 3020 | 92 | 4,241 | 210 | 117 | 465 | 351 |
| 4 | 3030 | 92 | 5,055 | 628 | 81 | 312 | 164 |
| 4 | 3040 | 95 | 2,154 | 236 | 60 | 124 | 137 |
| 4 | 3053 | 74 | 2,824 | 436 | 18 | 51 | 94 |
| 4 | 3054 | 130 | 6,362 | 1,009 | 94 | 309 | 469 |
| 4 | 3060 | 99 | 4,259 | 454 | 61 | 123 | 132 |
| 4 | 3070 | 103 | 3,084 | 300 | 68 | 158 | 54 |
| 4 | 3080 | 77 | 3,341 | 225 | 73 | 216 | 108 |
| 4 | 3090 | 80 | 2,193 | 88 | 32 | 37 | 122 |
| 4 | 3100* | 74 | 1,721 | 74 | 11 | 72 | 146 |
| 6 | 3110 | 115 | 4,019 | 318 | 51 | 49 | 104 |
| 6 | 3120 | 78 | 3,311 | 371 | 37 | 59 | 51 |
| 4 | 3131 | 131 | 5,596 | 1,163 | 112 | 284 | 89 |
| 4 | 3132 | 105 | 4,126 | 428 | 66 | 205 | 140 |
| 4 | 3141 | 89 | 5,435 | 1,170 | 120 | 252 | 82 |
| 4 | 3142 | 83 | 3,166 | 490 | 70 | 195 | 65 |
| 5 | 3150 | 99 | 3,687 | 371 | 93 | 229 | 109 |
| 5 | 3160 | 70 | 2,459 | 131 | 27 | 48 | 81 |
| 5 | 3170 | 127 | 5,658 | 409 | 60 | 309 | 161 |
| 5 | 3181 | 72 | 3,172 | 238 | 35 | 179 | 104 |
| 5 | 3182 | 83 | 3,441 | 264 | 36 | 274 | 93 |
| 5 | 3190 | 129 | 5,176 | 631 | 151 | 357 | 50 |
| 5 | 3201 | 140 | 5,266 | 321 | 101 | 131 | 47 |
| 5 | 3202 | 128 | 4,872 | 242 | 105 | 436 | 46 |
| 5 | 3211 | 137 | 4,500 | 271 | 13 | 89 | 123 |
| 5 | 3212 | 98 | 3,999 | 301 | 113 | 278 | 133 |
| 5 | 3231 | 70 | 2,949 | 127 | 56 | 200 | 238 |
| 5 | 3232 | 105 | 4,221 | 603 | 146 | 311 | 80 |
| 6 | 3240 | 88 | 3,061 | 356 | 62 | 147 | 152 |
| 6 | 3250 | 97 | 3,773 | 669 | 51 | 209 | 180 |
| 6 | 3261 | 68 | 2,512 | 294 | 16 | 102 | 42 |
| 6 | 3262 | 95 | 3,305 | 381 | 46 | 70 | 75 |
| 6 | 3291 | 145 | 3,802 | 706 | 81 | 131 | 592 |
| **India Total** | | **3,739** | **1,46,612** | **16,059** | **2,811** | **7,652** | **5,104** |
| 5 | 3220 | 69 | 1,941 | 247 | 84 | 200 | 75 |
| 6 | 3271 | 81 | 1,455 | 250 | 52 | 16 | 13 |
| 6 | 3272 | 161 | 3,361 | 467 | 44 | 36 | 37 |
| 6 | 3281 | 205 | 5,911 | 851 | 232 | 86 | 186 |
| 6 | 3282 | 141 | 4,026 | 398 | 132 | 47 | 39 |
| 6 | 3292 | 114 | 4,446 | 671 | 122 | 115 | 108 |
| **S Asia Total** | | **4,510** | **1,67,752** | **18,943** | **3,477** | **8,152** | **5,562** |

**Non-districted.*

*Source: RI South Asia Office*

# ரோட்டரி மண்டல நிறுவனம், சென்னை

வி. முத்துகுமரன்



வி. முத்துகுமரன்

*இடதுபுறத்திலிருந்து :* PRID PT *பிரபாகர்,* RID C *பாஸ்கர்,* RIDN *பரத் பாண்ட்யா,* PDG *ராஜா ராமகிருஷ்ணன்,* PDG N *சுப்ரமணியன் மற்றும் மாநாட்டின் தலைவர்* ISAK *நாசர்.*

மண்டலங்கள் 4, 5 மற்றும் 6ன் ரோட்டரி தலைவர்கள், சென்னை லீலா பேலஸ்ஸில் அக்டோபர் 5-7ல் நடைபெறவிருக்கும் ரோட்டரி மண்டல நிகழ்ச்சிப் பற்றிய முக்கியமான கூறுகளைப் விவாதிப்பதற்காகச் சந்தித்தனர். நிறுவனத்தின் தலைவர் PDG ISAK நாசர், நிறுவனக் குழுவின் உறுப்பினர்களை அறிமுகப்படுத்தினார். 1,000த்திற்கும் மேற்பட்ட பதிவுகளை இலக்காகக் கொண்டு இருக்கிறார்கள் அமைப்பாளர்கள், இதுவரை 300க்கு மேல் பதிவு செய்துள்ளனர். RID C பாஸ்கர், ஒருங்கிணைப்பாளராகவும், D 3011 PDG N சுப்ரமணியம், செயலா ளராகவும், PT ராம்குமார் பொருளாளராகவும், PRID PT பிரபாகர் ஆலோசகராவும் இருப்பார்கள். RIDN பரத் பாண்ட்யா GETS அமர்வுகளை தலைமையேற்று நடத்துவார். ■

---

மாநாடு

## மாநாடு கவுன்ட்-டவுன் மற்றும் ஆன்லைன் அறிவிப்புகள்

டொரண்டோவில் ஜூன் 23 லிருந்து 27 வரை நடைபெறவிருக்கின்ற ரோட்டரி சர்வதேச மாநாடு 2018ல் நீங்கள் நேரடியாக கலந்துகொண்டாலோ அல்லது வீட்டில் இருந்தபடியே அங்கு நடப்பதை அறிந்து கொள்ள நினைத்தாலோ Rotary.org மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும், மாநாட்டின் நிகழ்ச்சி குறிப்பு ஆனது முந்தைய நாள் நிகழ்ச்சிகளின் சுருக்கமான வீடியோவை வழங்குவதோடு, அன்றைய தினம் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சி பற்றிய குறிப்பையும் தரும். ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப் பூத்கள் பற்றிய சமீபத்திய செய்திகளை உங்களுக்குத் தெரிவிப்பதோடு அதில்



பங்கேற்றோரின் பேட்டிகளையும், பொது அமர்வு மற்றும் பிரிக்கப்பட்ட அமர்வுகளின் வீடியோக்களையும், பேச்சாளர்களின் வீடியோக்களையும் riconvention.org, ரோட்டரியின் ஃபேஸ்புக் பக்கத்தில், அல்லது தினமும் வெளியாகும் மாநாட்டின் இ-நியூஸ்லெட்டரில் காணவும்.

அன்றாட புதிய செய்திகள் அனைத்தும் தலைப்பு வாரியாகவும் மேம்பாடுகள் வாரியாகவும் உங்களை வந்தடையும். மாநாட்டின் அனைத்து சிறப்பம்சங்களின் பிரத்யேக புகைப்படங்களையும் உங்களால் காண முடியும்.

நீங்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறீர்கள் என்றால் உங்கள் அனுபவங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ளலாம்; மேலும் மற்ற ரொட்டேரியன்கள் பகிர்வதையும் பார்க்கலாம். மேலும் மாநாட்டுக் குழுவினர் சமீபத்தில் பகிர்ந்துகொண்டவற்றை # rotary18 இல் பார்க்கலாம்

2018 டொராண்டோ ரோட்டரி மாநாடுக்கு riconvention.org மூலம் பதிவு செய்யவும். ■



Adel Campo

# மனசுக்குள் ஆழ்ந்திடுவோம்!

பரத் மற்றும் ஷலான் சவூர்

சரோஜாவுக்குத் திடீரென்று நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டது. குடும்பம் திகைத்து இருந்தாலும் தனது தனிப்பட்ட வேலைகளை மெல்ல செய்து கொண்டிருந்தார். அந்த விஷயத்தில் யாரும் தொந்தரவு செய்யவில்லை. அன்போடு பழகினர்.

அன்னை தெரசா கூறியதைப் போல, எங்கோ இருப்பவர்கள் மீது நம்மால் அன்பு செலுத்த முடிகிறது. நமக்கு அருகில் இருப்போர் மீது அன்பு காட்ட இயல்வதில்லை. பசித் தவருக்கு ஒரு கோப்பை அரிசியைத் தருவது சுலபம். ஆனால், நம்வீட்டில் உள்ளவர்களின் தனிமை இரக்கத்தைப் போக்குவதும், வலியைத் தணிப்பதும் கடினமாக இருக்கிறது. இல்லத்தில் இருப்போர் மீது அன்பு செலுத்துங்கள். பரஸ்பர அன்பு அங்கேதான் தொடங்க வேண்டும் என்றார்.

**விமர்சகர்:** நமக்குள்ளேயே தோன்றும் எதிர்மறை எண்ணத்தை மாற்றுவதற்கு முழுமையான மனம் தேவைப்படுகிறது. சில சமயம் நம்மை நாமே நீ குண்டாக இருக்கிறாய், இதில் நீ தோற்றுவிட்டாய், இதில் லாயக்கில்லை... என்றெல்லாம் கூறிக் கொள்ளும் மனநிலை இருக்கிறது. இப்படி நம் தவறான நோக்கங்கள் மனத்தைச் சுற்றி வந்து நம்மைப் பாடாய்ப் படுத்தும். திரும்பத் திரும்ப வரும்போது, ஆரோக்கியமான, அமைதியான, அன்பான வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை ஆகிவிடுகின்றன.

மண் துகள்கள் எல்லாம் சேர்ந்து மலையாகின்றன. துளித்துளி நீர் எல்லாம் சேர்ந்து கடலாகிவிடுகின்றன. சின்ன எண்ணங்கள், வாழ்க்கையையே அமைத்துவிடுகின்றன. காலம் கழித்து அதன் விளைவு பாதிப்பு ஏற்படுத்தும் என்கிறார் வல்லுநர்.

**ஜெயிப்பவர் யார்?** இனிமேல், நல்ல விளைவுகளை நோக்கி இருப்போம். நமக்குள்ளேயே தோன்றும் எதிர்மறைக் கருத்துகளை நம்பாமல் இருக்க, பெரிதாகும் முன்பே நிராகரித்துவிடுங்கள். சாதக மானவற்றில் கவனம் செலுத்துங்கள். இப்படியெல்லாம் நடக்காது. இது நிஜமில்லை என்ற தீர்மானத்துடன் இருங்கள்.

நான் நன்றாக இருக்கிறேன் என்றோ, நான் பருமானக இருந்தால்தான் என்ன? பெரிய ஆள்தானே! என்று எண்ணிப்பாருங்கள். அவர் நம்மை விரும்பவில்லை. இருந்தால் என்ன அவர் எல்லோரிடமிருந்தும் விலகியிருப்பவர்தானே... என்று நினைத்துப் பாருங்கள்.

நான் தோல்வியடையவில்லை. வெற்றி பெறவில்லை அவ்வளவுதான்.. விரைவில் வெற்றி பெறுவேன்... என்று பார்வையை மாற்றிக் கொள்ளுங்கள்.

நான் லாயக்கில்லை என்று தோன்றும்போது, மடத்தனம், ஒவ்வொரு விஷயத்திலுமே நான் கெட்டிக்காரன்தான் என்று உறுதியாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் இருக்கும் சாதகமான திறன்களை, தகுதிகளைப் பட்டியலிட்டுக் குறித்து வையுங்கள்.

ஒரு நோட்டுப் புத்தகத்தில் உங்களது நண்பர்கள் உங்களைப் பற்றி என்னவெல்லாம் நினைக்கிறார்களோ அதையெல்லாம் எழுதச் சொல்லுங்கள். முடிந்தவரையில் நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டச் சொல்லுங்கள். அந்த நோட்டுப் புத்தகத்தைப் பின்னர் படிக்கும்போதெல்லாம் மனத்துக்கு இதமாகவும் ஆறுதலாகும் இருக்கும். உங்களது உள்மன விவாதங்கள், யூகங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள். மன இறுக்கம் விலகி, லேசாகும். நெஞ்சம் நிறைய வலிமை சேரும். இந்தப் பிரபஞ்ச உண்மையை ஆழ்ந்து சிந்தியுங்கள். நாம் ஒவ்வொருவரிடத்திலும் உயர்ந்த

பண்புகள் இருக்கின்றன. அதை உணர்வோடு கையாள வேண்டும்.
கவனத்தில் மூழ்குவோம்: மனம் மிகப் பெரிய வரப்பிரசாதம். அதற்கு அமைதியும், எதையும் எதிர்கொள்ளும் திறன் தேவை. அதில் மெல்ல மெல்ல மூழ்குங்கள். அப்படி மூச்சு விடும்போது, படிப்படியாக எண்ணங்களும், உணர்வுகளும் அமைதியாகின்றன என்று நினைத்துக் கொள்ளுங்கள். சூரியன் மறைந்து இருள் கவிந்து வருவது போல மெல்ல மெல்ல மனத்தில் அமைதி சூழ்ந்து கொள்ளும். அந்த அமைதியிலிருந்து பிரகாசமான நிலை ஏற்படும்.

கவனத்தில் ஆழ்வது என்ற பழக்கத்தை மனத்துக்குள் புத்தகத்தை ஆழ்ந்து படிப்பதன் மூலமாகவும் செய்யலாம். அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளிலும் மனத்தைச் செலுத்திப் படித்தால் போதும். மனத்துக்குள்ளேயே தோன்றும் எதிர்மறைச் சிந்தனைகளும், வெளியே ஏற்படும் நிகழ்வுகளும் நமது மனத்தை விட்டு விலகும்.

ஒரு முறை, சக்கர நாற்காலியில் இருப்பவரைப் பேட்டி கண்ட கட்டுரையைப் படித்தபோது மிகவும் நெகிழ்ந்துபோனேன். அந்தப் பேட்டியில், அந்த நபர், ஆன்மிக நூலில் மனத்தின் வலி, அவஸ்தை குறித்த பகுதியைப் படித்தபோது, மனதுக்குள் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. அவரது சதைகள் வலுவிழந்தன. அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கவனத்தில் ஆழ்தல் பயிற்சியின் மூலமாக அவரது மனம் ரொம்ப சாதாரணமாக தெம்படைந்தது. உடல்நிலை உடனே சீரடையா விட்டாலும் வலியை நீக்கியது. மனம் அமைதி, நேர்மறை எண்ணம் பெற்றது.

**மனத்தில் ரசாயன மாற்றம்:** உங்களது நேரத்தையும் உடல்நலத்தையும் சரியாக வைத்துக் கொள்ளுங்கள். எதிர்மறைச் சிந்தனை தோன்றினால், சில உடற்பயிற்சியின் மூலம் அதை வெளியேற்றுங்கள். உடம்பை அசைப்பதன் மூலம் மூளையின் ரசாயனத்தில் மாற்றம் ஏற்படுத்தும். அதன் மூலம்  மனம் லேசாகும். நேர்மறை எண்ணமும் நம்பிக்கையும் அதிகரிக்கும். மனத்தில் நல்ல உணர்வுகள் ஊற்றெடுக்கும். உலகமே பிரகாசமாகத் தோன்றும்.

வீட்டுக்குள்ளேயே இப்படி உடல் பயிற்சி செய்தால் மனம் அமைதி பெறும். வெளியே திறந்த வெளியில் நடைப் பயிற்சி செய்தால் சூரிய ஒளி பட்டு, மூளையில் சில ரசாயன மாற்றங்கள் ஏற்படும். ஏதோ புனிதப் பயணம் செய்தது போல உற்சாகமும் உயர்வும் ஏற்படும்.

யோகானந்தாவின் ஒரு யோகியின் சுய சரிதை என்ற நூலைப் படித்துக் கொண்டே தினமும் ஒன்றரை மணி நேரம் உடற்பயிற்சி, நடைப் பயிற்சியை மேற்கொண்டதால் எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டு, ஒரு புனிதப் பயணம் மேற்கொள்வது போன்ற உணர்வும் தோன்றியது.

உங்களது உள்மனம் எதிர்மறை எண்ணங்களை ஒலிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமானால், எதிர்மறை உணர்வுகளின் கவனமாக இருங்கள். காழ்ப்புணர்ச்சியை அண்டவிடாதீர்கள். நம் மீது அக்கறையுள்ள அன்பான புரிதலுடைய, உங்களது உணர்வை மதிக்கிற நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். அவர்களை மறந்துவிடாதீர்கள். அனுபவமும் மன முதிர்ச்சியும் உள்ளவர்களைக் கலந்து ஆலோசியுங்கள். எதிர்மறை எண்ணங்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். அவை நம் எதிர்மறைக்கு ஆதாராமாகிவிடும். நமது நோய்த்தடுப்பு முறையை பலவீனமாக்கிவிடும். அதன் தொடர்ச்சியாக சிறுநீரகத்தில் கற்கள் ஏற்படுவது போன்ற உபாதைகளும் தோன்றும். உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிட்டால், மன அழுத்தத்துக்கு ஆளாகி போதை பழக்கத்தை ஏற்படுத்தும்.

**சமநிலையை உருவாக்குங்கள்:** சமமற்ற மனநிலை உணர்ச்சிகளைப் பிறழச் செய்துவிடும். நமக்கு ஒழுங்கான சீரான வழக்கத்தைக் கடைப்பிடிப்பதுதான் தேவை. சரியான நேரத்தில் சீரான உணவைச் சாப்பிடுதல், சீரான உடற்பயிற்சி, செல்லப் பிராணிகள் இருந்தால் அவற்றைக் கொஞ்சுவது, இசையைக் கேட்பது, தன்னார்வத் தொண்டு புரிவது இவற்றில் ஈடுபடலாம். எதையும் எதிர்பார்க்காமல் ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவதும் மகிழ்ச்சியோடு படைப்புத் திறனைக் காட்டுவது போன்றவை நல்லது. பாடுதல், சிற்பக் கலை, நாட்டியம், ஓவியம், தோட்டக் கலை, கவிதை எழுதுவது, சமைப்பது புத்தகம் படிப்பது ஆகிய எதையாவது செய்தால் கொந்தளிக்கும் மனதை அழகாகச் சிரிக்க வைக்கும். மனதில் சமநிலை ஏற்படுத்தி, நிறைவான, இனிமையான வாழ்வை அளிக்கும்.

**மனம் லேசாக இருக்கட்டும்:** நிறைவாக, அமைதியாகவும் லேசாகவும் இருப்பதற்குத் தொடங்குங்கள். யாரும் நெருக்குதல் தராவிட்டாலும் நீங்களே உங்களுக்குள் நெருக்குதல் தருவீர்கள். மாறக, மன அழுத்தமின்றி, எவ்வளவு தூரம் செயல்பட முடியும் என்று யதார்த்தமாக யோசியுங்கள். மகிழ்ச்சியை எல்லாம் நீங்கள் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நீங்களே பாராட்டிக் கொண்டிருந்தால் போதும், மனத்துக்குள் மகிழ்ச்சி குடியேறத் தொடங்கும். மனமும் நிறைவடையும். முக்கியமானது, மகிழ்ச்சியை அனுபவிக்க முடியா விட்டால், அலுப்பு என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மீது புகார் கூறிக் கொள்ளாதீர்கள். அது மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். அதெல்லாம் போகட்டும், உங்களது எதிர்மறை உணர்வுகளுக்கு இரையாகாமல் இருந்தால், அமைதியும் சமநிலை மனதும், சீரான உடல்நிலையும் அதிகரிக்கும். மனத்தை லேசாக வைத்துக் கொண்டால், மோசமான அமைதி என்ற ஒன்று கிடையவே கிடையாது.

சுருக்கமாகச் சொன்னால், பறவைகள் மேலே மேலே பறக்க வேண்டுமானால், சுமையைக் குறைத்துக் கொள்கின்றனவே அதைப் போல்தான்!

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life, Be Simply Spiritual &You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் ஆசிரியர்கள். உடற்பயிற்சி, உடல் நலத் தகவல்களைக் கொண்ட Savur-faire  என்ற வலைப் பூவையும் எழுதி வருகின்றனர்.■

Wordsworld

# ஔரங்கசீப் கதை

சந்தியா ராவ்

*இந்த மொகலாய ஆட்சியாளரை வரலாற்றிலும் பொதுவிலும் யாரும் விரும்பவில்லை என்பதை அலசும் ஒரு புதிய புத்தகம்*

என் பெண் இசையில் ஔரங்கசீப் மாதிரி என்று என் பாட்டு டீச்சர் கூறினார். அதற்கு என்ன அர்த்தம்...? ஔரங்கசீபுக்கு இசை பிடிக்காது. இசைக்குத் தடைவிதித்தார். அதைப் போல் தனது பெண்ணுக்கும் இசையைப் பிடிக்காது என்று வருத்தப்பட்டு கூறினார் என் பாட்டு ஆசிரியை.

ஔரங்கசீப் பெயரை இழுப்பதில் பாதிதான் உண்மை எனத் தெரிகிறது, நாம் எப்படிப் பார்க்கிறோமோ அப்படித் தான் சொல்லப்படுகிறது என்று அட்ரீ ட்ரஸ்கி (Audrey Truschke) கூறுகிறார். அவர்தான் ஔரங்கசீப்: மனிதனும் மர்மமும் (Aurangzeb: The Man and the Myth) என்று ஔரங்கசீப் பற்றிய நூலை எழுதிய ஆசிரியை.

நூலின் அட்டைப்படத்தில் நாம் நினைத்திருக்கும் நரைத்த தாடியுள்ள வளைந்த தோற்றமுள்ள ஔரங்கசீப் சித்திரிக்கப்படவில்லை. இளம் சக்கரவர்த்தி படம்தான் இருக்கிறது. அத்துடன் மேதையைப் போன்ற தோற்றமும் இல்லை. நம் மனத்தை அவ்வளவாக ஈர்க்காத மனிதனைப் பற்றிய நூல் இருந்தாலும் படிக்க சுவையாக இருக்கிறது.

இப்புத்தகத்தை எடுத்தவுடன் படித்துவிட்டேன். அதன் நடைக்காக அல்ல ஆனால், படித்ததைப் பிறருக்கு எடுத்துக் கூறவே. அதற்காக ட்ரஸ்கியின் எல்லா முடிவுகளையும் ஏற்றுக் கொண்டதாக அர்த்தமில்லை. இருந்தாலும், ஔரங்கசீப் பற்றி இது வரை கூறப்பட்டு வந்த கருத்துகளை ச ற்றே புறந்தள்ளி சுவையாக எழுதியிருக்கிறார் அவர்.

ஔரங்கசீப் செயல்பட்ட விதம், ஆட்சியில் நிலைப்பதற்கும் புகழ் பெறுவதற்கும் அவர் செய்தவை எல்லாவற்றையும் புரிந்துகொண்டு ட்ரஸ்கி எழுதியிருக்கிறார். இந்த நூலில் நாம் அறியாத ஏராளமானவற்றைக் கூறிவிட்டார் என்று சொல்ல முடியாது. அத்துடன் ஔரங்கசீப் பற்றி ஏன் நாம் வேறுவிதமாக நினைக்கிறோம் என்பதும் தெளிவாகும்.

அதெல்லாம் சரி, ஔரங்கசீபுக்கும் இசைக்கும் சம்பந்தமே இல்லையா? அதைப் பற்றிய தகவல்கள் இதில் கிடைக்கின்றன. பொழுதுபோக்கும் நேரத்தில் ஔரங்கசீப் இசைக்கு நேரம் ஒதுக்கினார். பல ஆண்டுகளாக நடந்திருக்கிறது என்கிறார் நூலாசிரியை.

மொகலாய மன்னருக்கு இசை குறித்த அறிவு இருந்ததை பக்தவார் கானின் மூலம் அறிய முடிகிறது என்கிறார் ட்ரஸ்கி. பக்தவார்கான் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால், முக்கியமான வரலாற்று ஆசிரியர்.

ஃபக்கீருல்லா 1666ம் ஆண்டில் எழுதிய ராக் தர்ப்பண் (Rag Darpan) என்ற ஆய்வுக் கட்டுரையில், ஔரங்கசீப் விரும்பிய இசைக் கலைஞர்களின் பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார். முப்பதாம் வயதுகளில் ஹீராபாய் என்ற இசை-நாட்டியக் கலைஞரின் மீது ஔரங்கசீப் காதலில் விழுந்திருக்கிறார். அந்தக் காதலி ஹீராபாய் இறந்து விட்டதால், இசைக் கலையை வளர்ப்பதற்கான உதவிகளையும் ஔரங்கசீப் நிறுத்தி விட்டார். பின்னாளில் உதய்பூரி என்ற இசைக் கலைஞரை மணந்து அவர் மூலமாக காம் பக்ஷ் என்ற புதல்வனையும் பெற்றிருக்கிறார் ஔரங்கசீப்.

ட்ரஸ்கி அமெரிக்காவின் ருட்கிர்ஸ் பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆசிரியை. அவரது ஆய்வு பண்டைய மற்றும் நவீன இந்தியாவின் பண்பாட்டு, ஏகாதிபத்திய, அறிவு சார்ந்த வரலாறு (C 1500 முதல் தற்போதைய காலம் வரை) என்று அமைந்துள்ளது. அதில், சில சமயம் ஆய்வாளரின் கருத்து மேலோங்கியிருக்கிறது. எனினும் தெளிவாகவும் தர்க்க ரீதியிலும் அமைந்திருக்கிறது.

எது எப்படியோ ஔரங்கசீப் நூலைப் படித்தால், ஒரு வரலாற்றை எப்படி எழுத வேண்டும், படிக்க வேண்டும் என அறிந்துகொள்ளலாம்.


வரலாறு நமது மரபணுவில் உள்ளது என்கிறார் நூலாசிரியர். நேற்றைய நிகழ்வுகளால்தான் நாம் இன்றைக்கு இப்படி இருக்கிறோம். முன்பு நிகழ்ந்தவற்றையும் முந்தைய காலத்தினரையும் பற்றி எழுதுவதும், அதைப் படிப்பது விளக்கம் அளிக்கும்போதும் உண்மைக்கு மாறாகவே இருக்கின்றன. எழுதப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் எப்போதாவதுதான் உண்மையாக அமைந்திருக்கின்றன. அவ்வாறு எழுதப்பட்டவை. சம்பந்தப்பட்ட காலத்தின் தாக்கத்தில் அமைந்திருக்கும், அல்லது கால வரிசைப்படி அமைந்திருக்கும். வரலாற்று ஆசிரியனின் அனுபவம், அறிந்தவை ஆகியவற்றின் பாதிப்பும் இருக்கும்.

இவையெல்லாம் ஔரங்கசீப் புத்தகத்துக்கும் பொருந்துகிறது.

எனினும், ஔரங்கசீப் அவரது சூழல் காலத்தின் அடிப்படையில் ஆராய வேண்டும். நமது காலத்தின் பின்புலத்தில் இருந்தபடி மதிப்பிடக் கூடாது என்று நூலாசிரியர் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறார்.

ஔரங்கசீப்பை நாம் நேசிக்க வேண்டியதில்லை. நீதி வழங்குவதிலும் மக்களைக் காப்பதிலும் அவரது சமயம் சார்ந்த பின்னணியையும் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள் என்று நூலாசிரியை கேட்டுக் கொள்கிறார்.

ஒட்டுமொத்த மொகலாயர் வரலாறும் பாரசீகத்தில்தான் எழுதப்பட்டுள்ளது. அதுதான் ஔரங்கசீப் பேரரசின் நிர்வாக மொழியாகும். தேவை காரணமாகவோ வேறு காரணமாகவோ பல வரலாற்று ஆசிரியர்கள் அதன் மூல பாரசீக மூல வரலாற்றை நிரகாரித்துவிட்டு ஆங்கிலத்தையே சார்ந்திருந்தனர். இந்த அணுகுமுறை நூலகத்தில் தேடுவதைக் குறைத்துவிட்டது வாஸ்தவம்தான். மொகலாயர் பற்றிய பல மொழிபெயர்ப்பு நூல்களின் தரம் கேள்விக்கு உரியது. மொழிபெயர்ப்பில் தடுமாற்றங்கள், சுருக்கிய வடிவங்களில் முக்கியமானவை இழந்து போகும் நிலை. காலனி ஆதிக்க காலத்தில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் இந்தோ முஸ்லிம் அரசர்களை மோசமாகவே சித்திரித்தன. அப்போது தான் பிரிட்டிஷாருடன் ஒப்பிட்டு அவர்களை மேன்மைப்படுத்த முடியும் என்பதால்தான் என்கிறார் நூலாசிரியை. அது பிரித்தாளும் தந்திரம் ஆகும்.




ஔரங்கசீப் மத சுதந்திரம் அளித்தார். ஹிந்து வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கச் செய்திருக்கிறார். பிரிட்டாஷாரின் கொடுமையான சட்டங்களை ஒப்பிடும்போது, மத வழிபாடுகளில் மொகலாயர்கள் தாராளமாகவே செயல்பட்டிருக்கிறார்கள். அதே சமயம் நாட்டு நலனுக்கு விரோதமாகவும் ஒழுங்கீனமாகவும் உள்ள மத நடவடிக்கைகளை மொகலாய அரசர்கள் தடுத்தனர்.

இந்தச் சூழ்நிலையில் சீக்கிய குரு தேஜ் பகதூருக்கு மொகலாயர்கள் மரண தண்டனை விதித்தை கவனிக்க வேண்டும்.

தேஜ் பகதூர் மொகலாயர்களுக்கு எதிராக எழுந்தவர். ஆனால், அவரது மருமகனும் ஏழாவது சீக்கிய குருவமான ஹர் ராய் போர்க்காலத்தில் அவுரங்க சீபின் சகோதரர் தாரா ஷுகோஹுடன் கைகோத்ததால் தேஜ் பகதூர் வெற்றி பெறவில்லை என்று தோன்றுகிறது என்கிறார் நூலாசிரியை.

ஷாஜஹானின் நான்கு புதல்வர்களுமே ஆட்சியைக் கைப்பற்ற துடித்தனர். அவர்களில் ஷா ஷுஜா தந்தை நோய்வாய்ப்பட்டபோது தானே முடிசூட்டிக் கொண்டான். அபுல் ஃபவுஸ் (வெற்றியின் தந்தை), நஸ்ருதீன் (நம்பிக்கைக் காவலன்) என்றெல்லாம் ஆடம்பரமான பட்டங்களைத் தானே சூட்டிக் கொண்டான். ஔரங்கசீப்பின் இன்னொரு மகன் தாரா ஷுக்கோவை அவனது சகோதரன் முராத் பக்ஷ், அவுரங்க சீப் ஆகியோர் தாக்கினர். இப்படி வாரிசுப் போட்டிகள், படுகொலைகள், சகோதரர்களுக்கு இடையில் சண்டை என்பது மன்னர் ஆட்சிகளில் எப்போதும் நடந்து கொண்டே இருக்கின்றன.

தொடர்ந்து கூறும் நூலாசிரியை ட்ருஸ்கி, தனக்குப் பட்ட நீதி, அரசியல் அர்ப்பணிப்பு, நேர்மை நன்னடத்தை (adab மற்றும் akhlaq) ஆகிய கோட்பாடுகளில் ஔரங்கசீப் உறுதியாக இருந்தார். அவரது பக்தி, முகலாயப் பண்பாடு ஆகியவை

*எது எப்படியோ ஔரங்கசீப் நூலைப் படித்தால், ஒரு வரலாற்றை எப்படி எழுத வேண்டும், படிக்க வேண்டும் என அறிந்துகொள்ளலாம்.*

ஔரங்கசீப் பண்படுத்தின என்று தெரிகிறது என்கிறார்.

இந்தச் சூழலில் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட ராமாணயத்தின் பல பாடல்கள் அவுரங்க சீபுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஔரங்கசீப் ஊழலை ஒடுக்க அரும்பாடுபட்டார். தூய்மையான நிர்வாகத்தைப் பரவலாக்கினார். குடிப்போருக்கு சரியான தண்டனை கொடுத்தார். என்கிறார் நூலாசிரியை.

பயண நூலாசிரியர் நிக்கோலி மனுச்சியை மேற்கோள் காட்டுகிறது இந்த நூல். ஒரு முறை அவுரங்கசீப், இந்த ஆட்சியில் தானும் தலைமை காஜி அப்துல் வஹாபும்தான் குடிப்பதில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால், நான் ரகசியமாக அரசருக்குத் தெரியாமல் அப்துல் வஹாபுக்குச் சாராயம் அனுப்பியிருக்கிறேன் என்று போட்டு உடைக்கிறார்.

தண்டனை அளிக்கும்போது இரக்கமேயில்லாமல் செயல்படும் ஔரங்கசீப் ஹிந்துக்களை உயர்ந்த பதவிகளில் அமர்த்தியிருக்கிறார். தனது நாட்டைப் விரிவடையச் செய்து ஆட்சி புரிந்தவர் எப்படி தோல்வியில் இறந்திருக்க முடியும் என்கிறார் ட்ருஸ்கி.

ஔரங்கசீப் பற்றி ட்ருஸ்கி எழுதிய நூல் புத்திசாலித்தனமானது அதே சமயம் துணிவாக எழுதப்பட்டது. வலிமையான கருத்துகள் கொண்டது அதற்காகத் திணிக்கும் படி இல்லை. உற்சாகமாகப் படிக்கலாம். அடுத்த பயணத்தில் நல்ல துணையாக ஔரங்கசீப் புத்தகம் இருக்கும்.■

# Subscribe NOW!

**Annual Subscription India**

**Rs.420**




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2018 – 2019

Print version ☐ e- Version ☐

No. of copies

Rotary News (English) ☐

Rotary Samachar (Hindi) ☐

For every new member the pro-rata is Rs 35 a month.

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

Please attach the TYPED list of individual members with their complete address and PIN Code. Intimate language preference (English / Hindi) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of .............................................................................................. RI District ..............................

Name of the President/Secretary ..........................................................................................................

Address ...................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

City ........................................ State ........................................................... PIN ☐☐☐☐☐☐

STD Code ............................... Phone: Off. ..................................... Res. .............................................

Mobile ..........................................................E-mail ................................................................................

Cheque/DD No. ......................................... Dated ......................................... for Rs. ..........................................

Drawn on ..................................................................................................................................................

in favour of "ROTARY NEWS TRUST" payable at CHENNAI is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. **It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.**
3. The annual subscription for the magazine is Rs 420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay only for the remaining Rotary year at Rs 35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE** must be typed and sent along with the form and DD/cheques payable at par.
8. Copies of Semi Annual Report **SHOULD NOT** be sent as address list.
9. Language preference (English or Hindi) should be stated alongside member's name.
10. **Members, please ensure that your name is included in the Subcribers' list that your club sends us. Often, names of members who have paid their subscription, are left out from the club list.**
11. Clubs must inform *Rotary News* about reduction in number of members, if any, before or in May. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available at Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. **Clubs with subscription arrears will be notified to RI and may face possible suspension.**
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.
16. If you want to switch to *The Rotarian*, please do so. But inform us **immediately** to avoid receipt of *Rotary News*. Or else your club will have to pay for it.

# பசித்தோருக்கு உதவும் ரோட்டரி ஃப்ரிட்ஜ்

வி. முத்துக்குமரன்




*இடதுபுறத்திலிருந்து : கடலூர் மிட்டவுன் சங்கச் செயலாளர் P சந்தோஷ் குமார், தலைவர் B முருகன், DG ரமேஷ் பாபு, AG மதன்சந்த் ஜெயின் மற்றும் IPP அப்பர்சாமி பாலசுப்ரமணியன் குளிர்சாதனப்பெட்டி துவக்க விழாவில்.*

சென்னைக்குத் தெற்கே கடலூரில் பசித்தோருக்கு உதவிக்கரம் நீட்டுகிறது ரோட்டரியின் குளிர் சாதனப் பெட்டி. வீடுகளில் மிச்சம் மீதியுள்ள உணவு, பழங்கள் எல்லாம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் தேவைப்படுவோருக்கு அவை வழங்கப்படுகின்றன. இந்த அரிய பணியை கடலூர் மிட் டவுன் ரோட்டரி சங்கம் (D 2981) மேற்கொண்டுள்ளது.

ரோட்டரி சங்கம் ரூ.31 ஆயிரம் நிதியைத் திரட்டி 350 லிட்டர் கொள்ளளவுள்ள ஃப்ரிட்ஜை லாரன்ஸ் சாலையில் உள்ள தேவி காஸ் சர்வீசஸ் வளாகத்தில் வைத்திருக்கிறார்கள். இது மக்கள் நடமாட்டமுள்ள இடம், சுற்றுப்புறம் நிறைய குடியிருப்புகள் உள்ளன. எனவே, மக்கள் தங்களிடம் தேவைக்கு அதிகமாக உள்ள பழங்கள், உணவு வகைகளை வைத்திருப்போர் இங்கே சேமித்தால், பயனளிக்கும் என்கிறார் ரோட்டரி சங்கத் தலைவர் B முருகன்.

இங்கு வைக்கப்படும் உணவுப் பொருட்களை ஏழைகள், பசித் தோருக்கு வழங்கி உதவுகிறோம். இது வெற்றிகரமாகச் செயல்படுவதை அடுத்து, நகரின் பல்வேறு பகுதிகளில் ஐந்து ஃப்ரிட்ஜ்களை வாங்கி வைக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

குளிர்சாதனப் பெட்டி சேவையை மாவட்ட ஆளுநர் ரமேஷ் பாபு தொடங்கிவைத்தார். இத்தகைய சேவை புதுமையானது, ஏழைகளுக்கு உதவக் கூடியது. ரோட்டரி சங்க உறுப்பினர்கள் பாராட்டுக்கு உரியவர்கள் என்றார். இதைப் போல் மற்றவர்களும் உபரி உணவை வீணாக்காமல் சேமித்து தேவைப்படுவோருக்கு வழங்கும் பணியை மற்ற மாவட்ட ரோட்டரி சங்கத்தினரும் செயல்பட வேண்டும் என்றார்.

குளிர்சாதனப் பெட்டி அனைவரும் பயன்படுத்தும் வகையில் வைக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் பசி, பட்டினி, ஆகியவற்றைப் போக்க நீண்ட பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார் முருகன்.

## ஹோட்டல்களுடன் கைகோத்து

இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில், அப்பகுதியில் உள்ள சில உணவகங்கள், ஹோட்டல்களுடன் ஆலோசனை நடத்தப்படுகிறது. இந்த குளிர்சாதன பெட்டி எப்போதும் காலியாக இருக்கக் கூடாது... என்று அண்மைக் காலத்தில் தலைவராக இருந்த (IPP) அப்பர்சாமி பாலசுப்பிரமணியன் கூறினார்.

இந்த முயற்சியில் பங்கெடுத்துக் கொள்ள சில உணவகங்கள் முன் வந்துள்ளன. இந்த குளிர்சாதன பெட்டி காலை 7.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையில் திறந்திருக்கும் என்றார்.

இது குறித்து பொதுமக்களிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்த ரோட்டரி சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்கள் தாங்கள் மிச்சம் வைத்த உணவை அளிக்கலாம் என்றார்.

தயிர்சாதம், எலுமிச்சை சாதம் போன்றவை ஃப்ரிட்ஜ்ஜில் வைக்கப் படுகின்றன. எல்லோருக்கும் உணவு என்ற திட்டத்தைத் தொடர்ந்து செயல் படுத்த உள்ளோம். இத்திட்டம் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் உணவு வீணாகும் என்றார் பாலசுப்பிரமணியன்.■

# காசநோய் விழிப்புணர்வு பரப்புரை

ரோட்டரி செய்திக்குழு



Dr. B R *அபிஜீத் விழிப்புணர்வு முகாமை சங்கத்தலைவர்கள் சசிகாந்த், சுவர்ணா மற்றும் ஷோபா முரளி முன்னிலையில் துவக்கி வைத்தார்.*

காசநோய் நோய் விழிப்புணர்வு தினம் மார்ச் 24ம் தேதி கடைப்பிடிக்கப் படுகிறது. காசநோய் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாம்களை பெங்களூர் கப்பன் பார்க், கார்டன் சிட்டி மற்றும் மெட்ரோ, D 3190, ரோட்டரி சங்கங்கள் இணைந்து பெங்களூருவில் அண்மையில் நடத்தின.

1882ம் ஆண்டு இதே தினத்தில்தான் Dr ராபர்ட் கோச் காசநோய்க்கான பாக்ட்டீ ரியத்தைக் கண்டுபிடித்தார். காசநோயை ஒழிப்பதற்காக ரோட்டரி சங்கங்கள் விழிப்புணர்வு பிரசாரங்களை ஆண்டு தோறும் நடத்தி வருகின்றன.

ராஜராஜேஸ்வரி மருத்து வமனையைச் சேர்ந்த Dr B R அபிஜித் காச நோய் குறித்து ஒரு விரிவான விளக்கவுரையாற்றினார். காசநோயைக் கண்டறிந்து சிகிச்சை தர உதவும் வகையில், நேரடி சிகிச்சை மையங்களை (DOTS centres) ரோட்டரி சங்கங்கள் அமைப்பதற்கு அவர் உதவி வருகிறார் என்று பெங்களூர் கப்பன் பார்க் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஷோபா முரளி தெரிவித்தார்.

மருந்துகளுக்கும் கட்டுபடாமல் அதிகரித்து வரும் காசநோய் குறித்து கவலை தெரிவித்தார்.

ரோட்டரி உறுப்பினர்கள் குடிசைப்பகுதிகளுக்கு சென்று காசநோய் விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொண்டனர்.

PDG சுரேஷ் கஸ்லிவால் (D 3040), ரோட்டரி இந்தியா காசநோய் கட்டுப்பாட்டுக் கமிட்டியினர் விழிப்புணர்வு பிரசாரத்தின்போது, உடன் இருந்தனர். ■

---

# வாரணாசியில் ரோட்டரி கம்ப்யூட்டர் மையம்

வாரணாசியில் நலிந்த பிரிவினருக்காக வாரணாசி மத்திய ரோட்டரி சங்கம் (D 3120) கம்ப்யூட்டர் பயிற்சி மையத்தைத் தொடங்கியுள்ளது. ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் (Rotary India Literacy Mission) கீழ் நடத்தப்படும் இந்த மையத்தில் கிடைக்கும் பயிற்சி மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற உதவும்.

ரோட்டரி கம்ப்யூட்டர் மையத்தை மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் அனுப்பிரியா பட்டேல் தொடங்கிவைத்தார். இம்மையத்தில் அடிப்படை மற்றும் மேம்பட்ட கல்விப் பயிற்சி 2 மாதம் முதல் 6 மாதம் வரையாகும்.

இங்கு 60 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். தரமான ஆசிரியர்கள் பயிற்சி தர எண்ணிக்கை படிப்படியாக உயரும் என்று ரோட்டரி சங்கத்தின் செயலர் மனோஜ்குமார் ஜஜோடியா கூறினார். மையத்தை அமைப்பதற்காக ரோட்டரி சங்கம் ரூ.4 லட்சம் உதவியது. நகரின் மையத்தில் சிக்ரா என்ற இடத்தில் உள்ள இந்த மையத்தின் கட்டடம் ரோட்டரி சங்கத் தலைவர் ரிஷிபா சந்திரா ஜெயினுக்குச் சொந்தமானது.



கம்ப்யூட்டர் மையத்தில் 10 கணினிகளும், மேசை, நாற்காலிகள் போதிய அளவு உள்ளன. 25 முதல் 30 பேருக்குப் பயிற்சி தருவதற்கு ஏற்ப வசதிகள் விரிவுபடுத்தி, வாரணாசியின் இதர பகுதிகளிலும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்றார் ஜஜோடியா.

DG ரஞ்சீத் சிங் இந்த மையத்திற்காக சங்கத்தை பாராட்டினார்.

### வேலைவாய்ப்பு

இதில் பயிற்சி பெறும் சாந்தினி தஹலானி (18), பி.காம். முதலாண்டு மாணவி. கம்ப்யூட்டர் பயிற்சி பெற்ற பிறகு நிச்சயம் வேலை கிடைக்கும் என்றார்.

இங்கு பயிற்சி பெறுவோர் ரோட்டரி சங்க உறுப்பினர்களின் உதவியோடும் எங்களது தொடர்புகள் மூலமாகவும் வேலைவாய்ப்பு பெற நடவடிக்கை எடுக்கிறோம் என்றார் ஜஜோடியா. ■



**RC மனோரா பட்டுக்கோட்டை — D 2981**
ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் பட்டுக்கோட்டையில் உள்ள முதியோர் இல்லத்திற்கு சங்கத்தினரால் கட்டில்கள் வழங்கப்பட்டது. இந்த சங்கத்தால் ஸ்பான்சர் செய்யப்பட்ட RCC சூரப்பள்ளம் சுமார் 8000 ரூபாய் மதிப்புள்ள மளிகை சாமான்களை இல்லத்திற்கு வழங்கினார்கள்.

**RC சேலம் ஸ்மார்ட் சிட்டி — D 2982**
மாவட்ட ஆட்சியர் ரோஹினி மற்றும் அரசியல் தலைவர்கள் முன்னிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கு சுமார் 2 இலட்சம் செலவில் சுயம்வரம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் அறுபத்து மூன்று ஜோடிகளுக்கு திருமணம் நடந்தது.






**RC நாசிக் ஸ்மார்ட் சிட்டி — D 3030**
நாசிக்கில் உள்ள துளசி கண் மருத்துவமனையில், மடோ ஸ்ரீ விருதாக்ஷரம் என்ற வயது முதிர்ந்தோர் இல்லத்தில் உள்ள 11 மூத்த குடிமக்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது.

**RC மதுரை வெஸ்ட் என்ட் — D 3000**
மன வளர்ச்சி குன்றிய ஆர். ஹரி முத்து கிருஷ்ணன் என்ற இளைஞர், அவரது குறைபாடுகளையும் மீறி பேட்மிட்டன் போட்டிகளில் பதக்கம் வென்றதற்காக பாராட்டப்பட்டார். அவர் மேலும் விளையாட்டில் சிறந்து விளங்க ரொட்டேரியன்கள் என்றைக்கும் பக்கபலமாக இருப்பார்கள் என்று உறுதி அளிக்கப்பட்டது.



# சங்க சேவைகள்

### RC தப்ரா சுகர் சிட்டி — D 3053

அரசு பள்ளி மாணவர்களுக்கு, 150 பள்ளிப் பைகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள், பேனாக்கள் கல்வி உதவிப் பொருளாகவும், மின் விசிறிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டன.



### RC ஜெய்பூர் மெஜெஸ்டி — D 3054

அஹமதாபாதில் நடைபெற்ற செயற்கைக் கை பொருத்தும் முகாமில், 260 பேர் பலனடைந்தார்கள். இந்த முகாமுக்கான ஏற்பாடுகள் செய்வதில் 200க்கும் மேற்பட்ட தொண்டர்கள் ஈடுபட்டனர். DGE நீரஜ் சோகனி மற்றும் DGN ராஜேஷ் அகர்வால் முகாமில் கலந்துகொண்டார்கள்.



### RC ராஜ்கோட் மிட்டவுன் — 3060

சங்கத்தால் பராமரிக்கப்படும் நூலகத்திற்கு நிதி திரட்ட CycloFun ஏற்பாடு செய்தது. ராஜ்கோட் சைக்கிள் கிளப் உறுப்பினர்களுடன் இணைந்த 95 ரொட்டேரியன்கள், 30 ஆன்கள் மற்றும் 60 ஆனட்கள் ஆகியோரின் உதவியுடன் திட்டப்பணித் தலைவர் திவ்யேஷ் அகேரா ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 30 நலிவடைந்த மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

### RC தௌலதார் பலாம்பூர் — D 3070

ஹிமாச்சல பிரதேசத்தில் இருக்கும் சம்பா மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தை சேர்ந்த 12 வயது சிறுமிக்கு, Gift of Life திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்காக சங்கத்தால் ஸ்பான்சர் செய்யப்பட்டது.





### RC புனே கன்டோன்மென்ட் — D 3131

SCAW (Sleeping Children Around the World) திட்டத்தின் கீழ் ஆறு இடங்களில் 350 பள்ளிகளில் படிக்கும் 6,000 குழந்தைகளுக்கு தூங்குவதற்கான உபகரணங்கள் மற்றும் HV தேசாய் கண் மருத்துவமனையின் அறங்காவலர் பிபி பர்வேஸ் பில்லிமோரியா உதவியுடன் கண் மருத்துவ முகாமும் நடந்தது. கிரிஸ் ஹில்ஸ் தலைமையில் SCAW குழு நிகழ்ச்சியைப் பார்வையிட்டது.



**RC மிரா ரோடு — D 3141**

பொது மக்களின் நன்மைக்காக நீர் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்ற தலைப்பில் கலந்தாய்வு நடத்தப்பட்டது. தகுதியானவர்களுக்கு தொழில் மேன்மை மற்றும் சேவைக்கான விருதுகளையும் வழங்கி கவுரவப்படுத்தியது. குழந்தைகளுக்காக Rising Star விருதுகளையும் கொடுத்து கவுரவப்படுத்தியது.




**RC நிஜாமாபாத் — D 3150**

மாணவர்கள் பயன் பெறும் வகையில் குபன்பள்ளி கிராமத்தில் உள்ள ஜில்லா பரிஷத் உயர்நிலைப் பள்ளிக்கு 30க்கும் மேற்பட்ட டியூவல் டெஸ்க்குகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர் அசோக் ராம்ரக்யானி விருந்தினராக கலந்துக்கொண்டார்.



**RC பிதார் கோட்டை — D 3160**

சுகாதார விழிப்புணர்வு குறித்த பயிலரங்கு மற்றும் துணைச் சங்கமாகிய கல்யாண் ஹிஸ்டாரிக் சங்கம், யங் ஸ்டார் ரோட்டராக்டர்களுடன் இணைந்து அடிப்படை வாழ்க்கை ஆதரவுக்கான உதவி மற்றும் இதய இரத்தக்குழாய் இயக்கத்தை புதுப்பித்தல் குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. உதய் மருத்துவமனை மருத்துவர்கள் விரிவுரைகள் கொடுத்தனர்.



**RC முண்ட்கோட் ஹெரிடேஜ் — D 3170**

மாவட்ட ஆளுநர் ஆனந்த குல்கர்னி அவர்கள் முண்டகோட்டில் உள்ள லயோலா பள்ளி வளாகத்தில் சங்கம் நிறுவிய நாப்கின் இன்சினரேட்டரை திறந்து வைத்தார். மாணவிகளுக்கு மாதவிடாய் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வும் அளிக்கப்பட்டது.



**RC கொச்சின் குவீன் சிட்டி — D 3201**

கொச்சியில் இருந்து 450 கி.மீ., தொலைவில் உள்ள காந்தலூரில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு 8 பேர் கொண்ட குழு விஜயம் செய்து தங்கியிருப்பவர்களுக்கு துணிமணிகள், அரிசி பைகள், மளிகை சாமான்கள் மற்றும் ரூபாய் 50,000/-க்கான காசோலையும் அடையாள உதவியாக வழங்கினார்கள்.



# சங்க சேவைகள்



**RC திருநெல்வேலி — D 3212**
5000 பேர் கலந்து கொண்ட மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில் 500 பேருக்கு வேலைக்கான உத்தரவாத கடிதம் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு மக்கள் மனதில் ரோட்டரியின் மதிப்பை உயர்த்தியது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் முயற்சியை பொதுமக்கள் பாராட்டினார்கள்.



**RC வேலூர் வடக்கு — D 3231**
காட்பாடியில் உள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. Devalois பள்ளிக்கு ஒரு Intaract Charterct வழங்கப்பட்டது.



**RC பாட்னா கன்கர்பாக் — D 3250**
பாட்னாவில் உள்ள நேத்ரா நிதன் மருத்துவமனையில் Dr. ராகேஷ் குமார் அவர்களால் 50 பேருக்கு கண் புரை அறுவை சிகிக்சை செய்யப்பட்டது. போக்குவரத்து, உணவு, தங்குமிடம் மேலும் சிகிச்சைக்கு பின் மருந்துகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.



**RC ஜபல்பூர் தெற்கு — D 3261**
நலிவடைந்த பெண்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் அவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.



**RC கஸ்பா — D 3291**
ஒவ்வொரு வார கடைசியிலும் பெங்காலி வழி கல்வி கற்பிக்கும் பள்ளிகளில் படிக்கும் 20 மாணவியருக்கு கம்ப்யூட்டர் பயிற்சியும் ஆங்கிலம் பேசுவதற்கான பயிற்சியும் Literacy திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. மேலும், 200 பெண்களுக்கு இப்பயிற்சியை வழங்க திட்டமிட்டுள்ளது.

ஒருங்கிணைப்பு: V முத்துக்குமாரன்
வடிவமைப்பு: L குணசேகரன்




## ஆந்திரப் பிரதேசத்தில் TEACH திட்டம்

ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கமும் (Rotary India Literacy Mission) ஆந்திரப் பிரதேச அரசின் பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து TEACH திட்டத்தை அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் செயல்படுத்தி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வி ஆணையர் அலுவலகமும் RILM மும் இணைந்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்று நர்களைத் தயார் செய்யும்.

மேலும் அரசு மற்றும் தனியார் உதவி பெறும் பள்ளிகளுக்குத் தேவையான 45,000 மின்வழிக் கல்வி (E-learning) உபகரணங் களைத் தயாரிக்கும். முதல் கட்டமாக 5,000 பள்ளிகளுக்குப் பள்ளிக் கல்வி ஆணையரகம் அளிக்கும். அதில் 32 அங்குலம் கொண்ட டிவி திரை, ஆண்ட்ராய்டு கருவி, மாநிலக் கல்வித் திட்டத்தின் தெலுங்கில் வடிவமைக் கப்பட்ட உள்ளடக்கங்கள் ஆகியவை இடம்பெறும்.



*RILM தலைவர் சேகர் மேத்தா ஆந்திர ப்ரதேச கல்வித்துறை அமைச்சர் சீனிவாச ராவ் கண்டாவுடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டார். PDG கிஷோர் குமார் செருக்கு மாலி (இடதுபுறம்) உடன் இருக்கிறார்.*

**முதியோர் எழுத்தறிவு:** எழுத்தறிவு இல்லாத முதியோருக்கு தெலுங்கு மொழி வழியில் கல்வி அளிப்பதற்கான உள்ளீடுகளை RILM அளிக்கும். இதில், சமூகத்துக்குப் பயன்தரும் வகையில் கைத்திறன் கல்வியை தேர்ந்தெடுப்போருக்கு 15 மதிப்பெண் வழங்கப்படும்.

**மகிழ்ச்சிப் பள்ளிகள்:** RILM அரசுப் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கும். தேவையான அளவு புத்தகங்களும் வழங்கப்படும். நூலகங்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை பள்ளிக் கல்வி ஆணையரகம் வழங்கும்.

## தேசத்தை வடிவமைப்போர் விருதுகள்

சிறந்த வகையில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு 100 ரோட்டரி சங்கங்களும் 200 இன்னர்வீல் சங்கங்களும் 2017-18ம் ஆண்டில் தேசத்தை வடிவமைப்போர் விருதுகளை (Nation Builder Awards) வழங்கின. மண்டல எழுத்தறிவு இயக்க ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான ரமேஷ் அகர்வால் வழிகாட்டுதலில் ஜெயப்பூர் ரவுண்ட் டவுன் ரோட்டரி சங்கம் (D 3054) 80 பள்ளிகளைச் சேர்ந்த 80 ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கின. இவர்களைத் தேர்ந்தெடு க்கும் பணியில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 10 மாணவர்களும் தலைமை ஆசிரியர்களும் ஈடுபட்டனர். இதுவே, எட்டப்பட்ட அதிகபட்ச பள்ளிகள் எண்ணிக்கையாகும்.■

## மகிழ்ச்சிப் பள்ளிகள்

கல்கத்தா யுவிஸ் ரோட்டரி சங்கம் (D 3291) ஹூக்ளி மாவட்டத்தில் காயத்ரி ஹிந்தி வித்யாலயா பள்ளியைத் தத்தெடுத்து, மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியமைத்துள்ளது. சில பள்ளிகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. கழிவறைகள் பயன்படுத்தப் படவில்லை. குடிநீர்த் தட்டுப்பாடு, விளையாட்டு சாதனங்கள் பற்றாக்குறையும் உள்ளது. மாணவர்கள் தரையில் அமர்ந்து படிக்கிறார்கள். அதையடுத்து, ரோட்டரி சங்கம் அவற்றுக்குத் தேவையான குடிநீர்,கழிவறை வசதிகளைச் செய்து அளித்து உதவியது. அத்துடன் சுகாதாரம் குறித்து மாணவர்களிடையில் விழிப்பு ஏற்படுத்த பயிற்சிகளும் நடத்தப்பட்டன. ■

## டிஜிட்டல் வகுப்பறைகள்



RC *சாங்கிலியின் உறுப்பினர் கிஷோர் லுல்லா மகாராஷ்ட்ராவில் 32 பள்ளிகளில்* E-learning *வசதிக்கு* DG *ஆனந்த் குலகர்ணியிடம் பண உதவி கொடுத்தார்.*

RILM பாரத ஸ்டேட் வங்கி ஃபவுண்டேஷன் உதவியுடன் கர்நாடகம் (50), மகாராஷ்டிரம் (118), உத்தரப் பிரதேசம் (142) ஆகிய மூன்று மாநிலங்களிலும் மொத்தம் 310 பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகளை அமைக்கும்.

அந்தந்த மாநில மொழிகளில் மாநில கல்வித் திட்டங்களின்படி பல்லூடக உள்ளடக்கங்கள் (Multimedia content) தயாரித்து அளிக்கும். இத்துடன் எல்லாத் தகவல்களும் கொண்ட ஆன்லைன் இணயமும் வடிவமைக்கப்பட்டு ரோட்டரி எழுத்தறிவு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தை RILM, ரோட்டரி சங்கங்கள், இன்னர் வீல் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் பார்க்கலாம்.■

## நூலகங்கள்

முன்னணி பதிப்பாளர்களான ஓரியண்ட் ப்ளாக்ஸ்வான் நாடு முழுவதும் மொத்தம் ரூ.3.5 கோடி மதிப்பில் 2,54,070 ஆங்கிலப் பயிற்சி நூல்களையும் கதைப் புத்தகங்களையும் அளித்து வருகிறது. ஆர்வமுள்ள ரோட்டரி சங்கங்கள் ரூ.13,000 மதிப்பிலான புத்தகங்களை இலவசமாகப் பெறுகின்றன. ஒவ்வொரு தொடக்க, இடைநிலைக் கல்விப் பள்ளியிலும் நூலகம் அமைக்க RILM ரோட்டரி சங்கங்களுக்கு தலா 50 புத்தகங்களை வழங்கும். ரோட்டரி சங்கங்கள் புத்தகத்துக்காக தலா ரூ.2 அளிக்க வேண்டும். அதற்கு இணையாக 100 ஹிந்தி மற்றும் மாநில மொழிப் புத்தகங்களை சங்கங்கள் நூலகங்களை அமைக்க நன்கொடையாக வழங்கும். இத்திட்டம் மத்திய அரசின் இந்தியா படிக்கட்டும் (Padho Bharat) என்ற எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், RILMன் கீழ் TEACH திட்டத்தின் அங்கமாகவும் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பங்குபெற தொடர்புகொள்ள வேண்டிய இணையதளம் www.rotaryteach.org. மேலும் அறிந்துகொள்ள, happyschoolrotaryteach.org என்ற மின்னஞ்சலுக்கு எழுதலாம்.

## ஆஷா கிரண் திட்டம்

ஆஷா கிரண் திட்டத்தின் (Asha Kiran programme) கீழ் குழந்தைகளுக்கு உதவ TEACH செயலி (TEACH App) மூலமாகவோ, www.rotaryteach.org இணையதளம் மூலமாகவோ அறிந்துகொள்ளலாம். TEACH செயலியில் My Asha Kiran Child என்ற பிரிவையும் பார்க்கலாம்.

ஆஷா கிரண் திட்டத்தின் கீழ் 34,236 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 15,820 பேர் முறையான பள்ளிப் படிப்பில் இணைந்துவிட்டனர். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நன்கொடையாளரின் உதவி கிடைக்கும். ■




# ஊடகம் செய்யும் மாற்றமும் ஏற்றமும்

TCA ஸ்ரீநிவாசராகவன்

2004 முதல் 2011ம் ஆண்டு வரையில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆலோசகராகப் பணியாற்றி வந்தேன். ஒரு முறை ரிசர்வ் வங்கி அலுவலகங்கள் இருக்கும் நகரங்களுக்கெல்லாம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வோர் அலுவலகத்திலும் அந்தந்தப் பணியாளர்களைச் சந்தித்துப் பேசினேன். பத்திரிகையாளன் என்பதால், தொலைக்காட்சி உள்பட ஊடகங்களிடம் அலுவலர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வந்தேன். அப்போதுதான் இணையதளம் மெல்ல மெல்ல வந்துகொண்டிருந்தது. சமூக ஊடகங்களே இல்லை. இப்போது இருப்பது போல ஊடுருவி செய்திகளைப் போடமாட்டார்கள்.

அலுவலர்களிடம் பேசுகையில், ஊடகங்களைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். காரணம் அவர்கள் கூறுவதே நிற்கும் என்று அறிவுறுத்தினேன். ரிசர்வ் வங்கி ஆளுநர்கள் சிலர் கூறியவை எப்படி ஊடகங்களில் வெளியாயின என்றும் அதன் பின்விளைவுகள் எப்படி அவர்களுக்கு எதிராக அமைந்தன என்றும் விவரித்தேன்.

ஒருவரை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்படுவதில் உள்ள சாதுர்யம் இருப்பதைச் சுட்டிக் காட்டினேன்.

ஒன்று யாராவது கூறியதை அப்படியே மேற்கோளாக்கி தலைப்பில் போடுவார்கள். அதற்கும் செய்திக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. இதில் இரண்டு உத்தி கையாளப்படும். தலைப்பில் மட்டும் குறிப்பிடப்படும் மேற்கோள் அப்படியே சரியாகத் தான் இருக்கும். அந்தத் தலைப்பில் கூறப்பட்டது சம்பந்தமாக செய்தியின் உள்ளே ஏதும் இருக்காது. பெரும்பாலும் தலைப்பைப் பார்த்துதான் முடிவு செய்துவிடுவார்கள். உள்ளே செய்தியை முழுமையாகப் படிக்கமாட்டார்கள். அதனால், பேசியவருக்குத் தர்ம சங்கடம்தான்.

இந்திரா காந்தி படுகொலையை அடுத்து சீக்கியர் மீதான தாக்குதல் தொடர்பாக, ராஜீவ் காந்தியிடம் கேட்டபோது, பெரிய மரம் விழுந்தால், பூமி அதிரத்தான் செய்யும் என்று கூறியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன். அவர் அப்படிக் கூறியதை ஒட்டி முன்பு பேசியதை வைத்துப் பார்த்தால், சீக்கியர் மீது பழிவாங்குவதைப் போலவே இருக்காது. ஆனால், அவரது மேற்கோள் அப்படி தொனிக்க வைத்துவிட்டது.

அதைப் போலவே, 2012ம் ஆண்டில் இஸ்லாமியர் மீதான தாக்குதல் பற்றிக் கேட்டதற்கு, நரேந்திர மோடி, என் காரில் நாய்க்குட்டி சிக்கினாலும் வேதனைப்படுவேன் என்று கூறியதும் சர்ச்சையைக் கிளப்பியது.

இப்போதெல்லாம் ஃபோட்டோ ஷாப் மூலம் போலியான புகைப்படம் வீடியோ ஆகியவற்றை வைத்து மிகைப்படுத்தியோ, போலியாகவோ செய்தி ஆக்கிவிடுகிறார்கள்.

எனக்கும் ஓர் அனுபவம் உண்டு. 1982ம் ஆண்டு பன்னாட்டு நிதியத்தின் ஒழுங்குமுறையின் கீழ் இந்தியா வரும்போது, செலவினங்கள் குறித்து வெளியிட நேர்ந்தது. பொதுத் துறை நிறுவனங்கள் தங்களது உபரி நிதியை அரசிடம் செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியது.

அதைப் படித்ததும் ஒரு செய்திக் கட்டுரை எழுதினேன். அதற்கு ஆங்கிலத்தில் The Government is Broke என்று தலைப்பிட்டிருந்தேன். அதற்கு கிட்டத்தட்ட அரசு வெளிப் படையாகக் கூறிவிட்டது அல்லது போட்டு உடைத்துவிட்டது என்று பொருள். ஆனால், பிரசுரமான செய்தியின் தலைப்போ The Government is facing a Severe Ways and Means Crisis என்று வெளியாகியிருந்தது. அது அரசு கடுமையான நெருக்கடிக்கான வழியையும் பாதையையும் எதிர் கொள்கிறது என்று அமைந்திருந்தது. இத்தலைப்பு சுற்றி வளைத்துக் கூறுவதாகும். விறுவிறுப்பாக எழுதினேன். மந்தமாக வெளியானது.

தலைப்பில் எல்லா விஷமங்களையும் செய்ய முடியும். இன்னொரு விஷயம் உள்ளடக்கத்தின் அமைப்பை சாதுர்யமாக மாற்றியமைப்பது. செய்திக்கு நேர் எதிரான கருத்தை உருவாக்குவதும் உண்டு. அதை யாருமே குறை கூற முடியாது. காரணம், உள்ளது உள்ளபடிதான் வெளியாகியிருக்கும். ஆனால், அதன் வடிவமைப்புதான் லேசாக மாறியிருக்கும்.

ரிசர்வ் வங்கிக் கூட்டங்களில் ஏதாவது கூறினால், நீங்கள் அதைச் செய்திருக்கிறீர்களா...?. என்று கேட்பார்கள். நான் அவர்களிடம், நான் என்ன செய்யவேண்டும்? நீங்களே சொல்லுங்கள் என்று கேட்டுவிடுவேன்.

கருத்து இதுதான் : உங்களது தகவல்களுக்கு ஒரே ஆதாரத்தை மட்டும் நம்பியிருக்காதீர்கள். வெவ்வேறு இணையதளங்கள், தகவல்களையும் தேடி சரிபார்த்துக் கொள்ளுங்கள்.■


# செய்திச் சிதறல்கள்

## சொர்க்கத்தில் நிகழ்ந்த திருமணம்



*திருவனந்தபுரத்தில் திருநம்பி இஷான் (33) மற்றும் திருநங்கை சூர்யா (31) இருவருக்கும் சமீபத்தில் திருமணம் நிகழ்ந்த போது கேரளாவில் திருநங்கை சமூகம் முழுவதுமே மகிழ்ச்சியடைந்தது. முஸ்லீம் ஆன இஷானும், இந்துவான சூர்யாவும், சிறப்பு திருமண சட்டத்தின்படி திருமணம் செய்து கொண்டனர். குடும்பம் மற்றும் நண்பர்கள் மட்டுமல்லாமல், பல மாநிலங்களில் இருந்து பல LGBT மற்றும் உரிமை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, 2017 ல், திருநங்கை ஜோடி சுகன்யே கிருஷ்ணன் மற்றும் ஆரவ் அப்புக்குட்டன் திருமணம் செய்த நிகழ்ச்சி மாநிலத்தில் தலைப்புச் செய்தியாகியது.*

## பெயரில் என்ன இருக்கிறது?



*குழந்தை பெயர்களில் பழைமைவாதி என்று அறியப்படும் இத்தாலி, குழந்தைகளுக்கு பாலினம் சார்ந்த பெயர்களை வைக்க வேண்டும் என்ற ஜனாதிபதி ஆணையை கொண்டுள்ளது. சமீபத்தில், இத்தாலிய ஜோடி லூகா மற்றும் விட்டோரியா அவர்களின் 18 மாத வயது மகளை ப்ளு என்று பெயரிட்டபோது, நீதிமன்றம் அதை ஒரு பாரம்பரியப் பெண்ணின் பெயருக்கு மாற்றவேண்டும் அல்லது கட்டாயமாக மாற்றப்படும் என ஒரு அறிவிப்பை அவர்களுக்கு அனுப்பியது. குழந்தையின் பிறந்த முதல் நாளே, பெற்றோர்கள் அவளது பெயரை ப்ளு என முடிவு செய்தனர், ப்ளு என்றால் அழகானது, பிரகாசமானது, தனிப்பட்டது என அர்த்தம். ஆனால், 'ஆங்கில வார்த்தை ப்ளு (நிறம்) வை கொண்ட ஒரு நவீன பெயர் மற்றும் அது ஒரு நபருக்கு வைக்கக் கூடாது' என்று நீதிமன்ற அறிக்கையில் இருந்தது. இருப்பினும், பெற்றோர், நாடு மற்றும் உலகம் முழுவதும் உள்ள பல பெண்களின் பெயர் ப்ளு அல்லது வெர்டே (பசுமை) போன்ற நிறங்களின் பெயரில் உள்ளது எனக் கூறி ஆணையை எதிர்க்க திட்டமிட்டுள்ளனர்.*

## டெத் பை காபி




*பாங்காக்கின் கிட் மாய் டெத் கபே, பான மெனுவில் தள்ளுபடிக்கு பதிலாக, மூடியுடன் ஒரு சவப்பெட்டியில் ஒரு சில நிமிடங்கள் படுக்க வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் வினோதமான வித்தைகளை ஊக்குவிக்கிறது. தாய்லாந்தில் வாழும் மக்களுக்கு 'இறப்பு பற்றிய விழிப்புணர்வை' கற்பிக்க விரும்புகிறார் கபே உரிமையாளரும் சமூக சீர்திருத்தவாதியுமான வீரானட் ரோஜானப்பிரபா. அங்கு பெரும்பாலும் பௌத்தர்களே உள்ளதால் புத்த மதத்தின் போதனையான, "ஒருவர் தன் மரணத்தை பற்றி அறிந்தால், அவர் நல்லதே செய்வார்" என்பதை உணர்த்தவே அந்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. மெனுவில் எலும்புக்கூடு வடிவ சிற்றுண்டிகளும், ஆரோக்கியமற்றது எனப் பெயரிடப்பட்ட பானங்களும் இடம்பெற்றுள்ளன, மேலும் எலும்புக்கூடு வடிவில் நாற்காலியும் அமைத்துள்ளார்.*

## கருக்கலைப்பு வாக்கெடுப்புக்கு




*அயர்லாந்து நாட்டில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க கருக் கலைப்பு வாக்குப்பதிவில் Yes முகாமால் பயன்படுத்தப்படும் முக்கிய சுவரொட்டிகளில் ஒன்று, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சவிதா ஹலப்பனவர் (31) புகைப்படமாகும். தனது 17-வார கர்ப்பத்தை கலைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை ஐரிஷ் அரசியலமைப்பால் நிராகரிக்கப்பட்டதால் 2012ல் இறந்துவிட்டார். அவர் கருச்சிதைவு ஏற்பட்டு செப்டிக்ஸிமியாவால் இறந்தார். அந்நாட்டில் கருக்கலைப்பு சட்டத்தை தாராளமயமாக்க வாக் கெடுப்பு நடத்தப்படுகிறது. கத்தோலிக்க நாட்டில் கருக்கலைப்பு முற்றிலும் தடைசெய்யப்பட்டதால், மக்கள் கருவை கலைக்கும் நோக்கத்துக்காக இங்கிலாந்து அல்லது பிற நாடுகளுக்கு செல்கின்றனர். கர்நாடகத்தைச் சேர்ந்த சவிதாவின் தந்தை, தனது மகளின் படம் வரலாற்றுச் சிறப்புமிக்க, உயிர் காப்பாற்றும் வாக்கெடுப்புக்காக பயன்படுத்தப்படுவதில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.*



## தோபி காட்-க்கு சலவை இயந்திரங்கள்

*விரைவில் மும்பை மகாலக்ஷ்மியில் உள்ள 150 வருட சின்னமான தோபிகாட்டில் உள்ள துவைக்கும் கற்களுக்கு பதிலாக சலவை இயந்திரங்கள் மற்றும் இயந்திர உலர்த்திகள் நிறுவப்படும். BMC அடுத்த மூன்று ஆண்டுகளில் இதை செய்ய திட்டமிட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், 19 ஆம் நூற்றாண்டில், 2.5 ஏக்கர் பரப்பளவில் 731 வாஷிங் பென் மற்றும் துவைக்கும் கற்கள் நிறுவப்பட்டு அது துணி வெளுப்பவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஒதுக்கப்பட்டது. இன்று, இந்த இடம் ஒரு தரம் III மரபுரிமை தளமாகக் கருதப்படுகிறது மற்றும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துணிகள் தினமும் துவைக்கப்பட்டு உலர வைக்கப்படுகின்றன.*

*ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி*




Join 2018-19 RI President Barry Rassin at the 110th Rotary International Convention for a memorable week of inspiration, friendship, and fun. You'll be able to connect with people of action from around the world — and Capture the Moment forever.

Take advantage of the limited-time registration rate of US$350* from 23 to 27 June.

**REGISTER ONLINE AT RICONVENTION.ORG**

*Registration must be paid in full between 23 and 27 June 2018 to receive the US$350 rate. All rates inclusive of VAT.

Rotary | 2019 HAMBURG

**ROTARY INTERNATIONAL CONVENTION**
**HAMBURG, GERMANY 1-5 JUNE 2019**